மொழி பெயர்ப்பியல்

யாதும் ஊரே யாவரும் கேளிர்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

ச. சண்முக வேலாயுதம்

மொழிபெயர்ப்பியல்

சு. சண்முக வேலாயுதம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
(International Institute of Tamil Studies)
டி.டி.டி.ஐ. அஞ்சல், தரமணி, சென்னை-600 113.

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	—	Moḻipeyarppiyal
Author	—	S. SHANMUGA VELAYUDHAM, M.A. Research Assistant
Publishers	—	International Institute of Tamil Studies, T.T.T.I. Post. Tharamani, Madras-600 113.
Publication Number	—	111
Language	—	Tamil
Date of Publication	—	May, 1985
Edition	—	First
Paper used	—	White Printing
Size of the book	—	21 × 18 Cms.
Printing types used	—	10 Point
Number of Pages	—	xvi+124=140
Number of Copies	—	2200
Price	—	Rupees Ten only
Printers	—	Novel Art Printers Madras - 600 01[illegible]. Phone : 82731
Binding	—	Card Board
Artist	—	A S. Velusamy
Subject	—	On Translation.

அணிந்துரை

டாக்டர் ஔவை நடராசன்

வாழ்க்கையைப் பயனுடையதாக்கிச் செழுமைப்படுத்தும் அறிவுத் துறைகள் நாளும் பலவாக வளர்ந்து வருகின்றன. "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்பது ஒரு பழமொழி. "மொழிபெயர்ப்பின்றி முன்னேற்றம் இல்லை" என்பது இந்நாளைய புதுமொழி.

பல மொழிகளும் தம்பால் தேக்கி வைத்துள்ள கலைச் செல்வங்களையும் அறிவு நிதியங்களையும் மொழிபெயர்ப்பின் மூலமே பரிமாற்றம் செய்து கொண்டு உலகோர் மகிழ முடியும். பெயர்க்கப் படும் மொழிநலத்துக்கு வளமும் ஆக்கமும் கூட்டுவதால் மொழி பெயர்ப்பை மொழியாக்கம் என்றே கூறுகிறோம். மொழியாக்கத்தினால் ஒரு மொழி, வளமும் உரமும் பெறுதல் கண்கூடு.

தொல்காப்பியர் செய்யுளியலில் 30 பாகுபாடுகளைத் தமிழிலக்கிய வகையாகக் குறித்தார். இலக்கியங்களின் தோற்ற வாயில்களைச் சுட்டும் தொல்காப்பிய நூற்பா, 'தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தலோடு அவை மரபினவே' என்பதாகும். முதல் நூலுள் விரிவாகப் பரந்து கிடக்கும் பொருள்களைத் தொகுத்து வழங்குதல் ஒருவகை; முதல் நூலில் குறிப்பாகச் சுட்டப்படும் செய்திகளை விரித்தல் இரண்டாம் வகை; வேண்டுமிடங்களில் தொகுத்தும் உரிய இடங்களில் விரித்துரைத்தும் வழங்குதல் மூன்றாம் வகை; மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல் என்னும் நான்காம் வகையோ பிற மொழி நூல்களைத் தமிழில் வழங்குவதாகும். பெயர்க்கப்படும் மொழியில் இயல்புக்கேற்ப அதர்ப்பட நெறிப்பட ஒழுங்குபட மொழியாக்கம் அமையவேண்டும். மொழி வளர்ச்சிக்குரிய இலக்கிய வாயிலாகப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மொழி பெயர்ப்பைத் தமிழர் போற்றினர். எனினும் உலகோர் உணர்ந்து போற்றும் வகையில் மொழிபெயர்ப்பின் பரப்பையும் பண்பையும் பயனையும் நன்குணர்த்தும் வகையில் இந்நாளில் மொழிபெயர்ப்பியல் பற்றிய நூல்கள் பலவாகப் பெரிதும் தேவைப்படுகின்றன.

பல்கலைக் கழக நல்கைக் குழுவினர் மொழிபெயர்ப்பியலில் ஒரு பட்டய வகுப்பைப் பல்கலைக்கழகங்கள் தொடங்க வேண்டு மென்ற கருத்தை 1963-ஆம் ஆண்டிலேயே கூறியிருந்தனர். எனினும் அண்மையில்தான் பல்கலைக் கழகங்களில் மொழி பெயர்ப்பியலில் பட்டய வகுப்புக்கள் ஓரளவு தொடங்கப்பட்டுள் ளன. மொழிபெயர்ப்பாளர்க்கும் உரை பெயர்ப்பாளருக்குமென ஐந்தாண்டுக்கால அளவில் அமைந்த பயிற்சி வகுப்பு ஒன்று செரு மனியில் நடைபெறுகிறது. பல்வேறு மொழிகளைப் பழக்கத்தில் கொண்டுள்ள சுவிட்சர்லந்து, கனடா, பெல்சியம், சோவியத்து ஒன்றியம் முதலிய நாடுகள் மொழிபெயர்ப்பியலை ஆர்வத்தோடு கல்வி நிலையங்களில் ஊக்குவிக்குமுகத்தான் தங்கள் மொழிச் சிக்கலைத் தீர்த்து வருகின்றன.

மேனாட்டறிஞர்கள் பெருமளவில் மொழிபெயர்ப்புப்பற்றி நூல்கள் வெளியிட்டு வளர்த்து வருகின்றனர். தமிழில் இது வகையில் முன்னோடியாக ஒரு நூல் வெளிவருதல், மகிழ்ச்சிக் குரிய செய்தியாகும். மொழிபெயர்ப்பின் விளக்கம், வகை, நோக்கம், பயன், சிக்கல், தோற்றம், வளர்ச்சி, வரலாறு ஆகிய பல்வேறு நிலைகளில் நின்று ஆராய்ந்த செய்திகள் தக்க சான்று களோடு இந்நூலுள் தரப்பட்டுள்ளன. மொழிபெயர்ப்பியலை மாணவர் விளங்கிக் கொள்ளல் வேண்டும் என்ற கருத்தோடு இந் நூல் உருவாக்கப்பட்டுள்ளது. திட்டத்துக்குகந்த வகையில் அமைந்துள்ள பின்னிணைப்பு இதற்குச் சான்றாகும். ஆயினும் மொழிபெயர்ப்பில் நாட்டம் கொண்டார் அனைவர்க்கும் பயன் படும் முறையிலும் இந்நூல் திகழுமாறு பொதுநிலையில் எழுதிய ஆசிரியர் திறம் பாராட்டுக்குரியது.

"சொற்கள் திண்ணுரம் வாய்ந்தவை; உரைகள் அவ்வயிற்றை ஊடுருவ மாட்டா" என்றோர் கொள்கையுமுண்டு. ஆகவே, உரைகளே உணர்த்தமுடியாச் செய்திகளை மொழிபெயர்ப்பு உணர்த்துமாறு எங்ஙனே என்று சிலர் வினவுவர். கார்லைல் என்பார்க்கு செருமானியப் புலவர் கதே வரைந்த செய்தியே இதற்கு விடையாகும். "மொழிபெயர்ப்பின் குறையுடைமை பற்றிக் கூறுவார் கூறுக. அன்றாட அறிவரங்கில் மொழிபெயர்ப்புப் பணி பொருள் பொதிந்த பயன் கெழுமிய செயலாகவே மலர்ந்து வருகிறது. உலகியல் நடைமுறையில் இன்றியமையாத, பயனார்ந்த இடம் பெற்றுள்ள மொழிபெயர்ப்புப் பற்றி, மொழி பேசும் மாந்தர் அனைவரும் பேரார்வம் காட்டுதல் வேண்டும்."

தமிழில் இப்பணியைச் செய்திருக்கும் இளவல் திரு சு. சண்முக வேலாயுதம் காட்டிய உழைப்பும், கலையுணர்வும் போற்றுதற் குரியன. பொதுவாக இப்பணி பொறுமை நிரம்பியது. இளமைக்குச் சலிப்பூட்டுவது. எனினும் அயராது நின்று இதனை வரைந்த திறம் ஒருவகையான மொழியாக்கப்பணியில் ஊறிய எனக்கு உவகை தருகிறது: இந்நூலை இத்துறையில் அமைந்த கையேடு எனலாம். இப்பயனுள்ள பனுவலைத் தமிழகம் இருகை நீட்டி வரவேற்று மகிழும். இளவல் சண்முக வேலாயுதத்தின் சீரிய முயற்சிகள் சிறந்து மிக்கோங்குக.

ஒளவை நடராசன்

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்
இயக்குநர்

முன்னுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் கடந்த நான்கு ஆண்டுகளாக 'மொழிபெயர்ப்புப் பயிற்சி' பட்டய வகுப்பையும் 'சுவடியியல் பயிற்சி' பட்டய வகுப்பையும் நடத்தி வருகிறது. 'சுவடிப் பயிற்சிக்கு' என்று ஏற்கெனவே சுவடிப்பயிற்சிக் கையேடு' என்ற நூல் வெளிவந்துள்ளது. சுவடி படிக்கவும், பதிப்பிக்கவும் அந்த நூல் துணையாக அமைகிறது.

இப்போது 'மொழிபெயர்ப்பியல்' என்ற மொழிபெயர்ப்பைப் பற்றிய அறிமுக நூலாக இந்த நூல் தமிழில் வருகிறது அதோடு மொழிபெயர்ப்புப் பயிற்சி படிக்கின்ற மாணாக்கருக்குத் துணையாகும் நிலையில் பயிற்சி வினாக்களும், பாடத் திட்டங்கள் போன்றவையும் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளன. மொழி பெயர்ப்புப் பற்றி பொதுநிலையில் அறிந்துகொள்ள இந்த நூல் துணையாக அமையும்.

மொழிபெயர்ப்புப் பயிற்சி வகுப்பில் முதல் நிலை பெற்று மொழிபெயர்ப்புப் பயிற்சி உதவியாளராக இருக்கின்ற திரு. சு. சண்முக வேலாயுதம் அவர்கள் இந்த நூலைஎழுதியுள்ளார். அவரைப் பாராட்டுகிறேன். இதுபோன்ற பல நல்ல நூல்களை அவர் மொழிபெயர்ப்புத் துறைக்குத் தரவேண்டும் என்று வேண்டுகிறேன்.

இந்நூலுக்குச் சிறந்த அணிந்துரை நல்கிய தமிழ் வளர்ச்சி, பண்பாட்டுத் துறைச் செயலர் டாக்டர் ஔவை. நடராசன் அவர்கட்கு எங்கள் அன்புகலந்த நன்றியைத் தெரிவிக்கிறோம்.

இந்த நிறுவனப்பணிகள் அனைத்திற்கும் ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம் அவர்களுக்கு என்றும் நன்றி உடையேன்.

உரிய காலத்தில் இதைச் சிறப்பாக அச்சிட்டுத்தந்த நாவல் ஆர்ட் அச்சக உரிமையாளர் கவிஞர் நாரா. நாச்சியப்பன் அவர்களுக்கு மிக்க நன்றி.

15-5-1985

அன்புள்ள,
ச. வே. சுப்பிரமணியன்

என்னுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தமிழ் மொழிக்கும் அதன் வளர்ச்சிக்கும் மிகச்சிறந்த முறையிலே தொண்டாற்றி வருகின்றது. அந்த வகையிலே தமிழில் உள்ள இலக்கியங்களை உலகுக்கு அறிமுகஞ் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு செயல்பட்டு வருகின்றது. அதற்காக மாதந்தோறும் இலக்கியக் கொள்கை கருத்தரங்கை நடத்தி வருகின்றது. இவ்வகையில் இக்கருத்தரங்கக் கட்டுரைகள் ஒன்பது தொகுதிகளில் வெளிவந்துள்ளன. அதில் ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து மூன்றாம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மூன்றாம் நாள் (3-8-83) நடைபெற்ற நூற்றி ஏழாவது கருத்தரங்கில் படிக்கப்பட்ட 'மொழி பெயர்ப்பு இலக்கியம்' என்னும் கட்டுரையே இந்நூல் உருவாக அடித்தளமாயிற்று. நிறுவனம், ஒன்பது மாத கால மொழி பெயர்ப்பியல் பட்டய வகுப்பைத் தொடங்கி, கடந்த ஐந்தாண்டு காலமாக அதனை நடத்தி வருகின்றது. அந்த வகையிலே இப்பட்டய வகுப்பில் படித்து முதல் நிலையில் தேர்ச்சி பெற்றதால் மொழி பெயர்ப்பு வகுப்பில் பயிலும் மாணவர்க்குப் பயிற்றுவிக்கும் பணி எனக்கு அளிக்கப்பட்டது. அதன் காரணமாக ஒவ்வொரு இலக்கிய வகைக்கும்கொள்கைகளைக்காண வேண்டுமென்ற பெரு நோக்குகொண்ட எங்கள் நிறுவன இயக்குநர் அவர்கள் மொழிபெயர்ப்பு இலக்கியத்தின் கொள்கையைக் காணவேண்டுமென்று என்னிடம் பணித்தார். அப்பணியை நிறைவு செய்த பின், மொழிபெயர்ப்பியல் குறித்த தமிழ் நூலொன்றையும் உருவாக்கும் எண்ணத்தை அளித்தார்.

மொழிபெயர்ப்பு வகுப்புகள், இத்துறை தொடர்பான ஆங்கில நூல்களை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்ட போதிலும், மாணவர்க்குத் தமிழிலே இவ் அறிவினைத் தருவது நன்று எனும் எண்ணத்தில் இந்நூல் அமைக்கப்படுகின்றது.

மொழி பெயர்ப்பைப் பற்றி விளக்குகின்ற இந்நூலில், 'மொழி பெயர்ப்பு என்றால் என்ன' என்பதற்கு அறிஞர்களின் விளக்கத்தினை முதலில் கூறுவது தேவை என்று கருதி, 'மொழிபெயர்ப்பு-விளக்கம்' என்ற முதல் பிரிவினை அமைத்துள்ளேன். அதில் மொழி பெயர்ப்பைப் பற்றிய பொதுவான விளக்கத்தை முதலாவதாகவும்

மொழிபெயர்ப்பின் தன்மை அல்லது இயல்பினை எடுத்தியம்பு கின்ற கூற்றுகளை இரண்டாவதாகவும், மொழிபெயர்ப்பு இவ்வாறு தான் அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்புகளை மூன்றாவதாகவும் வரிசைப்படுத்தியுள்ளேன்.

"ஒரு மொழியில் இருக்கின்ற செய்திகளை அல்லது கருத்து களை வேறொரு மொழியில் பொருள் மாறுபாடு ஏற்படாதவாறு, மூலத்திலுள்ள சுவையும், தன்மையும் சற்றளவும் குறையாமல் மூலத்திலுள்ளது போன்று அமைப்பது தான் மொழிபெயர்ப்பு" என்பது சரியான விளக்கமாக அமையும். ஆனால், மொழிபெயர்ப்பு என்றால் என்ன என்பதற்கு அறிஞரிடையே இன்றுவரை முடிந்த முடிவு ஏற்படவில்லை என்றே கூற வேண்டும்.

மொழி பெயர்ப்பைப் பற்றிய சரியான விளக்கத்தைப் பெறு வதற்கு அதன் இயல்புகள் என்ன என்று ஆராய்வது நலம்பயக்கும். அந்த நிலையில், மொழி பெயர்ப்பைப் படிக்கின்ற ஒருவர், மூல நூல் எழுதப்பட்டுள்ள மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர் படிக்கும் போது ஏற்படுகின்ற உணர்வைப் பெற வேண்டும் என்பது குறிப்பிடத்தக்க பொது இயல்பாகும். சிறப்பாக வேறு இருகருத்துகளும் இயல்பினைக் கூறுகின்றன. முதலாவதாக, மொழி பெயர்ப்பு, மூலநூலில் இருந்து சுருக்கமாகவோ, விளக்க மாகவோ அமையலாம் என்று சிலரும், மற்றும் சிலர், மொழி பெயர்ப்பு சுருக்கமாக-விளக்கமாக அமையக் கூடாது என்று வேறு பட்டும் கருதுகின்றனர். இந்த இருவித கருத்துகளையும் சீர்தூக்கிப் பார்க்கும் போது, மூலநூலிலுள்ள கருத்து, மொழிபெயர்ப்பில் காணப்பட வேண்டுமென்ற நிலையில், இதனை ஏற்றுக் கொள்ள லாம்.

இதற்கு அடுத்தபடியாக, மொழிபெயர்ப்புப் பணி சிக்கலான தன்மை கொண்டது என்று பலரும் அதன் தன்மையினை எடுத்துக் கூறுகின்றனர். இவ்வாறு கருதுவதற்கு ஏதாவது ஆதாரம் உள்ளதா என்று காணும் போது, கவிதையை மொழிபெயர்ப்பதை அடிப்படையாகக் கொண்டு தான் மேற்கூறிய சிக்கல் தன்மை கூறப்படுகின்றது என்பது புலப்படுகிறது. மொழிபெயர்ப்புப் பணி சிக்கலாக அமைந்தாலும் கூட, பலரும் அப்பணியிலே ஈடுபட்டு வருவது, அதன் சிறப்பினைப் புலப்படுத்துகின்றது. மற்றைய நாட்டினரின் கலாச்சாரப் பண்புகளை அறிந்து கொள்ளவும், அவர்களோடு தொடர்பு கொள்வதற்கும் வழிவகுப்பது மொழி பெயர்ப்பின் சிறப்பாகும்.

மொழிபெயர்ப்பின் இயல்பினைப் பற்றித் தெரிந்து கொண்டதுடன் 'மொழி பெயர்ப்பு என்றால் இவ்வாறு தான் அமைய வேண்டும்' என்ற எண்ணத்தினையும் உணர வேண்டும். இதற்கு எதிர்பார்ப்பு என்ற நிலையில் சில கருத்துக்களைக் கூறலாம். மொழிபெயர்ப்பு தழுவலாகவோ, சுருக்கமாகவோ அமையலாம் என்ற கருத்தினையும் எதிர்பார்ப்பாகக் கொள்ளலாம். அத்துடன் மரபு நிலை எளிமை. மூலத்தின் தனித்துவம், மொழி பெயர்ப்பின் நடை, பொதுநிலை என்ற வகையிலும் சிந்திக்கலாம். ஒவ்வொரு மொழிக்கும் தனித்த மரபுகள் உண்டு. அதனால் மொழி பெயர்ப்பில் மரபினைப் பின்பற்ற வேண்டுவது மிகவும் தேவையான ஒன்றாகும். அந்தந்த மொழிக்குரிய மரபினை ஒட்டி அமைக்கும் போதும் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டுமென்ற நிலையில் எளிமையையும் கருதவேண்டும். சரளமான நடையும் அமைய வேண்டும். மொழிபெயர்ப்பு சாதாரண மக்களையும் சென்றடைய வேண்டும் என்பது இதன் அடிப்படையாகும். மூல நூலைப் பொறுத்தும் எளிமை, எளிமையின்மை அமையலாம். எனினும், மூலநூலின் தனித்துவத்தைப் பொறுத்தும் மொழி பெயர்ப்பு அமைய வேண்டும்.

மொழி பெயர்ப்பு மூலநூலிலிருந்து சற்று விலகினாலும் மூலநூலின் கருத்தினைக் கொண்டதாக அமைய வேண்டும். இத்தகைய பல்வேறு விளக்கங்கள், மொழிபெயர்ப்பு வழி முறையினால் வருகிறது. மொழி பெயர்ப்புப் பணி எந்தெந்த முறையில் நடைபெறுகின்றது என்பதை இரண்டாவது பிரிவான மொழி பெயர்ப்பு வகைகள் என்பது விளக்கும்.

மொழிபெயர்ப்பு வகைகளைச் சொல்லுக்குச் சொல் பெயர்த்தல், விரிவான மொழிபெயர்ப்பு, முழுமையான அல்லது சரியான மொழிபெயர்ப்பு, சுருக்கம், தழுவல், மொழியாக்கம் என்று பலவாறாகப் பலமுறையில் அமைக்கலாம். இதனோடு இன்னும் சற்றுத் தனித்திறன் தேவைப்படுகின்ற நிலையிலே, பைபிள் மொழி பெயர்ப்பு, குழந்தைகளுக்கான மொழிபெயர்ப்பு, திரைப்பட வசனங்கள் பெயர்ப்பு, கருவி மொழிபெயர்ப்பு என்பன அமைகின்றன.

சொல்லுக்குச் சொல் பெயர்த்தல் முறையானது,எப்பொழுதும் சரியாக அமையும் என்று சொல்வதற்கில்லை. மூலமொழியிலுள்ள சொல்லுக்கு இணையான மாற்று மொழிச் சொல்லால் பெயர்க்கும் முறை இது.

விரிவான பெயர்ப்பு மூலநூலின் செய்திகளை விட அதிகமான செய்திகளைத் தருகின்றது. இது ஆராய்ச்சியாளர்க்கு மிகுந்த பலனை அளிக்கும்.

முழுமையான அல்லது சரியான மொழிபெயர்ப்பு, ஒரு மொழியிலுள்ள கருத்தினை இன்னொரு மொழியில் சுருக்காது, விரிக்காது அவ்வாறே அமைத்தலாகும். இதோடு மூலநூலிலுள்ள செய்திகளைச் சுருக்கமாகத் தருவதற்கு, சுருக்கம் என்றொரு வகையை ஏற்படுத்தியுள்ளனர். இச்சுருக்கங்கள் மூலத்தைப் படிக்க வேண்டுமென்ற உணர்வினைஏற்படுத்த வேண்டும்.

தழுவல் எனும் வகையில் மூலநூலாசிரியனைவிட மொழிபெயர்ப்பாளரின் புலமையே மிகுதியாகக் கணக்கிடப்படுகிறது. மொழியாக்கம் என்பதானது, மொழி பெயர்த்துள்ள மொழியின் மரபு, மொழிபெயர்ப்பில் காணப்படலேயாகும்.

மொழிபெயர்ப்புப் பணியின் கடினத்தை நோக்குகையில் பைபிள் மொழிபெயர்ப்பு முதலிடம் வகிக்கின்றது. இது பன்னெடுங் காலமாகவே தொடர்ந்து நடைபெற்று வருகின்ற ஒன்றாகும்.

திரைப்பட வசனங்களை மொழி பெயர்க்கின்ற நிலையிலே, சப்—டைட்டிலிங், 'டப்பிங்' என்ற இருவகைகள் அமைகின்றன. இவற்றில் டப்பிங் கடினமான பணியாகும்.

இயந்திர மொழிபெயர்ப்பில் மொழியின் ஆக்கக் கூறுகளுக்கு விளக்கமளிப்பது என்பது சற்றுக் கடினமாக உள்ளது.

குழந்தைகளுக்கான மொழிபெயர்ப்பைப் பொறுத்த அளவில், குழந்தைகளின் மன உணர்வினைச் சரிவரப் புரிந்து கொண்டு அமைப்பதே சிறந்ததாக அமையும்.

இத்தகைய பல்வேறு வகைகள், வரையறையின்றி அமைந்திருந்தும், மொழிபெயர்ப்புப் பணி போற்றப்பட்டு வருகின்றது; இதற்கு இத் துறையின் பல்வகை நோக்கமும், பரந்து பட்டபயனும் காரணமாகும்.

மொழிபெயர்ப்பின் நோக்கத்தினை, பொது நோக்கம், நிறுவன நோக்கம், தனிமனித நோக்கம் என்று வகைப்படுத்தலாம். நாடுகளுக்கிடையே நட்புறவை ஏற்படுத்துவதும், உலக அளவிலே ஒற்றுமையை ஏற்படுத்துவதும், இலக்கியங்களுக்கிடையே உறவை ஏற்படுத்துவதும் பொது நோக்கத்தில் அடங்கும். நிறுவன நோக்கத்தில் ஒவ்வொரு மொழி இலக்கியத்தையும், அம்மொழி அறியா

தோர்க்கு அறிமுகஞ் செய்வித்தல் முதன்மையாகும். இதில் நேஷனல் புக் டிரஸ்ட், சாகித்திய அகாதெமி, தென்னிந்திய மொழிகள் புத்தக டிரஸ்ட் இவற்றின் பணி அடங்கும்.

தனிமனித நோக்கத்தில், மொழிபெயர்ப்பாளர்க்கு ஒரு குறிப்பிட்ட நூலின் பாலுள்ள பற்றுதான் அதிகமாக இப்பணியிலே ஈடுபட அவர்களைத் தூண்டுகிறது.

ஒரு புதிய இலக்கிய வகையை உருவாக்குகின்றதையும் மொழிபெயர்ப்பானது நோக்கமாகக் கொண்டுள்ளது. அதில் தமிழ் நாட்டில் நாவல் தோன்றியதைச் சான்றாகக் கூறலாம்.

ஒப்பிலக்கிய ஆராய்ச்சி நடை பெறுவதைத் தூண்டுவது மொழிபெயர்ப்பின் குறிப்பிடத்தக்க பயனாகும். அறிவியல் கண்டு பிடிப்புகளை அறிந்து கொள்ள மொழிபெயர்ப்பு பயன்படுகிறது. இவ்வாறாகப் பல பயன்கள் உள்ளன.

மொழிபெயர்ப்புக்கு வரன்முறை ஏற்படுத்த, அதன் அடிப்படைக் கொள்கைகளைக் காணுதல் இன்றியமையாதது. முரண்பாடு தவிர்த்தல், எளிமை, தெளிவு, விளக்கங்கள், தன்வயமாக்கல், மூலநூலாசிரியர்-மூலநூல் அறிமுகம், மொழிபெயர்ப்பு இயல்பு, இலக்கியத்தின் அடிப்படையில் அதன் கொள்கை, பிற துறைகளான, அறிவியல்துறைகள். கலைகள், மதம் போன்றவற்றில் இதன் கொள்கை எந்த வகையிலே அமையும் என்றும் சிந்திக்கலாம். இவைமட்டுமல்லாது ஒவ்வொரு ஆசிரியருக்கென்று சில தனித்த கொள்கைகள் அமைவதையும் காணமுடிகின்றது. கொள்கைகளை வகுத்தாலும் கூட, மொழிபெயர்ப்புப் பணியின் சிக்கல்களை ஆராய்ந்து பார்த்தால் இன்னும் தெளிவாகக் கொள்கைகளை வகுக்க முடியுமா என்று பார்ப்பது நலம் பயக்கும்.

மொழிபெயர்ப்புச் சிக்கல்களில், எந்த மொழிக்கும் பொருந்தக் கூடிய பொதுவான சிக்கல்கள் அமையலாம். அத்துடன் தமிழ் மொழிக்கே உரிய சிக்கல்களும் தனித்துக் கருதவேண்டியன. இதிலும் இலக்கியம் தனியாகவும், பிற துறைகள் என்ற நிலையில் அறிவியல், சட்டம் போன்றனவற்றிலுள்ள சிக்கல்கள் வேறுபடுத்தியும் நினைக்கப்பட்டுள்ளன.

அறிவியல் மொழிபெயர்ப்பில், கலைச் சொற்களுக்கு மிகவும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அங்கு, கலைச் சொற்கள் புதிதாக உருவாக்கப்படுகின்றன. சட்டத்துறையைப் பொறுத்த அளவிலும், கலைச் சொற்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன,

மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபடுகின்ற பொழுது, பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டி உள்ளது. அதில் சிலவற்றை மொழிபெயர்க்க முடியாத தன்மைகொண்டவை எனவகைப்படுத்த லாம். ஆனால் பல சிக்கல்களுக்கு அவற்றை நீக்கும் வழிமுறை காணமுடியும். மொழிபெயர்ப்புப் பணியில்சிக்கல்கள் பல இருந்தும், அது இன்றளவும் தொடர்ந்து செம்மையாக நடைபெற்று வரு கின்றது. இம்மொழிபெயர்ப்பு வரலாறு இறுதிப் பிரிவான 'மொழி பெயர்ப்பின் தோற்றம், வளர்ச்சி வரலாறு' என்ற பகுதியில் அமைகிறது.

மொழிபெயர்ப்புக் கலை மிகவும் பழமை வாய்ந்தது. மேற் கத்திய நாகரிகத்தின் சின்னமாக விளங்கிய கிரேக்க நாட்டில் அதன் அமைப்புத் தோன்றியது. முதன் முதலில் கிரேக்க மொழி யிலிருந்து லத்தீன் மொழிக்கு ஹோமருடைய ஒடிசியை, லிவியஸ் அன்றோனிக்கஸ் என்பவர் மொழிபெயர்த்தார்.

அதன் பிற்பாடு கிறிஸ்து ஆண்டின் ஆரம்பத்தில் அரேபியக் கல்வியின் வளர்ச்சியின் காரணமாகக் கிரேக்க மொழியிலிருந்து ஏராளமான மொழிபெயர்ப்புகள் தோன்றின. அரிஸ்டாட்டில், ப்ளேட்டோ போன்றோருடைய படைப்புகள் அரேபிய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன.

எட்டாம் நூற்றாண்டில் ஸ்பெயின் நாட்டின் மீது மூரிஷ் படையெடுத்தது. அதன் காரணமாக அரேபிய மொழிப் புத்த கங்கள் லத்தீன் மொழிக்கு மொழிமாற்றம் செய்யப்பட்டன. பன்னிரண்டாம் நூற்றாண்டில் டொலடோ என்னுமிடத்தில் ஜெரோட் ஆப் கிரோமனா கிரேக்க அரேபிய மொழியிலுள்ள படைப்புகளை லத்தீன் மொழிக்கு மொழி மாற்றம் செய்தார். அவர்தான் மொழிபெயர்ப்பாளரின் மூதாதையராக விளங்கினார். இந்நூற்றாண்டில் தோன்றிய நூல்கள் சமயச் சார்புடையன வாகத் திகழ்ந்தன.

இங்கிலாந்து நாட்டைப் பொறுத்த அளவில் எலிசபெத் அரசியாரின் ஆட்சிக் காலத்தில் மொழிபெயர்ப்புக் கலை தோன்றியது. ஹோமருடைய ஒடிசியும், இலியதமும் பெருமளவில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டன. தாமஸ் செல்டன், ஜான் டிரைடன், அலெக்ஸாண்டர் போப், வில்லியம் கூப்பர், அலெக்ஸாண்டர் பிரேஸர் போன்றோரும் மொழிபெயர்ப்புப் பணியிலே ஈடுபட்டனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கில மொழியில் அதிகமான படைப்புகள் மொழிபெயர்க்கப்பட்டன.

பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டில் ஷெல்லி, பைரன், லாங்பெலோ போன்ற கவிஞரெல்லாம் மொழிபெயர்ப்புப் பணியிலே ஈடுபட்டனர். உமர்கய்யாமின் ரூபயத்தை எட்வர்ட் பிட்ஸ்ஜரால்ட் மொழிபெயர்த்தார். இரண்டாம் உலகப் போருக்குப் பின், உலகத்தில் தலை சிறந்த அறிஞரான அகிலஸ். பல்சாக், சீசர், செக்கோவ், இப்சன், ப்ளேட்டோ, டால்ஸ்டாய் போன்றோருடைய படைப்புகள் ஆங்கிலத்தில் பெயர்க்கப்பட்டன. மேற்கூறிய வகையிலே மொழிபெயர்ப்பின் பொதுவான வளர்ச்சி நிலையைக் காணமுடிகிறது.

தமிழ் மொழியைப் பொறுத்த அளவில் மொழிபெயர்ப்பின் நிலையைத் தொல்காப்பியம் சுட்டுகின்றது. அதன் பிற்பாடு சங்க காலத்தில் சொல், பிறமொழிக்கதை என்ற அளவிலே மொழி பெயர்ப்புச் செய்தி தெரிகிறது. சங்கம் மருவிய காலத்தில் சொல், கதை, கருத்து என்றளவில் நடைபெற்றது.

கி. பி. ஐந்தாம் நூற்றாண்டுவரை, குறிப்புகளாக அமைந்த இப்பணி, அதன் பிற்பாடுதான் நூல் வடிவமாயிற்று. எனினும் அம்மொழிபெயர்ப்புகள் தழுவல்கள் என்ற நிலையில் அமைந்தன. பொதுவாகப் பதினான்காம் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை மொழிபெயர்ப்பு நிலையில் புராணங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஜெ. பி. பாப்ரிஷியஸ், இந்தியாவில் முதன் முதலில் தமிழில் பைபிளை மொழிபெயர்த்தார். அதன் பிற்பாடு பத்தொன்பதாம் நூற்றாண்டில் சேக்ஸ்பியர் நாடகங்கள் மொழிபெயர்க்கப் பெற்றன.

சுதந்திரத்திற்குப் பிறகு பல உலக இலக்கிய நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. இன்றைய நிலையில் நம் தமிழக அரசு மொழிபெயர்ப்புத் துறை ஒன்றை நிறுவி, மொழிபெயர்ப்புப் பணியினைச் சீரிய முறையிலே நடத்தி வருகின்றது. மேற்கூறிய நிலைகளை இப்புத்தகம் விளக்கி நிற்கின்றது. இவற்றோடு, மொழி பெயர்ப்பைப் பற்றிய நூல்கள், கட்டுரைகள் இவற்றினையும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடத்தப்படுகின்ற மொழி பெயர்ப்புப் பட்டய வகுப்பிற்கான பாடத் திட்டத்தையும், வினாத் தாள்களையும் இணைப்பாகக் கொண்டுள்ளது. இவை மொழிபெயர்ப்புத் துறை ஆர்வலர்க்கும், அறிஞர்க்கும், மாண வர்க்கும் பயன்படுமென நினைக்கிறேன்.

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே''

என்ற திருமூலர் திருமந்திரத்தினைத் தன்னுடைய வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு தமிழ்ப்பணி ஆற்றிவரும் பேராசிரியர், இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்களின் ஊக்கத்தினால் விளைந்த நூல்கள் அளவு கடந்தன. அவற்றுள் ஒன்று தான் இந்த 'மொழிபெயர்ப்பியல்' என்னும் நூல். இதன் பெருமை அனைத்தும் அவருடையதாகும். அதற்காக அவர்கட்கு நான் பெரிதும் கடப்பாடும், நன்றியும் உடையேன்.

இந்நூலாக்கத்திற்குப் பல கருத்துகள் கூறி உதவிய டாக்டர் ச. சிவகாமி, டாக்டர் அன்னிதாமசு ஆகியோர்க்கும், நிறுவன ஆய்வு அலுவலர்க்கும், தேவையான நூல்களை வழங்கிய நிறுவன நூலகர்க்கும் நன்றியுடையேன்.

நூலினை நன்முறையில் அச்சிட்டுத் தந்த நாவல் ஆர்ட் அச்சகத்தாருக்கும், கவிஞர் நாரா. நாச்சியப்பன் அவர்கட்கும் என் இதயம் கனிந்த நன்றி.

சு. சண்முக வேலாயுதம்

உள்ளே...

1, மொழி பெயர்ப்பு—விளக்கம் 1

2. மொழிபெயர்ப்பு—வகைகள் 15

3. மொழிபெயர்ப்பு—நோக்கமும் பயனும் 27

4. மொழிபெயர்ப்பு—கொள்கைகள் 47

5. மொழிபெயர்ப்புச் சிக்கல்கள் 66

6. மொழிபெயர்ப்பின் தோற்றம், வளர்ச்சி, வரலாறு 86

துணை நூற்பட்டியல் 97

பின்னிணைப்பு—

மொழிபெயர்ப்புப் பட்டய வகுப்பிற்கான பாடத்திட்டம்— 103

வினாத்தாள்— 105

சொல்லடைவு 120

1

மொழி பெயர்ப்பு - விளக்கம்

மொழி, பெயர்ப்பு எனும் இரு சொற்களின் இணைவில் தோன்றியுள்ள மொழிபெயர்ப்பிற்குப் பலரும் தங்கள் விளக்கங்களை நல்கியுள்ளனர். மொழி பெயர்ப்பாளர் தங்களுக் கெனத் தனித்த கண்ணோட்டத்துடன் மொழிபெயப்ப்புச் செய்வது போன்று அதற்குரிய விளக்கமும் தனித்த நிலையிலே காணப்படுகிறது. எனினும் ஒரு மொழியில் உள்ள கருத்தினை மற்றொரு மொழிக்கு மாற்றுதல் என்னும் அடிப்படை உணர்வில் ஒன்றுபடுகின்றனர். மொழிபெயர்ப்பைப் பற்றி அறிஞர் தரும் விளக்கத்தினை இப்பகுதியில் காணலாம்.

அறிஞர் தரும் விளக்கத்தினை அதனதன் தன்மை கொண்டு நாம் பொதுவாக மொழிபெயர்ப்பைப் பற்றிய விளக்கத்தினை முதலாவதாகவும், மொழிபெயர்ப்பின் இயல்பினை எடுத்தியம்பு கின்ற கூற்றுகளை இரண்டாவதாகவும், மொழி பெயர்ப்பு என்பது இவ்வாறுதான் அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கின்ற எதிர் பார்ப்புகளை மூன்றாவதாகவும் நோக்குதல் நலமாக அமையும்.

முதலாவதாக மொழிபெயர்ப்பைப் பற்றிய பொதுவான விளக்கங்களைப்பற்றி எண்ணுகின்ற போது நாம் அதனைப் பொது வான எண்ணங்கள் என்றும், சிறப்பான விளக்கங்கள் என்றும் இரு நிலையிலே அமைக்கலாம். மொழிபெயர்ப்பைப் பற்றிஎண்ணுகின்ற நிலையிலேயே "மொழிபெயர்ப்பு என்பது மொழிகளுக்குள்ளே போடும் பாலத்திற்கு ஒப்பாகும்"[1] என்ற ஸ்ரீஇராம தேசிகன் அவர்களின் கூற்றுத்தான் நினைவிற்கு வருகிறது. இன்னும் இந்த

1. எஸ்.என். ஸ்ரீஇராம தேசிகன், "இருமொழி இலக்கிய இன்பம். ப. 74

கூற்றினைக் கடந்து சிந்திக்கின்ற வேளையிலே சற்று விரிவான எண்ணமானது மனத்திலே முகிழ்க்கின்றது. அதாவது மூலப் படைப்பிலுள்ள எண்ணங்களை முழுவதும் இன்னொரு மொழியில் மாற்றி எழுதுவது மொழிபெயர்ப்புப் பணி என்பதே அது. மேற் கூறிய விளக்கத்தினோடு மீனாட்சி பாலகிருஷ்ணன் என்பவரின் "ஒரு மொழியின் எண்ணங்களையும், கருத்துகளையும் மற்றொரு மொழிக்கு மாற்றுகின்ற வழியாக அமைகின்றது"[2] என்பதும் ஓரளவிற்கு இதனோடு ஒப்புமை உடையது போல் தோற்ற மளிக்கிறது.

"ஒரு மொழியின்கண் உள்ள சில அறிவார்ந்த இன்பியல் மரபுகளை மற்றொரு மொழிக்கு மாற்றுவதே மொழிபெயர்ப்பின் நோக்கமாகும்"[3] என்ற கூற்று இன்னும் சற்றுத் தெளிவாக மொழி பெயர்ப்பைப் பற்றி விளக்கி நிற்கின்றது. மேற்கூறிய விளக்கத்தின் வளர்ச்சி நிலையாக "ஒரு மொழியின் கண்ணுள்ள செய்தியை வேறொரு மொழியில் பொருள் வேறுபாடின்றி—சுவையும், தன்மையுங் குன்றாமல் அப்படியே மாற்றுவதற்கே மொழி பெயர்ப்பு எனப் பெயரிடுகின்றோம்"[4] என்ற கூற்று அமைகின்றது. மேற்கூறிய இரு விளக்கங்களும் சிறப்பான முறையிலே மொழி பெயர்ப்பைப் பற்றி விளக்கி நிற்கின்றது என்று சொன்னால் மிகை யாகாது. விளக்கங்கள் இவ்வாறாகப் பரந்து, விரிந்து கொண்டே செல்கிறது. மொழிபெயர்ப்பு எனும்போதே, அதற்கான விளக்கம் பல்வகையிலே பெயர்க்கப்பட்டு வருகின்றனவோ என எண்ணம் கொள்ளச் செய்கிறது. அந்த எண்ணம் "மொழிபெயர்ப்பு, கலை யும், கைத்திறனும் அடங்கியது. அதாவது மொழியைச் சுதந்திர மாகவும், கற்பனைத் திறனோடும்; படைப்புத் திறத்தோடும்

2. "Translation as a means of conveying the thoughts and concepts of one language into another"—Meenakshi Balakrishnan. Problems of Official Translation. Proceedings of Second I.C.S. of T.S.M-1968 Fb 1971 p.117.

3. "The aim of translation is to transfer certain intellectual and aesthetic values from one language to another". Anton Popovic-The Concept of shift of Translation in Translation Analysis—"The Nature of Translation: Mouton—The Hague; Paris 1970: p.78.

4. மு. கோவிந்தராஜன்: மொழித்திறன்களும், சில சிக்கல் களும். சென்னை தேன்மொழிப் பதிப்பகம். மு.ப.டிச. 1980. ப. 213.

அமைத்து அதைச்சரியாகக் கையாளுகின்ற திறனைத் தான் மொழி பெயர்ப்பு எனக் குறிக்கிறோம்''[5] என்ற இந்தக் கூற்றினால் வந்த தின் விளைவேயாகும்.

இவ்வாறாக மொழிபெயர்ப்பு எனும் சீரிய பணியினைப் பற்றிச் சில பொது நோக்கான கருத்துகளையும், அதன் பிறபாடு அதனைச் சற்றுத் தெளிவாகச் சிறப்பு விளக்கங்கள் என்ற அடிப் படையிலும் பார்த்தோம். இந்த விளக்கங்களைப் பற்றி நினைக் கின்ற போது, பொதுவான எண்ணங்களும், சிறப்பான விளக்கங் களும் அமைந்தாலும் கூட மொழிபெயர்ப்பைப் பொறுத்த அளவில் இது தான் மொழிபெயர்ப்பு என்று ஒரு வரையறை வகுக்க முடி யுமா என்றால் முடியாது என்றே கூறவேண்டும்.

இன்றளவில் கூட இத்துறையைப் பொறுத்த மட்டில் இந் நிலைதான். இதனை மாற்ற முடியுமா என்று சிந்தித்துப் பார்க் கின்றபோது முடியாது என்பதுதான் பதிலாக அமைகிறது. ஏற்கெனவே அமைத்துள்ளது போல் பல்வேறு நிலைகளிலே மட்டும்தான் அவற்றை அடக்க முடியும். மேற்கூறிய நிலையை பார்க்கும்போது மொழி பெயர்ப்பின் தன்மையை "ஒவ்வொரு மனிதனின் மன நிலையினையும் கருத்தில் கொண்டால், மொழி பெயர்ப்பிற்கு முடிவென்பதே இருக்காது''[6] என்ற பிஷப் பேன்கிராப்ட் என்பவரின் கூற்றைத்தான் நம்மால் நினைவு கூர முடிகிறது. ஒரு மொழியில் உள்ள கருத்தினை இன்னொரு மொழிக்கு மாற்றுவது என்றளவிலே மொழிபெயர்ப்பினை விளக்குவது நலமென நினைக்கிறேன். 'ஒரு மொழியிலே சொல்லப் பட்ட, எழுதப்பட்டவற்றின் பொருளைக் கூறல்'[7] என்ற அகராதி யின் விளக்கம் இந்தக் கூற்றுக்கு உறுதுணையாக இருக்கும். இந்தக் கூற்றோடு இன்றைய நிலையில் மொழிபெயர்ப்பு எழுதப்பட்ட

---

5. "Translation is both a craft and an art, that is to say it involves an accurate and controlled manipulation of language, tempered by a degree of freedom, imagination and creativeness" I am Finlay, 'Translating'—Fp 1968 preface.
6. "If every man's humour might be followed, there would be no end of translating"—Bishop Bancroft"-Theodore Savory— Multiple Translation—in The Art of Translation, Fb. 1957, p. 132.
7. "give the meaning of (said written) in a language—Advanced Learner's Dictionary of Current English.

வார்த்தைகளை மாற்றுகின்ற பணியாகவும், பேசப்படுகின்ற வார்த்தைகளை மாற்றுவது ''வாய்வழி மொழிபெயர்ப்பு'' என்றும் பெயர் பெறுகின்றது.

மேற்கூறிய விளக்கங்களை நாம் எண்ணுகின்றபோது மொழி பெயர்ப்பின் சரியான தன்மையினை அறிந்து கொண்டால் இன்னும் சற்றுத் தெளிவாக அதனைப் பற்றி விளக்கலாம். அந்த நிலையில் மொழிபெயர்ப்பின் இயல்புகள் என்ன? அதனைப் பற்றி அறிஞரின் கருத்து என்னவாயிருக்கும்? என்றெல்லாம் சிந்திப்பது நலம் பயக்கும் என்றளவிலே அதன் இயல்பினை இப்பொழுது காணலாம். மொழிபெயர்ப்பின் தன்மை என்ற நிலையில் நாம் எண்ணும்போது, மொழி பெயர்ப்பின் பொதுவான தன்மை, அதில் ஏற்படுகின்ற இருவித கருத்துகள் என்பன பற்றிச் சிந்திக்க லாம். இவ்விதமாக சிந்திக்கும்போது பல்வேறு கருத்துகள் தோன்றுவதன் விளைவாக மொழிபெயர்ப்புப் பணியின் இயல்பினைச் சீர்தூக்கி, ஒரு முடிந்த முடிபிற்கு அதனை இட்டுச் செல்ல முயலலாம். மொழிபெயர்ப்பின் தன்மையைப் பற்றி,

''மொழிபெயர்ப்பென்பது மூலமொழியிலே அமைந்த மூலத்தினைத் தாய்மொழியாகக் கொண்டவர், வழி மொழியில் படிக்கும்போது அதே உணர்வு ஏற்பட வேண்டும்''[8] என்று பொது நிலையில் கருதப்படுகிறது. இதே போன்று ''சொல்லுக்குச் சொல் பெயர்த்தடுக்குவது மொழிபெயர்ப்பாகாது, பெயர்க்கப்பட வேண்டியது பொருளே''[9] என்ற கூற்றினையும் பொது இயல் பாகக் கூறலாம். இந்த நிலையினைத் தான் ''மொழிபெயர்ப்பே ஒரு முறையில் கடினமான இலக்கிய வேலை. அது முதல் நூல் எழுதுவதைக் காட்டிலும் அதிகமான தொல்லை கொடுப்பது, சீமை ஓட்டைப் பிரித்து விட்டுக் கீற்று வைக்கும் வேலை போன்றது. ஒரு கட்டுக் கோப்பைக் கலைத்து மற்றொரு கட்டுக் கோப்பை ஏற்றுவதில் வெற்றி கொள்ள முடியாது.

8. ''They can be summed up by saying that the translation should ideally make the same impression on a native speaker of the target language who is conversant with the subject matter of the original as the orignal did on the native speaker of the Source language''— I an F. Finlay: Translating—Teach Yourself Books : Fp 1971 p4

9. மு.கோவிந்த ராஜன்: மொழித்திறன்களும், சில சிக்கல் களும் மு. ப. டிசம்பர் 1980 ப. 215

அடிக்கு அடி நிர்ப்பந்தம் எல்லைக் கோட்டைத் தாண்டினால் மொழிபெயர்ப்பாவதில்லை. வியாக்கியானம் தூண்டாமல் வார்த்தைக்கு வார்த்தை போட்டால் கருத்து விளங்குவதில்லை, நடையும் சரளமாவதில்லை''[10] என்ற கு. ப. ராஜகோபாலனின் எண்ணமும் பொது நிலையிலே அமைகின்றதைப் பார்க்கின்றோம். பொதுநிலையில் மொழிபெயர்ப்பின் இயல்பினைப் பற்றிய விளக்கங்களில் ''எல்லா மொழிபெயர்ப்புமே ஒரு மாயைதான். அதனதன் சூழ்நிலைக்குத் தக, ஏறக்குறைய சரியாக அமைந்து, மொழிபெயர்ப்பாளரின் திறனால் மாறுபடுகின்றது. ''மாயைத் தோற்றம் முற்றிலுமாக அமைந்துள்ளதும், மரபுச் சொற்றொடர் கள் மொழிபெயர்ப்பு'' என்று அறிவிக்காமலும் இருக்குமானால் அதுவே ஒரு சிறந்த மொழிபெயர்ப்பு''[12] என்ற எண்ணத்தினை யும் சேர்த்துக் கொள்ளலாம். இம்மாதிரியாகத்தான் ''மூலமொழி அறிந்த ஒருவருக்கு எந்தவித உணர்வினை ஏற்படுத்துமோ, அது போன்று புதிய வாசகர்களுக்கு மூலநூலின் கருத்தும், உணர்வும் ஏற்படுமாறு படைக்கப்படுகின்ற ஒரு அயல் படைப்பு''[13] என்பதற் கேற்றும் பொதுநிலையில் மொழிபெயர்ப்பின் இயல்பினைச் சுட்டி நிற்கின்றது இவ்வாறாக, ''சட்டம்பிடிக்கப்பட்ட புகைப்படமே நம் கவனத்தைக் கவரும் போது முன்னால் இருக்கின்ற கண்ணாடி யைப் பற்றிப் பேசுவது போன்றது''[14] என்று மற்றொரு அறிஞர் அதன் இயல்பினைக் குறிக்கிறார்.

பொதுவாக, ஒவ்வொருத்தரும் தங்களுடைய எண்ணங் களைக் கூறிக் கொள்கின்ற நிலையினைப் பார்க்கின்றோம். இவர்

---

10. Ibid. p. 215
11. "All translation is a kind of illusion, more or less perfect according to circumstances and varying also with the skill of the translator"—Higham.
12. "Those translations are always best in which the illusion is most complete and the idiom least suggestive of translation—P.N. Appusamy.
13. "It may attempt to 'naturalize' the foreign work, substituting images that will give the readers the same idea and feelings of the original work gave native readers"—Joseph T. Shipley Dictionary of world literary terms"-Fp-1943.
14. "To talk about translation is rather like talking about the glass infront of a picture when it is the picture itself that engrosses our attention"—J. Letanan-The Art of Translation p.180

கள் கூறுவது மட்டும்தான் மொழிபெயர்ப்பின் இயல்பா? என்றால் இல்லை என்றே கூற வேண்டும். மேற்கூறிய கருத்துகள் எல்லாம் பொதுவான எண்ணங்களைத் தருகின்றபோது, மொழிபெயர்ப்பின் இயல்பைப்பற்றி அறுதியிட்டுக் கூறுகின்ற நிலையிலே இரு விதமான கருத்துகள் உலவுகின்றன. அந்த இருவிதமான கருத்துகளில், ஒரு சாரார் மொழிபெயர்ப்பு நூலில் இருந்து சுருக்கமாக, விளக்கமாக அமைய வேண்டுமென்றும், இன்னொரு சாரார் மொழிபெயர்ப்பு சுருக்கமாக, விளக்கமாக அமையக் கூடாது என்ற கருத்தினைக் கொண்டவர்களாக விளங்குகிறார்கள். அந்த வகையில் இருவருக்கும் மாற்றாக "மொழிபெயர்ப்பு இரு வகைப்படும். ஒன்று மூலமொழியிலுள்ள கருத்தினை மட்டும் சுருக்கமாகத் தருவது எனவும், சொல்லுக்குச் சொல் பொருள் கூறுவது மற்றொன்று எனவும்[15] கூறுகின்ற நிலையினைப் பார்க்கின்றோம். மூல நூலிலிருந்து மொழிபெயர்ப்பு சுருக்கமாக, விளக்கமாக அமைய வேண்டும் என்ற எண்ணத்தினை 'மொழிபெயர்ப்பு எனச் சொல்லும் போது மூலநூலுள் அமைந்த கூறுகள் அனைத்தும் இடம் பெறுமாறு எடுத்துக்கொண்ட பொருளின் கருத்தும், நுட்பமும், தெளிவும், நயமும் தோன்ற, வேண்டாதவை விடுத்தும், வேண்டுவன சேர்த்தும் சுருக்கியும், பெருக்கியும் செய்யப் பெறுவதேயாகும். இருமொழிகளின் பெருமையும் சிறப்பும் சற்றும் குறையாதவாறு ஒரு மொழியினின்றும் வேறொரு மொழிக்குத் தக்கவாறு பெயர்த்துரைத்தலே மொழிபெயர்ப்பாகும்''[16] இந்தக் கூற்றுத் தெளிவாக விளக்கி நிற்கின்றது. இதே கருத்தைத்தான் "மொழிபெயர்ப்பு எனப்படுவது ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்குச் சொல்லுக்குச் சொல்லாகப் பெயர்த்து அடுக்கி வைப்பது அன்று. தொடர்களிலுள்ள சொற்களுக்கு நேரான சொற்களைப் பெய்து தொடர்களாக்கி அமைத்து விடுவதுமன்று. உண்மையில் பெயர்த்து எழுதப்பட வேண்டியது பொருளேயாகும். எடுத்துக்கொண்ட பொருளின் கருத்தும், நுட்பமும் தெளிவும், நயமும் தோன்ற ஏற்றவாறு கூட்டியும், குறைத்தும். சுருக்கியும், விரித்தும் பெயர்த்தும் அமைப்பதே மொழிபெயர்ப்பாகும்''[17] இக்கூற்றும் ஒப்புமை காட்டுகிறது.

15. எஸ். என். ஸ்ரீ இராமதேசிகன்-இருமொழி இலக்கிய இன்பம். ப. 73,
16. மு. கோவிந்தராஜன்: மொழித்திறன்களும், சில சிக்கல்களும். ப. 214
17. மு. கணபதிப்பிள்ளை 'மொழிபெயர்ப்பும், சொல்லாக்கமும்,

மேற்கூறிய எண்ணங்கள் மொழிபெயர்ப்புகள் மூல நூலில் இருந்து சுருக்கமாகவும், விளக்கமாகவும் அமைய வேண்டும் என்ற எண்ணங் கொண்டவர்களின் சிந்தனையாகும். ஆனால் இதற்கு மாறு பாடாக மொழிபெயர்ப்புகள் "மூலத்தோடு நாம் ஏதாவது கூட்டியோ, குறைத்தோ, மொழிபெயர்த்தால் அது மொழி பெயர்ப்பு என்று அழைக்கப் பெறாமல் சுருக்கம், தழுவல், என்றே அழைக்கப் பெறும்"[18] என்ற கூற்றினை பின்லே என்னுமறிஞர் கூறுகிறார். இதே கருத்தினை "எந்த ஒரு மொழிபெயர்ப்பும் தழுவ லாகத்தான் அமையும்"[19] என்ற கூற்றும் வெளிப்படுத்துகின்றது. "மூலத்தின் சூழலையும், நடையையும் அவ்வாறே கொண்டிலங்க வேண்டும்"[20] மொழிபெயர்ப்பு என்ற கூற்றும் சுருக்கமாக, விளக்க மாக அமையக்கூடாது என்ற எண்ணத்தினை வெளிக்காட்டி நிற்கின்றது. "தெரியாத ஒரு மொழியிலுள்ள படைப்பை நன்றாக அறிந்த ஒரு மொழிக்குப் படைக்கும்பொழுது, இப்படைப்பு மற்ற மொழிகளில் மொழிபெயர்க்கத்தகுந்த ஒரு மூலமாக அமைந்து, சில சமயங்களில் இம்மாற்றங்களினால் பாதிப்படைகின்றன"[21] என்ற கூற்றும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. மேற்கூறிய இருவித கருத்துகளை எண்ணிப் பார்க்கின்ற பொழுது மூலநூலின் கருத்து மொழி பெயர்ப்பில் அமைந்திருக்க வேண்டும் என்ற அடிப்படை யில் இரு சாராரும் ஒன்றுபடுகின்றனர். ஆனால் மூலநூலை மொழிபெயர்க்கின்ற வழி முறைகளிலே இருவரும் வேறுபடு கின்றனர்.

மொழிபெயர்ப்பு என்பது நூலிலிருந்து சுருக்கமாக அமைய வேண்டுமா? அல்லது சுருக்கமாக அமையக் கூடாதா? என்ற கேள்விகளை இணைத்துப் பார்க்கும் போது, மூல நூலின் கருத்து மொழிபெயர்ப்பில் இறங்கியிருத்தல் நலம் பயக்கும் என்றடிப்

---

18. If the Translation does either of these things, then it is no longer a translation, but moves into the sphere of thesummary, precis, version"—Ian Finlay-Translating'—P.2
19. Every translation is inevitably an adaptation". Joseph T. Shipley—Dictionary of World Literary terms"—p. 342.
20. A good transltion is that it should capture the style and atmosphere of the original"-Ian F. Finlay, Translating-p.91
21. Ibid p-72

படையில் மொழிபெயர்ப்பு சுருக்கமாக அமைந்தாலும் பரவாயில்லை, அமையாவிட்டாலும் பரவாயில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

மேற்கூறிய இரு மாறுபட்ட கருத்துகள் மட்டுமல்லாது மொழிபெயர்ப்புப் பணி மிகவும் சிக்கலானது; அதனால் அப்பணி கடினம் என்று ஒரு சாராரும், மொழிபெயர்ப்புப் பணி சிக்கலான பணியே அல்ல என்று இன்னொரு சாராரும் கருதுகின்ற நிலையினைக் காண்கிறோம். இந்த இருசாரார்களின் கருத்துகளிலே "எந்த ஒரு மொழிபெயர்ப்பும், அதன் கருத்தினை, கவர்ச்சியினை எடுத்துச் சொல்ல முடியாது." மொழி பெயர்ப்பு என்பது வெள்ளி யினாலான வேலைப் பாட்டில் தங்க நிற ஆப்பிளை அமைத்தல்போன்றது"[22] என்ற கூற்று மொழிபெயர்ப்புப் பணி சிக்கல் நிறைந்த பணி என்ற எண்ணத்தின் வெளிப்பாடே. அதே கருத்தைத்தான் ஆங்கில நாவலாசிரியையான வெர்ஜீனியா உல்ப் "கிரேக்க இலக்கியங்களை மொழிபெயர்ப்பில் படிப்பது என்பது பயனற்றது: மொழிபெயர்ப்பாளர்களால் ஒரு தெளிவற்ற இணைகளையே தரமுடியும்"[23] என்பாரின் இக்கூற்று மெய்ப் பித்து நிற்கின்றது. இதே போன்றுதான் "மொழிபெயர்ப்பில் மூலத்தின் சுவையை எந்த அளவிற்குத் தரமுடியும் என்று கூற முடியாது"[24] என்பது மொழிபெயர்ப்பின் பணியின் கடினத்தைச் சுட்டிநிற்கின்றது. அடுத்து நாம் மொழிபெயர்ப்புப் பணி ஒரு, சிக்கலற்ற பணி என்று கருதுவாரின் எண்ணங்களைப் பார்க்கலாம். அந்த வகையில் "எந்த ஒரு மொழிபெயர்ப்பும் அறை கூவலாக வும், தொடர்பு சாதனப் பயிற்சியாகவும் செயல்படுகின்றது"[25] என்ற கருத்து கருதுதற்குரியது. பின்லே என்னும் அறிஞரும் 'ஒரே நல்லபகுதியின் கெட்ட மொழிபெயர்ப்புகளை ஒப்பிட்டுப் பார்த்தால் மொழிபெயர்ப்புப் பணி ஒரு கைத்திறனைவிட சிறந்த

---

22. "No Translation can bring or convey an idea of its charming effect. It is truly an apple of gold in a net work of silver"-Dr. Grant-
23. "It is useless to read Greek in translations, translators can but offer us a vague equivalent"-Virgina Wolf-"Translating the Classics"-The Art of Translation"-Fp 1952-p 60
24. ராஜேந்திரக் குமார்-தமிழில் சரஸ்வதி ராம்னாத்-"இந்திச் சிறுகதைகள்" (முன்னுரை)-பக்கம்-12
25. Translation is a challenge and an exercise in communication"

பணி என அறியலாம்''[26] என்று மொழிபெயர்ப்புப் பணியின் சிறப்பினைத் தெளிவாகக் காட்டுகின்றார். மொழிபெயர்ப்புப் பணி சிக்கலானது என்று ஒரு சாராரும்; சிக்கலற்றது என்று இன்னொரு சாராரும் கருதுகின்ற வேளையிலே இதைப் பற்றி பொதுவாகச் சிலரின் எண்ணத்தினை அறிந்துகொண்டால் மொழி பெயர்ப்புப் பணியைப் பற்றி நாம் தெரிந்துகொள்ள அது வழி வகுக்கும். இந்த அடிப்படையிலே ஏதாவது விளக்கங்கள் கிடைக்கப் பெறுகின்றனவா என்று பார்த்தபோது "மூலநூல் நேரடியாகவும், மறைமுகமாகவும், சரளமாகவும், மகிழ்ச்சியாக வும், சோம்பலாகவும், கம்பீரமாகவும் கம்பீரமற்றும் காணப்படும்' மொழிபெயர்ப்பு, மொழிபெயர்ப்பாளனின் திறனைப்பொறுத்து இதில் ஏதாவது ஒன்றாக அமையும்''[27] என்ற கூற்று இரண்டிற் கும் பொதுவான எண்ணமாக விளங்கியதைக் காணமுடிகிறது.

"மொழிபெயர்ப்பைப் பொறுத்த அளவில் கருத்துகள் மட்டு மல்ல, அதன் நடையும் மிகவும் முக்கியம் வாய்ந்தது''[28] என்பது சிலரின் கணிப்பாக அமைகின்றது. இதே போன்றுதான் தாகூரும் 'மொழிபெயர்ப்புப் பணி திருப்தியுறாதது—அதுமற்றொருவரைக் கொண்டு தன் முதுகைச் சொறியச் செய்வது போன்றதொரு செயல்''[29] என்று தன் எண்ணத்தினை வெளிக்காட்டி நிற்கின் றார்.

நாம் மேற்கூறிய எண்ணங்களைச் சிந்தித்துப் பார்க்கின்ற பொழுது மொழிபெயர்ப்பு ஒரு சிக்கலான பணி என்று கருது வோர், கவிதை மொழிபெயர்ப்பினை எண்ணித்தான் அவ்வாறு கருதுகின்றார்களோ என்று எண்ண வேண்டி உள்ளது. அதே நிலையில் மொழிபெயர்ப்புப் பணி சிக்கலற்ற பணி என்று

---

26. "A comparison between a poor and good translation of the same text will very quickly reveal that the translation is very much more than a pure craft"- Ian F. Finlay Translating-p. 5
27. The writing of the original author may be blunt or subtle, hesitant or fluent, sober or cheerful, magestic or paltry: and the translation may be any of these according to the wit and skill of the translator"—Theodore Savory The Art of Translation.
28. "In the translation of all forms of writing in which the manner is atleast as important as the matter— T.S. p. 105
29. Translation is never satisfing-It is like asking some one else to Problems of Translation Scratch your back p.5

கருதுவோர் கவிதையைக் கவிதையாகவும் மொழிபெயர்க்கலாம் அல்லது உரைநடையாகவும் மொழிபெயர்க்கலாம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் கருதினார்களோ என்று எண்ணவேண்டி உள்ளது. நாம் இந்த மேற்கூறிய இருவேறு கருத்துகளோடு மொழிபெயர்ப்புப் பற்றிய பொதுவான சிலரின் எண்ணங்களைச் சிந்தித்துப் பார்க்கின்றபொழுது, மொழிபெயர்ப்புப்பணி சிக்கலான பணி என்று தெரிந்தாலும்கூட அப்பணியிலே ஈடுபடவேண்டும் என்று நினைப்பதில் தவறில்லை என்றே தோன்றுகிறது. ஏனென்றால் பொதுவாக மொழிபெயர்ப்பு ஒரு பயனுள்ள பணி என்பதில் சந்தேகமில்லை. மற்றைய நாட்டினரின் கலாச்சாரப் பண்புகளை அறிந்து கொள்ளுதல்; மற்றைய நாட்டினரைப்பற்றிய பொதுவான அறிவு, இவைகளோடு ஒருவரின் தாய் மொழியல்லாத மொழிக்கு மாற்றம் செய்யின் அதனால் அம்மொழியின் அமைப்பினை அறிந்துகொள்ள அது ஒரு பாலமாக அமைகிறது என்றளவிலே பின்லேயின் கருத்தினை நாம் ஏற்க வேண்டி உள்ளது.[30]

மொழிபெயர்ப்பின் இயல்பினைப் பற்றி அறிந்த நாம், மொழிபெயர்ப்பு என்றால் இவ்வாறுதான் அமையவேண்டும் என்ற கருத்தினை வளர்த்துக்கொள்வதற்கு இது வழிவகுக்கும் என்று சொல்லலாம். மொழிபெயர்ப்பின் இயல்பைப்பற்றி ஒருவர் சுருக்கமாக அமைக்கலாம் என்றும், இன்னொருவர் சுருக்கமாக அமைக்க கூடாது என்றும் மற்றும் சிலர் சிக்கலான பணி என்றும், இன்னும் சிலர் சிக்கலற்ற பணி என்றும் கூறுகின்ற வேளையில், இதற்கென ஒரு கொள்கையை ஏன் வகுக்கக் கூடாது என்ற சிந்தனையில் எழுந்ததுதான் எதிர்பார்ப்பு என்ற தலைப்பிலே அமைந்த இச்சிறு பகுதி.

எதிர்பார்ப்பு என்றளவிலே இந்தந்த வகையில் மொழிபெயர்ப்பு அமையவேண்டும் என்ற கருத்துதான் நம் எண்ணத்திலே உதிக்கிறது. மொழிபெயர்ப்பின் தன்மையைப் பற்றி அறிந்த நாம், அதனையும் நாம் ஏன் ஒரு எதிர்பார்ப்பாகக் கொள்ளக் கூடாது என்று சிந்தனை செய்யத் தூண்டுகிறது. மொழிபெயர்ப்பு தழுவலாகவோ, சுருக்கமாகவோ அமையலாம் என்று கருதுகின்ற

30. Translating into a foreign language can be and is an excellent exercise for testing one's understanding of the structure of that foreign language'—Ian F.Finlay -Translating-p.6

வரின் கருத்தினையும் நாம் எதிர்பார்ப்பாகக் கொள்ளுவதில் தவறில்லை. இந்த நிலையிலே அணுகுகின்ற பொழுது மொழி பெயர்ப்பின் இயல்பும் ஒரு எதிர்பார்ப்பாக அமைகின்றது. இன்றைய காலத்தைப் பொறுத்த அளவில் ''நல்ல மொழி பெயர்ப்புகள் நம் காலத்தின் முக்கிய தேவைகளில் ஒன்றாக''[31] விளங்குகின்றன என்பதில் ஐயமில்லை. இதனால் மொழி பெயர்ப்பைப் பற்றிய எதிர்பார்ப்பும் சிறந்ததுதான். அதனை (1) மரபுநிலை, (2) எளிமை, (3) மூலத்தின் தனித்துவம், (4 மொழி பெயர்ப்பின் நடை, (5) பொதுநிலை என்ற வகையிலே அமைக் கலாம்.

மொழியைப் பொறுத்த அளவிலே சொற்களானது பன்னெடுங்காலமாக ஒரு மரபினைப் பின்பற்றிப் பயன்படுத்தப் பட்டு வருகின்றது என்பது எல்லோரும் அறிந்ததே. இதனை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது, அந்தந்த மொழிக் குரிய மரபுகள் மொழிபெயர்ப்பில் பேணப்படுதல் வேண்டும் என்பதை எவரும் மறுக்க இயலாது. இதனை எண்ணும்போது ''ஒவ்வொரு மொழிக்கும் அந்தந்த மொழிக்குரிய தனித்த மரபுகள் சில இருக்கின்றன. செய்யுளானாலும், உரைநடையானா லும், பாட்டானாலும், பேச்சானாலும், விளம்பரமானாலும், செய்தியானாலும் இந்த மரபு என்னும் சுருதி இல்லாவிட்டால் அது நல்ல நடையில் அமைந்தது என்று சொல்லமுடியாது''[32] என்ற கருத்தும், இந்த அடிப்படையிலே சிந்திக்கின்ற பொழுது இன்னும் சற்று விரிவான எண்ணத்தினை ''இரு மொழிகளிலும் ஆன்றோர் வாக்குகளின் கருத்தொப்புமை காணப்படுமிடங் களிலெல்லாம், அவற்றை எடுத்துக் காட்டியும், படிப் பவர்களின் மனத்திற்கு இன்பந்தரத் தக்கவாறு பழமொழி களுள் இவைவன பொருத்தியும், மேற்கோள்களுடன் மொழிபெயர்ப்பதே விரும்பத் தக்கதாம். அங்ஙனம் மொழி பெயர்க்கும்போது மொழிக்குரிய மொழி மரபு பேணப்படுதல் வேண்டும்''[33] என்ற கருத்தினை விதைக்கிறது. இவ்வாறாக

---

31. ''Good translations are one of the vital necessities of our time'' F.L. Lucas Translation in Industry 'The Art of Translation p.166
32. மு. கோவிந்தராஜன்—மொழித்திறன்களும் சில சிக்கல் களும் ப. 213.
33. மேற்படி ப. 231.

மொழி பெயர்க்கின்ற நிலையிலே நாம் அந்தந்த மொழிக்குரிய மரபினைப் பேணிக் காப்பாற்றினால் கூட அது மற்றவர்களுக்குப் புரிய வேண்டும் என்ற அடிப்படையில் எளிமையை, மொழி பெயர்ப்பில் எதிர்பார்க்கின்றோம். இந்த வகையில் பெரும் பாலோனர் எதிர் பார்ப்பது எளிமை என்பதாக அமைகிறது.

மொழிபெயர்ப்பில் எளிமை என்று சொன்ன உடனேயே "ஒரு மொழி பெயர்ப்பு அறிஞர்களுக்கு மட்டுமல்ல சாதாரண மக்களுக்கும் புரியக் கூடியதாய் இருக்கவேண்டும்"[34] என்ற எண்ணமே நினைவுக்கு வருகிறது. எளிமை என்னும் போது வழக்கிலிருக்கின்ற சொற்களை மொழிபெயர்ப்பில் பயன்படுத்துதல் என்றளவிலே அதனை அமைக்கலாம். மொழிபெயர்ப்பின் குறிக்கோள் ஒரு மொழியில் உள்ள செய்தியை மற்றொரு மொழியினருக்கு அறிமுகஞ் செய்து வைத்தல் என்றளவிலே எளிமை என்பது மிகவும் வேண்டற்பாலது.

இந்த எளிமையானது மூலநூலைப் பொறுத்தும் அமையலாம். அந்த நிலையில் மூல நூல் எவ்விதம் அமைகிறதோ அவ்வாறே மொழி பெயர்ப்பும் இருக்கவேண்டும் என்ற கருத்தினை "மூலநூலின் ஆற்றொழுக்கான நடை, அந்த நடையில் உள்ள எளிமை, இனிமை, கம்பீரம், பொருள் வளம் முதலியன கூடிய மட்டில் மொழிபெயர்ப்பில் இருக்க வேண்டும்".[35] இதே போன்று தான் "மூலப்படைப்பைப் போன்று ஒரு மொழி பெயர்ப்பும் எளிமையாக அமையவேண்டும்"[36] என்ற கூற்றும் மூலத்தின் தனித்தன்மையினைப் பொறுத்து மொழிபெயர்ப்பும் அமையும் என்று கூறி நிற்கின்றது. மொழிபெயர்ப்பு என்றாலே ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்குக் கருத்தினைப் பெயர்த்தல் என்றடிப்படையில் மூலநூலின் முக்கியத்துவம் எல்லோரும் அறிந்ததே. அதனால் "மூல நூல் எந்த அளவு அதன் வாசகர்

---

34. மேற்படி ப. 226.
35. மேற்படி ப. 217.
36. "A translation should have all the ease of original composition' Woodhouselee- The Art of Translation p.43

களைப் பாதித்திருக்குமோ அதே அளவு ஒரு மொழிபெயர்ப்பு என்பது நம்மைப் பாதிக்கச் செய்யவேண்டும்''[37] என்று கருது கின்றனர் சிலர். இன்னும் சிலர்

1. மொழிபெயர்ப்பென்பது மூல நூலின் சொற்களைக் கொண்டிலங்க வேண்டும்;
2. மொழிபெயர்ப்பு ஒரு மூல நூல் போன்று தோற்றமளிக்க வேண்டும்;
3. ஒரு மொழிபெயர்ப்பு மூல நூலின் நடையினைப் பிரதி பலிக்க வேண்டும்;
4. மொழிபெயர்ப்பு மூலநூலை ஒட்டிய காலத்தைச் சார்ந்தது போல் தோற்றமளிக்க வேண்டும்''[38] என்றும் கருதுகின்ற நிலையை உணர முடிகின்றது.

இதற்கு மாறாக,

''மொழிபெயர்ப்பென்பது மூலத்தின் எண்ணத்தினை வழங்க வேண்டும்,''

''மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழிபெயர்ப்பு போன்றும் தோற்றமளிக்க வேண்டும்'' என்றும்

''ஒரு மொழிபெயர்ப்பு மொழிபெயர்ப்பாளரின் காலத்தை ஒட்டியதாக இருக்கவேண்டும்''[39] என்றும் மறுத்து உரைக் கின்றனர் சிலர். ஏன் இந்த வேறுபாடான எண்ணங்கள், கருத்து கள், சிந்தனைகள்? என்றால் இதற்குக் காரணம் அவரவர்கள் தனிப்பட்ட எண்ணங்கள் தான் என்று கூற வேண்டியுள்ளது. மேற்கூறிய கூற்றுகளை எண்ணிப்பார்க்கும்போது மொழிபெயர்ப் பென்பது மூலத்தின் எண்ணத்தினை வழங்க வேண்டும் என்றும், மூலநூல் போன்று தோற்றமளிக்க வேண்டும் என்றும், ஒரு மொழி பெயர்ப்பு மூலநூலின் நடையினை ஓரளவுக்குப் பெற்றிருக்க வேண் டும் என்றும் இருந்தால் நன்றாக இருக்குமா என்றால், மூலநூலின் காலத்தை ஒட்டி அமைத்தால் இன்று படிப்போருக்குப் புரிகின்ற நிலையிலே அமைத்தால் நலம்பயக்கும் என்ற முடிவுக்கு வரலாம். இந்த மேற்கூறிய கருத்துகளோடு ''மொழிபெயர்ப்பு மூலத்துக்கு

37. That translation should affect us in the the same way as the original may be supposed to have affected its first reader's—Ibid. p.44
38. Theodore Savory—The Art of Translation p.50
39. Ibid—p.50

உண்மையாக இருக்கவேண்டும். மொழி பெயர்ப்பு மூலத்தின் தழுவலாகவோ, கலப்படமாகவோ மாறிவிடக்கூடாது. மூலத்தின் பொதுபாவம் மொழிபெயர்ப்பில் இறங்கவேண்டும்"[40] என்றும் "மூலநூலின் எல்லாக் கூறுகளும் மறைந்து இன்னொரு மூலம் அந்த இடத்திலே தோன்றவேண்டும். ஆனால் இடையில் ஏற்பட்ட மாற்றத்தின் எவ்வித அறிகுறியும் இருக்கக்கூடாது"[41] என்ற இரு வேறு கருத்துகளின் கூட்டாக மொழிபெயர்ப்பு அமையவேண்டும் என்று மற்றொரு சாரார் நினைக்கின்றனர். மூலநூலிற்குச் சற்றும் விலகாமலும், படிப்பதற்குச் சரளமாக அமைகின்ற முறையிலே மொழிபெயர்ப்பு அமைய வேண்டும். இந்த எண்ணம் மொழி பெயர்ப்பின் நடையைப் பொறுத்த அளவிலே ஒரு தெளிவான எண்ணத்தினைத் தோற்றுவிக்கின்றது. ஆனால் "ஒரு மொழி பெயர்ப்பு. மொழிபெயர்ப்பாளரின் நடையினைப் பெற்றிருக்க வேண்டும்"[43] என்று மொழிபெயர்ப்பின் நடையைப்பற்றி கருத்தினைத்தாங்கி நிற்பது கூடாது.

இந்த சிந்தனையெல்லாம் விடுத்து மொழிபெயர்ப்பைப் பற்றி பொது நிலையில் எண்ணிப் பார்க்கின்ற போது "ஒரு மொழி பெயர்ப்பு மூல நூலிலிருந்து விலகியும் அதே நேரத்தில் மூலநூலின் புத்துணர்வையும் கொண்டிலங்க வேண்டும்"[44] என்றும் "பொது வாக மொழிபெயர்ப்பு என்று சொல்லத்தக்கது மூலநூலின் உணர் வினை அப்படியே பிரதிபலிக்க வேண்டும். அதோடு மூலத்திலிருக் கின்றதைக் கூட்டாமலும், அதே நேரத்தில் குறைக்காமலும் இருக்கவேண்டும்"[45] என்றும் நாம் இதற்கு ஒருமுடிபாகக் கொள்ள லாம்.

---

40. எஸ். மகராஜன்—"Studies in Arts and Sciences"-ப97
41. 'All traces of the original text should as it were disappear and a new original appear in its plaee, without there being and sign of intermediate process of transition"—Ian Filay Translating p.1
43. 'A Translation should possess the style of the translator' Theodore Savory-The Art of Translation p. 50
44. 'That a translation should be able to pass itself off as an original and show all the freshness of original composition' Ibid. p. 52
45. மு. கணபதிப்பிள்ளை- 'மொழிபெயர்ப்பும் சொல்லாக்கமும்' மு.ப. 1967, ப. 11

2

மொழி பெயர்ப்பு - வகைகள்

மொழிபெயர்ப்பை வகைப்படுத்துகின்ற நிலையிலே ஒவ்வொருவரும் அவரவரின் கருத்திற்கிணங்க செயல்படுகின்ற தன்மையினைக் காண்கிறோம். அதில் திரு. காழி. சிவ. கண்ணுசாமி அவர்கள் மொழிபெயர்க்கின்ற பணியினை "மொழி மாற்று" எனவும் "மொழி பெயர்ப்பு" எனவும் இருவகைப்படும் என வகை செய்து கீழ்க்கண்டவாறு அவற்றை விளக்குகிறார்.

"மொழிமாற்றல் என்பது எடுத்துக்கொண்ட ஒரு தொடரையோ, பகுதியையோ அதன் கண்ணுள்ள ஒவ்வொரு சொல்லளவாயெடுத்து ஏற்றதோர் மறுமொழிச் சொல் அமைத்து மாற்றித் தருதலாகும். இம்முறையினால் எடுத்துக்கொண்ட பொருளின் நுட்பமும் நயமும் கெடாது மொழி மாற்றப்படுதல் அரிதினுமரிதாகும்."[1] இதற்கு மாறாக மொழிபெயர்ப்பு என்பது எடுத்துக் கொண்ட பொருளினை தெள்ளத் தெளிவென விளக்கிச் சிறிது கூட்டியும் குறைத்தும், விரித்தும் அமைக்கலாம் என்பது பலர் கருத்தாக விளங்குவதைப் பார்க்கலாம் என்பதும் அவர் கருத்தாக அமைகின்றது.

மேற்கூறிய கருத்துகள் அமைந்த போதிலும் "மொழி பெயர்ப்பு என்பது ஒரு கலை. அதை 'மொழிபெயர்ப்பு' என்று

---

1. பேராசிரியர் மு. கோவிந்தராஜன் மொழித் திறன்களும் சில சிக்கல்களும் தேன்மொழிப் பதிப்பகம் 10/18, பீட்டர்ஸ் காலனி, இராயப்பேட்டை, சென்னை-14, பக்கம் 231.

குறிப்பதை விட 'மொழி ஆக்கம்' என்று குறிப்பதே சிறந்தது''² என்று சிலர் கருதுகிறார்கள் என்றும் ஆனால் அவைகள் இரண்டும் வேறுபட்டன என்று திரு மா. சண்முகசுப்பிரமணியம் வகைப் படுத்துகிறார். மொழிபெயர்ப்புப் பணியைக் கைக்கொள்ளுகின்ற விதத்தைப் பொறுத்து அதனை வகைப்படுத்தலாம். அதாவது எந்த முறையில் மொழிபெயர்ப்புச் செய்கின்றோமோ அதனடிப் படையில் வகைப்படுத்துவது நலம் பயக்கும். அந்த வகையில் 1. சொல்லுக்குச் சொல் பெயர்த்தல் (Metaphrase Translation and Literal Translation, 2. விரிவான மொழிபெயர்ப்பு (Amplifi -cation) 3. முழுமையான அல்லது சரியான மொழிபெயர்ப்பு, (Close or Accurate Translation) 4. சுருக்கம் (Parahrase or abridgement) 5. தழுவல் (adaptation), 6. மொழியாக்கம் (Transcreation) என்று அமைக்கலாம். மேற்கூறிய வகைகளோடு, இன்னும் சற்றுத் தனித்திறன் கொண்ட நிலைகளிலே மொழி பெயர்ப்புப் பணியை வகைப்படுத்தலாம். பைபிள் மொழிபெயர்ப்பு குழந்தைகளுக்கான மொழிபெயர்ப்பு, திரைப்பட வசனங்கள் பெயர்ப்பு, கருவி மொழிபெயர்ப்பு என்பவை அவை.

1. சொல்லுக்குச் சொல் பெயர்த்தல்

மூலமொழியிலுள்ள சொல்லுக்கு இணையான மாற்று மொழிச் சொல்லால் பெயர்க்கும் முறையைத் தான் சொல்லுக்குச் சொல் பெயர்த்தல் என்கிறோம். ஆனால் இம்முறையைக் கடைப் பிடித்து அமைக்கப்படுகின்ற மொழிபெயர்ப்பு எல்லாச் சமயங் களிலும் சரியான மொழிபெயர்ப்பாக அமையுமா என்று சொன் னால் அமையாது என்று தான் கூற வேண்டும். இம்மாதிரியான மொழிபெயர்ப்பை உண்மையான மொழிபெயர்ப்பு என்று யாரும் கருதுவதில்லை ஆனால் சில இடங்களில் இம்முறை சரியான மொழிபெயர்ப்பாக அமைகின்றதையும் காணமுடிகின்றது. சான்றாகப் பாரதிதாசனின் கவிதை நூலான 'அழகின் சிரிப்பு' என் பதை என ''Smile of Beauty'' என ஆங்கிலத்தில் பெயர்க்கலாம். அதனால் மொழி பெயர்ப்பு ஒன்றும் கெட்டுவிடாது. ஆனால் இம்முறை மரபுச்சொற்றொடர்களை மொழிபெயர்க்கப் புகும் போது ஒரு தடையாக அமைகின்ற நிலையையும் காண்கிறோம்.

2. மா. சண்முக சுப்பிரமணியன் 'மொழிபெயர்ப்பும் மொழி யாக்கமும்' ''புத்தக நண்பன்'' தென்மொழிகள் புத்தக டிரஸ்ட், 441. பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை-10.

உதாரணமாக ஆங்கில மரபுச் சொற்றொடர் கொண்ட வாக்கியமான 'He kicked the bucket' என்பதை அவன் 'வாளியை எட்டி உதைத்தான்' என்று சொல்லுக்குச் சொல் பெயர்த்தால், அம்மரபுச் சொல் குறிக்கின்ற அல்லது தருகின்ற உணர்வு கிடைப்பதில்லை. மேற்கூறிய வாக்கியத்தை 'அவன் இறந்துபோனான்' என்று மொழி பெயர்த்தால் தான் அது மூல வாக்கியத்தின் கருத்தினைக் குறிப்பதாக அமையும். ஆனால் மொழிப் பெயர்ப்பைப் பொறுத்த அளவில் இதுவும் ஒருவகையாக அமைகின்றது.

2. விரிவான மொழிபெயர்ப்பு (Amplification)

மூலமொழி நூலின் செய்திகளை விட அதிகமான செய்திகளை, இப்பெயர்ப்பு நூலிற்கு ஏற்றவாறு கூறுகின்றதைத் தான் விரிவான மொழிபெயர்ப்பு என்று சொல்கிறோம். இம்முறையில் சில மொழிபெயர்ப்பு நூல்களில் தேவையற்ற செய்திகளைச் சேர்க்கின்ற நிலையைக் காண முடிகின்றது. ஆனால் பெரும்பாலும் மூலநூலின் கருத்தோடு, முக்கியமாகத் தேவைப்படுகின்ற கருத்துகளையும் எடுத்துக் கூறுகின்ற நிலையைத் தான் காண முடிகின்றது. இதற்கு, "அபிநயங்களை மட்டுமே கூறும் இந்நூலுக்கு முற்சேர்ப்பாகவும் பிற்சேர்ப்பாகவும் பல இன்றியமையாச் செய்திகள் 'மகாபரத சூடாமணி' என்னும் நூலிலிருந்து தேர்ந்தெடுத்துக் கூறப்பட்டுள்ளன."[3] என்ற அபிநயதர்ப்பணம் என்ற நாட்டியக் கலை மொழிபெயர்ப்பு நூலின் முகவுரை கூற்று சான்றாக அமைகின்றது.

இது மட்டுமல்லாது, வி. எஸ். வி இராகவன் எழுதிய 'மெகஸ்தனீஸ்' என்னும் நூலில் கூட "இந்நூலில் வரும் வரலாற்றுத் தொடர்பான பகுதிகளுக்கு, வரலாற்றில் புகழ்மிக்க பலருடைய நூல்களிலிருந்து ஆங்காங்கே மேற்கோள்கள் காட்டப் பட்டுள்ளன. தமிழ் இலக்கியங்களிலிருந்தும் ஆங்காங்கே பொருத்தமான ஒப்புமைப் பகுதிகளும் சேர்க்கப்பட்டுள்ளன."[4] என்ற பதிப்பு கூற்றின்படி நதியின் பெயர்கள் ஊர், நாடு இவைகளின் பெயராயிற்று என்ற வரலாற்று உண்மையினைக் கூறுகின்ற

3. வீரராகவையன் 'அபிநயதர்ப்பணம்' மு. ப. 1957, முகவுரை V
4. வி எஸ். வி. இராகவன் 'மெகஸ்தனீஸ்'—மணிவாசகர் நூலகம். மு. ப, பிப் 1978. ப. 81

வேளையிலே "காரியாற்றுக் கொண்ட காவல் வெண்குடை" என்று மணிமேகலை, சிறைக் கோட்டப் பகுதியில் 126ஆவது வரி காரி நாட்டினைப் பற்றிக் கூறுகின்றது என்ற செய்தியையும் குறிக்கின்றது சான்றாகின்றது. இதனோடு "காவிரி நதி ஓடிய நாடே காவிரி நாடு என்றும், அதன் தலைநகரம் காவிரிப் பூம்பட்டினம் என்றும் வழங்கப்பட்டு வந்தது"[5] என்றும்

"வான் பொய்ப்பினும் தான் பொய்யா
மலைத் தலைய கடற் காவிரி." —(பட்டினப் பாலை: 5 6)
"காவிரிபுரக்கு நாடு கிழவோனே"
(பொருநராற்றுப்படை: 248)

என்றும் அமைகின்றது. இதனை விரிவான மொழிப்பெயர்ப்பிற்குத் தக்க சான்றாகக் கொள்ளலாம்.

3. முழுமையான அல்லது சரியான- மொழி பெயர்ப்பு

மொழிபெயர்ப்பு எனும் போதே அது முழுமையான அல்லது சரியான மொழிபெயர்ப்பு என்றே பொருள்படுகின்றது. முழுமை யான அல்லது சரியான மொழிபெயர்ப்பு என்றால் ஒரு மொழியில் அமைந்துள்ள கருத்தினை முழுமையாக இன்னொரு மொழி யினருக்கு மாற்றி அமைக்கின்ற பணியினைத் தான் குறிப்பிடுதல் உண்டு. ஆனால் மொழி பெயர்ப்புப் பணியில் ஈடுபடும்பொழுது எல்லோருக்கும் எழுகின்ற பிரச்சினை மொழிபெயர்ப்பில் இன்றியமையாதது எது? மொழிபெயர்க்கப் பெறும் சொற்களின் வடிவமா? ஒலி வடிவமா? சொற்றொடர் அமைப்பா? அல்லது அவைகளில் உள்ளடங்கிய கருத்தா? என்பதாகும் இதற்கு நாம் கருத்திற்கு முதலிடம் கொடுப்பதே சிறந்தது எனக் கூறுவதில் எந்தவித ஐயப்பாடுமில்லை- அது தான் சரியான மொழிபெயர்ப் பாக அமையும். ஜேம்ஸ் ஆலன் என்னும் ஆங்கில அறிஞரின் 'As a man thinketh' என்ற நூலில்

"Thought in the mind hath made us. What we are
By thought was wrought and built. If a man's mind
Hath evil thoughts, pain comes on him as comes
The Wheel the OX behind......If one endure

5. மேற்படி நூல் ப. 81.

In purity of thought, Joy follows him
As his own shadow—Sure"[6]

என்ற பாடல் வரிகள் இடம் பெறுகின்றன. மேற்கூறிய நூலைத் தமிழில் 'மனம் போல் வாழ்வு'' என்று விடுதலைத் தியாகி வ. உ. சி அவர்கள் பெயர்த்துள்ளார்கள். அந்தப் பாடல்

''மனமெனும் நினைப்பே நமையாக்கியது
நினைப்பால் நாம் நம் நிலையை உற்றனம்
ஒருவர் நினைப்பு கருமறம் பற்றிடின்
எருதுபின் உருளைபோல் வரும் தனி துன்பமே
ஒருவன் நினைப்புத் திருஅறம் பற்றிடின்
தன்நிழல் போல் மன்னும் இன்பமே!''[7]

இவ்வாறு பெயர்க்கப்பட்டிருக்கிறது. இதனை நாம் முழுமையான அல்லது சரியான மொழிபெயர்ப்பிற்குச் சான்றாக்கலாம்.

4. சுருக்கம் (Paraphrase or abridgement)

மூலநூலிலுள்ள செய்திகளை முழுமையாக மொழி பெயர்க்காமல், அதனைச் சுருக்கமாகத் தருகின்ற நிலைக்குத் தான் 'சுருக்கம்' எனப் பெயரிடுகின்றோம். மேற்கூறிய வகை யானது கவிதை வடிவிலேயோ, உரைநடை வடிவிலேயோ அமை கின்றது. இச்சுருக்கங்கள் செய்யுள் இலக்கியங்களில் மட்டுமின்றி நீண்ட புதினங்கள், நாடகங்கள், வாழ்க்கை வரலாறுகள், அறிவியல் நூல்கள் போன்றவற்றிலும் காணப்படுகின்றன. இவற்றினால் மூலத்தின் முழுமை இன்பத்தினைப் பெறமுடியாது. இவற்றை ஓர் அறிமுகமாக மட்டுமே கொள்ளலாம். இத்தகு சுருக்கங்களைப் படிக்கும் பொழுது மூலத்தைப் படிக்க வேண்டும் எனும் உணர்வினைத் தூண்ட வல்லதாக அமைய வேண்டும். அப்பொழுது தான் அவை சிறப்புறும். எனவே மூலத்தின் சிறந்த பகுதிகள், அனைத்தினையும் விடுபடாதவாறு பார்த்துக் கொள்ளுதல் மொழிபெயர்ப்பாளரின் கடமையாகிறது. இவ் வகையை நாம் சுருக்கம் என்கிறோம். சான்றாகக் ''காலம் மிக மிகக் குறுகியது'' என்னும் தலைப்பில் திரு வை. சாம்பசிவம் அவர்கள், ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் அறிவியல் எண்ணங்களைப்

---

6. James Allen; 'As a Man Thinketh'—The Peter pauper press Mount Vernon Newyork. P. 8
7. வ.உ.சி 'மனம் போல் வாழ்வு', பாரி நிலையம், சென்னை-1 பக்கம்-18.

படித்து உணரவேண்டும் என்ற ஆர்வத்தை மொழிபெயர்ப்பின் மூலமாகத் தூண்டுகின்றார்.

5. தழுவல் (Adaptation)

மொழிபெயர்ப்பைப் பொறுத்த அளவில், தழுவல்கள் தான் ஆரம்ப காலத்தில் ஆதிக்கம் செலுத்தியிருந்தது என்பதற்கு கம்பஇராமாயணத்தைச் சான்றாகச் சுட்டலாம். இவ்வகையில் மூலநூலாசிரியனை விட மொழி பெயர்ப்பாளரின் புலமையே மிகுதியாகக் கணிக்கப்படுகிறது. அதோடு மூலத்தைத் தேவைக்கேற்ப, விருப்பிற்கேற்ப மாற்றக்கூடிய வாய்ப்புகள் உள்ளமையாலும் நூலாசிரியரை விட மொழிபெயர்ப்பாளரே முன் நிற்கிறார். மூல நூலின் கருத்தினை மட்டும் அதனின்றும் பெற்றுக் கொண்டு ஏனைய நிகழ்வுகள், பாத்திரங்கள், நிகழ்ச்சி மாற்றங்கள் போன்றனவற்றைத் தம் எண்ணப்படி மாற்றிக் கொள்ளுதல் இதனுள் அடங்குகின்றன. சான்றாக ஷேக்ஸ்பியருடைய நாடகங்கள் பழைய காலத்தில் தழுவல் முறையிலே அமைந்தனவாகக் காட்சியளிக்கின்றன. செல்வனின் 'கிளியோபாட்ரா' நூலும், சலசலோசன செட்டியாரின் 'சரசாங்கியும்' தழுவல் படைப்புகள். முதலாவது நூலில் கிளியோபாட்ராவின் வாழ்க்கை கற்பனைக் கண்ணோட்டத்தோடும் ஷேக்ஸ்பியரின் உதவியோடும் படைக்கப்பட்டுள்ளது.

'சரசாங்கி' 1897-ல் எழுதப்பட்டது. இமோசன் பாத்திரத்தின் அடிப்படையிலே சரசாங்கி உருப்பெற்றுள்ளது. இம் மொழி பெயர்ப்பில் தமிழ் மண்ணிற்கு ஏற்ற வகையில் பாடல்களைத் தமிழ் வடிவமாக்கியும், சிற்சில இடங்களில் மொழிபெயர்த்தும் அமைக்கின்ற நிலையைக் காண்கிறோம். இதற்குச் சான்றாக, நாடகத்தின் ஆரம்பத்தில் போஸ்துமஸ் இமோசனைப் பிரியு முன்னர் பாடுகின்ற பாடல்,

''எப்படியுனைப் பிரிவேன்
என்னாசை நாயகி
இப்படியும் வருமென்றே
எண்ணிலனே இன்றே

முழுக் கொம்பின் தேன் உடைந்து
முடவன் கையில் அடைந்து
ஒழுக்கத் தேமண் பட்டு
ஒழிந்ததைப் போல் நான் விட்டு''[8]

என்றவாறு அமைகிறது. இதில் ஆங்கில நாடகாசிரியர் ஷேக்ஸ்பியரை நாம் காண முடியவில்லை, சலசலோசன செட்டியாரைத் தான் பார்க்க முடிகிறது.

6. மொழியாக்கம்

இன்னொரு மொழியிலிருந்து மொழிபெயர்த்திருந்தாலும் கூட, நாம் மொழிபெயர்த்துள்ள மொழியின் மரபு அதில் காணப் பட வேண்டும். அவ்வாறு மொழிபெயர்ப்பதை மொழியாக்கம் என்று சொல்லலாம். கவிதையைத் தமிழில் மொழிபெயர்த்தோமென்றால் அது தமிழ்க்கவிதை போன்ற உணர்வை ஏற்படுத்த வேண்டும். இவ்வகையைப் பொறுத்த அளவில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, மறைமலையடிகள், விபுலானந்த அடிகள் குறிப்பிடத்தகுந்தவர்கள் என்று கூறலாம். உமர்கய்யாம் பாடல் வரிகள்:

"Here with a loaf of bread, beneath the bough
A flask of wine, a book of verse and thou
Beside me singing in the wilderness
And wilderness is paradise''[9]

இவை கவிமணியின் பொற்கரத்தால்

''வெயிற்கேற்ற நிழலுண்டு, வீசுந்தென்றல் காற்றுண்டு
கையில் கம்பன் கவியுண்டு கலசம் நிறைய மதுவுண்டு
தெய்வகீதம் பலவுண்டு, தெரிந்து பாட நீயுண்டு
வையம் தருமிவ் வளமின்றி வாழும் சொர்க்கம்
வேறுண்டோ?''[10]

என்று பெயர்க்கப்பெற்றுள்ளது. இதே போன்று விபுலானந்த அடிகளும் ஜூலியஸ் சீசர் நாடகத்தில் உள்ள

'Cowards die many times before their death
but a valiant never taste of death but once''[11]

என்ற கூற்றினை

---

8. சலசலோசன செட்டியார் 'சரசாங்கி'

9, 10, சு. சண்முகவேலாயுதம் இலக்கியக் கொள்கை-தொகுதி 9, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்; 1984.

11. வித்துவான், பண்டிதர் எப். எக்ஸ்சி, நடராசா-'மொழிபெயர்த்தல் 'மொழிபெயர்ப்பு-பண்பும் பயனும் மு.ப. 1984, ப. 20.

"அஞ்சினர்க்குச் சதா மரணம் அஞ்சாத நெஞ்சத்து
ஆடவர்க்கு ஒரு மரணம் என்றறிந்திருந்தும் துஞ்சுதற்கு
அஞ்சும் துன்மதி மூடரைக் கண்டால் புன்னகை புரிபவன்
யான்"[12]

எனச் சிறப்பாக மொழியாக்கம் செய்துள்ளார். இவ்வாறாக மொழிபெயர்ப்புப் பணியினைச் செய்கின்ற முறையிலே, நாம் அதனை மேற்கூறியவாறு வகைப்படுத்தலாம்.

மொழிபெயர்ப்பு என்றாலே அது ஒரு கடினமான பணி எனக் கருதுகின்ற பலர் உண்டு. அது முற்றிலும் உண்மை. இருப்பினும் அந்தக் கடினமான பணியைச் செய்யப்பலர் முயல்கின்றனர். இதில் சில நிலைகளில் தனித்திறன் தேவைப்படுகிறது. அதனடிப்படையில் நாம் 'பைபிள் மொழிபெயர்ப்பு, திரைப்பட வசனங்கள் மொழிபெயர்ப்பு, கருவி மொழிபெயர்ப்பு, குழந்தைகளுக்கான மொழி பெயர்ப்பு எனப் பகுக்கலாம்.

மொழிபெயர்ப்பில் தனித்திறன் தேவைப்படுகின்ற சில நிலைகளில் 'பைபிள், மொழிபெயர்ப்பினை முதலாவதாகஅமைக்கலாம். பன்னெடுங் காலமாகவே பைபிள் மொழி பெயர்ப்பானது நடைபெற்று வருகின்றது. அது இன்னும் தொடர்ந்து நடைபெறும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

மேற்கத்திய நாடுகளில் மிகவும் பழமையானதும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டும் வருகின்ற பணி இப்பைபிள் மொழி பெயர்ப்புப் பணியேயாகும். கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் 'பழைய ஏற்பாடு' ஹீப்ரு மொழியிலிருந்து கிரேக்க மொழிக்கு மொழி மாற்றம் செய்யப்பட்டது. இதன் காரணமாக இன்றைய நிலையில் 'முழுமையான பைபிள்' இருநூறுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

பைபிள் மொழிபெயர்ப்பானது, தொடர்ந்து பரிசீலிக்கப் பட்டு, முற்றிலும் புதிய வடிவந்தாங்கி அமைகின்றது. புதிய கருத்துகள், மூலப்பாடத்தைப் பற்றிய புதிய எண்ணங்கள், மொழி பெயர்க்கப்படுகின்ற மொழியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் இன்னபிற புதிய வடிவத்திற்குக் காரணமாக அமைகின்றன. பைபிள் மொழிபெயர்ப்பு, மொழியியல், சமயம், தொல்லெழுத்துக் கலைத்திறன் ஆகிய இவை அடங்கியது.

---

12. மேற்படி நூல் ப. 20.

பைபிள் மொழிபெயர்ப்புகளைப் படிப்பது, மற்ற மொழிகளைப் பற்றிய நம் அறிவினை மிகுவிக்கும். அதோடு ஒரு மொழியை தரமான வடிவத்திற்கு மாற்றியமைக்கவும் பயன் படுகின்றது.

இவ்வாறாகப் 'பைபிள், மொழிபெயர்ப்பானது, தன்னளவிலே சில தனித்த கூறுகளைக் கொண்டு இலங்குகிறது. அத்தனித்த கூறுகளிலே திறன்பெறுவதற்கு வழிவகை செய்கிறது. ஏற்கெனவே கூறியது போல் அதனை மொழிபெயர்க்கத் தனித்திறன் தேவைப் படுவதால், மொழிபெயர்ப்பு வகைகளிலே இதற்கெனத் தனித்த இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதேபோன்று திரைப்பட வசனங் களை மற்றொரு மொழிக்கு மாற்றுகின்ற நிலையில், தனித் திறன்கள் தேவைப்படுகின்றன. இதனைச் சற்று விரிவாகக் காண்போம்.

சீனத் தத்துவஞானி கன்ஃப்யூசியஸ் ஒரு படம் ஆயிரம் வார்த் தைகளைவிட மேலானது என்று கூறியிருக்கிறார். பேசும்படம் ஆரம்பித்த பிற்பாடு, திரைப்படங்களுக்கான கதைகள் மிகவும் அதிகமாகக் கிடைக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டது. நாம் தெரிந் திராத ஒரு மொழியில் படம் பார்ப்பதை எவரும் விரும்புவ தில்லை. அதனால் இம்மாதிரியான மொழித் தடையை நீக்கு வதற்கு வேண்டிய வழி என்ன என்று ஆராயப்பட்டது.

இம்மொழிச் சிக்கலைத் தீர்ப்பதற்கு இருவழிகள் புலப்பட்டன. அதில் ஒன்று சப்-டைட்டிலிங் (sub-titling), இன்னொன்று டப்பிங் (dubbing) என்பவையாகும். மூலமொழியில் உள்ள ஒலித் தடத்தி னோடு மற்றொரு மொழியில், புதிய ஒலிப்பதிவை இணைக்கின்ற பணிதான் டப்பிங் என்று குறிப்பிடுவதாகும்.

மேற்கூறிய இருமுறைகளில், சப்-டைட்டிலிங் என்பது தான் சிறந்ததாக அமையும். ஏனென்றால் அதில் மூலமொழியின் வசனங் களோடு, மூல்மொழி தெரியாதவர்களுக்காகத் திரையில் எந்த மொழியினருக்காக மாற்றுகிறார்களோ, அம்மொழியில் சுருக்க மாக வசனங்களை எழுதிக்காட்டுவர்.

மொழிபெயர்ப்பாளரைப் பொறுத்த அளவில். 'டப்பிங்' என்பது தான் மிகவும் கடினமான பணியாகும். இம்முறையில் மூல மொழியின் வசனங்களுக்கு ஏற்றவாறு மற்றொரு மொழியில் வசனங்களை அமைப்பதோடு நடிக, நடிகைகளின் உதட்டசை விற்கும், முகபாவத்திற்கும் தகுந்ததாக அமையும்படியாக அதை

அமைக்க வேண்டும். இம்மாதிரியான பணியினைச் செய்வோர் 'டப்பிங் எழுத்தாளர்' எனப்படுவர். ஒலியளவில் மாறுபாடான வசனங்களை முகத்தளவில் ஒன்றாக இருப்பது போல் அமைக்க வேண்டும்.

மூலமொழியின் உணர்வினை நாம் பிரதிபலிப்பதா, அல்லது மாற்று மொழியிலே எழுதப்பட்ட வசனம் போன்று அமைக்க வேண்டுமா என்ற சிக்கல் ஏற்படும். டப்பிங் எழுத்தாளர்கள் மிகச் சிறந்த முறையில் பணியாற்றினாலும் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பெருமை கிடைப்பதில்லை. மற்றைய தொடர்பு சாதனங்களைப் பொறுத்த வரையில், மொழிபெயர்ப்பாளர்கள், மாற்றங்களையும், வளர்ச்சிகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். மேற்கூறிய பணியின் தன்மையிலிருந்தே திரைப்படங்களுக்கான வசனங்களை இருமுறைகளிலே அமைக்கத் தனித்திறன் தேவை என்பதை உணரலாம்.

அறிவியல் கருத்துகளை ஒரு மொழியிலிருந்து இயந்திரத்தின் உதவியுடன் மற்றொரு மொழிக்குப் பெயர்க்கின்ற பணியிலே முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இம்முயற்சிகள் மொழியை ஒரு குறியீடாக எண்ணுகின்றன. இயந்திர மொழிபெயர்ப்பில் காணப்படுகின்ற சிக்கல் என்ன என்றால், மொழிக்கு இருக்கின்ற ஆக்கக் கூறுகளுக்கு எவ்வாறு விளக்கமளிப்பது என்பதாகும். முழுமையாக நாம் இயந்திர முறையிலே மொழிபெயர்ப்பை அமைப்பது என்பது சற்றுக்கடினமான காரியமாகும். இயந்திர மொழிபெயர்ப்பில் மொழியியல் செய்திகளை எண் வடிவங்களாக மாற்ற வேண்டும். அப்பணியை மின்அணு இயல் எண் கணிப்பான் (Electronic Digital Computer) செய்யும். இயந்திர மொழி பெயர்ப்பாளர் ஒரு குறியீட்டிற்குப் பதிலாக இன்னொரு குறி யீட்டைப் பயன்படுத்தத் தொடங்கினார். அது நாம் வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்க்கின்ற பணியைப் போன்றது. இதற்கு இருமொழி அகராதி தொகுக்கப்பட்டு இயந்திரத்தில் அமைக்கப் பட வேண்டும். இந்த முறை மூலமொழியிலுள்ள சொல்லுக்கு இணையான சொல்லைத் தேர்ந்தெடுக்க வசதியாக அமைகின்றது. அதன் பிற்பாடு மாற்று மொழியின் வாக்கிய அமைப்புப்படி அவைகள் அமைக்கப்பட வேண்டும். மாற்றி அமைத்தால் மொழி பெயர்ப்பு நன்றாக அமையாது. சொற்களை மாற்றுகிற பணி, கணிப்பானுள் செய்திகளைச் செலுத்துவதற்கு முன் செய்யப்பட வேண்டும். இதற்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் தேவைப்படுகிறார்

ஏனென்றால் இரு வேறு சொல்லமைப்புகளினால், கணிப்பான் இணைகளைத் தானே அமைப்பது என்பது கடினம். மொழியில் ஏற்படுகின்ற மாற்றங்கள், கலாச்சாரப் பின்புலம் இவைகள் இம்முறைக்குத் தடைக்கல்லாக அமைகின்றன.

இயந்திரத்தின் மூலமாக மொழிபெயர்ப்பு நடைபெற்று வருகின்ற பணி வெற்றி பெறவேண்டுமானால், மொழியின் பயன்பாட்டிற்குப் பொருந்துகின்ற மொழியியல் கூறுகளினதும் மொழியியல் கூறுகளோடு பொருந்துகின்ற மின் அணு இயல் சாதன வசதிகளினதும் அடிப்படையில் அவை அமையும். கடைசியாக, மொழிபெயர்ப்புப் பணியிலே தனித்திறன் தேவைப்படுவது, குழந்தைகளுக்காக மொழிபெயர்ப்புச் செய்கின்ற பணியாகும்.

மொழிபெயர்ப்புக் கலையில் தலைசிறந்து விளங்குகின்ற ஒருவர், ஒரு சிறந்த மொழிபெயர்ப்பாளர் மனதில் கொள்ள வேண்டிய எண்ணங்களைக் கீழ்க் கண்டவாறு அமைக்கிறார். 1. சொற்கள் 2. கருத்து அல்லது பொருள் 3. நடை என்பதாகும். ஆனால் குழந்தைகளுக்கென்று மொழிபெயர்ப்புப் பணியிலே ஈடுபடுகின்ற ஒருவர், மேற்கூறிய மூன்று நிலைகளையும் உள்ளடக்கி மேற்செல்ல வேண்டிய கண்டிப்பில் உள்ளார். ஏனென்றால் அவருக்குச் சில தனித்த பொறுப்புகள் உள. குழந்தைகளுக்கான புத்தகத்தை மொழிபெயர்க்கின்றவர் தன் படைப்பை கவர்ச்சியாக, எளிதாகப் படிக்கின்ற வகையிலே அமைக்க வேண்டுவது இன்றியமையாதது. இவ்வாறு அமைக்கவில்லையென்றால், அவர்கள் புத்தகத்தைப் புறக்கணித்து விடுவர். குழந்தைகளுக்கு, ஆவலை, வியப்பைத் தோற்றுவிக்கின்ற வகையிலே மொழிபெயர்ப்பினை அமைக்கவேண்டும்.

மேலே கூறிய மூன்று நிலைகளில் இரண்டாவதாக அமைகின்ற 'கருத்து' அல்லது 'பொருள்' என்பதைத்தான், குழந்தைகளுக்கான மொழிபெயர்ப்பாளர் கருத்தில் கொள்ளவேண்டும். குழந்தையின் மனத்தினையும், அவர்களின் விருப்பு, வெறுப்புகளையும், பல்வேறு வயது வரம்பிற்கேற்ப அவர்களின் புரிந்து கொள்ளும் திறனையும் கருத்தில் கொள்ளுதல் நலம். குழந்தைகளுக்கான மொழிபெயர்ப்பில் வை. கோவிந்தன் தொகுத்த, 'ஈசாப் குட்டிக் கதைகள்' என்ற நூலில் 'காளைகளும் சிங்கமும்' என்றொரு கதை உள்ளது. அது 'ஒற்றுமையே பலம்' என்ற கருத்தினை வலியுறுத்துகின்றது.

"நாலு காளைகள் நட்பாய் இருந்தன. மேயப்போகும்போது நாலும் ஒன்று சேர்ந்தே போகும். ஒன்றைவிட்டு ஒன்று பிரியாது. இவற்றைக் கொன்று தின்னவேண்டுமென்று ஒரு சிங்கம் நெடு நாட்களாக விரும்பியது, ஆனால் நாலும் ஒன்று சேர்ந்தே எப்பொழுதும் இருந்தபடியால் அவற்றை எதிர்க்கப் பயந்தது; அவற்றைப் பிரித்து விடுவதற்கு வழி என்ன என்று யோசித்தது; கடைசியாக அவற்றுக்குள் பொறாமை உண்டாகும்படி செய்தது. பொறாமையினால் நாலும் பிரிந்து வெவ்வேறு திக்கில் மேய ஆரம்பித்தன. அப்புறம் சிங்கம் சுலபமாக ஒவ்வொரு காளையாக அடித்துத் தின்றது" என்ற கதை மொழிபெயர்ப்புச் செய்தது போன்றே அமையவில்லை. மிக இயல்பாக மூலம்போல் அமைந்துள்ளது. இம்முறைதான் குழந்தைகளுக்கான மொழிபெயர்ப்பாளர் கடைப்பிடிக்க வேண்டிய முறையாகும்.

மேலை நாட்டுக் கதைகளில் வருகின்ற பாத்திரங்களின் பெயர்களை மொழிபெயர்க்கையிலே சிக்கல் ஏற்படுகின்றது, ஏனென்றால் அவைகளை நாம் சரிவர உச்சரிக்க முடியவில்லை, இதற்குப் பிரெஞ்சு, ஜெர்மன், ரஷ்யன் மொழிப்பெயர்களே உதாரணங்களாகும். இருப்பினும் மற்றைய மொழியிலுள்ள நல்ல பல கதைகளை நம் மொழிக் குழந்தைகளுக்கு மொழி பெயர்த்துத் தரல் ஒரு சீரிய சிறந்த பணி என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

மேற்கூறிய வகைகளானது, மொழிபெயர்ப்புப் பணியை நாம் செய்கின்ற முறையிலும், அதற்கென்று சில தனித்த திறன் தேவைப்படுகின்ற நிலையின் அடிப்படையிலும் அமைகின்றன. ஏற்கெனவே கூறியது போல் மொழிபெயர்ப்பின் வகைகள் அவரவர்களின் மன நிலையின்படி வேறுபடுதல் இயல்பு. ஆனால் இங்கு மொழி பெயர்ப்பு, பணியின் எளிமை, மிகுந்த இடர்ப்பாட்டின் அடிப்படையில் அமைகிறது.

மொழிபெயர்ப்பு வகைகளைப் பிரிக்கின்ற விதத்தில் எந்த ஒரு வரையறை இல்லாதிருந்தும் இப்பணி போற்றப்பட்டு வருகிறது என்பதில் ஐயமில்லை. ஏன் இப்படி போற்றப்பட்டு வருகிறது என்பதை அறிந்து கொள்ள மொழிபெயர்ப்பின் நோக்கமும் பயனும் பற்றித் தெரிந்து கொண்டால் விளங்கும் என்பது உறுதி.

3

மொழிபெயர்ப்பு-நோக்கமும் பயனும்

நோக்கம் என்று பொதுவாகக் கருதுவது ஒரு செயலை நாம் எதற்காகச் செய்கிறோம் என்பதாகும். அந்தச் செயல் ஏதாவது ஒரு லட்சியத்தோடு செய்யப்படுவதாகும். எந்த ஒரு செயலின் நோக்கமும் நிறைவேறி விட்டால், அதாவது நல்ல விளைவுகளை ஏற்படுத்தினால் அதனைப் 'பயன், என்று சொல்லலாம். இந்த அடிப்படையில் மொழிபெயர்ப்புப் பணியின் நோக்கம் என்ன? அதனால் ஏற்படுகின்ற பயன் என்ன என்பதைப்பற்றி இப்பகுதியில் காண்போம்.

'தமிழ்'மொழியின் சிறப்பினை இவ்வாறு கூறிச் செல்கின்றார் பாரதியார்.

1. ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவதெங்கும் காணோம்
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்வீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்''[1] என்றும்

2, பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்

---

1. 2. டி. வி. எஸ். மணி, சினி. விசுவநாதன்—'பாரதியார் கவிதைகள்' – வானவில் பிரசுரம் ப. 168.

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமையில்லை;
திறமையான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்''[2]

அவ்வாறு ஏன் கூறுகின்றார் என்றால், தமிழ் மொழி இனிமையாக இருந்தாலும்கூட, தமிழன், தமிழ் உணர்வு இல்லாமல், விலங்குகளாய் உலாவி வருகின்றான். அதோடு உலகமெலாம் இகழ்ந்து பேசுகின்ற நிலைக்கு ஆளாகிவிட்டான். பெயரளவில் தமிழனாய் இருந்தால் மட்டும் போதாது, தமிழின் இனிமையான ஓசையை உலகோர் கேட்கும்படியாகச் செய்யவேண்டும் என்கிறார். தமிழின் இனிமையை நாம் மொழிபெயர்ப்பு மூலமாகப் பரவச் செய்யலாம். அடுத்த பாடலிலே மற்றைய நாட்டு அறிஞரின் எண்ணங்கள், கருத்துகள், நம் மொழியிலே கொண்டு வரப்பட வேண்டும்; அதே நேரத்தில் புதிய நூல்களும் நம்முடைய மொழியில் எழுதப்படவேண்டும் என்கிறார். தமிழராகிய நாம் நமக்குள்ளே மூத்தோரின் பெருமையை மட்டும் பேசிப் பயனில்லை. நமக்கு உண்மையிலேயே திறமையிருந்தால் வெளிநாட்டவர் அதைப் புகழும்படியாக வெளிக்காட்டவேண்டும் என்கிறார். பாரதியின் இந்தச் சிந்தனைகள் மொழிபெயர்ப்பின் வாயிலாக நனவாகிக் கொண்டிருக்கின்றன.

இன்று நாடுகளுக்கிடையே அறிவியல் வளர்ச்சி காரணமாக இடைவெளி குறைந்து கொண்டே வருகின்றது. ஒவ்வொரு நாடும். மற்றைய நாட்டினைச் சார்ந்து நிற்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது. இது மற்றைய நாட்டு மொழிகளை அறிந்து கொள்ளவும், மற்ற நாட்டோடு வணிகம் முதலான பல நிலைகளில் தொடர்பு கொள்ளவும் வழி வகை செய்கிறது. இச்சூழலை நன்முறையில் பயன்படுத்திக்கொள்ள 'மொழிபெயர்ப்பு' ஒரு பெருங்கருவியாக உதவுகிறது.

''கருத்து வளர்ச்சி, அறிவு வளர்ச்சி, ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ளுதல், அறிமுகங் கொள்ளுதல் எனும் இவையே மொழிபெயர்ப்பின் பொது நோக்கங்களாக அமைகின்றன. கருத்து வளர்ச்சி, அறிவு வளர்ச்சி என்பன அறிவியல், பொருளாதாரம், வரலாறு, புவியியல் போன்ற மொழிபெயர்ப்புகளில் முதன்மையா

2. மேற்படி நூல் ப. 169

கின்றன. ஒருவரையொருவர் அறிமுகங் கொள்ளுவதனையும், புரிந்து கொள்ளுவதனையும் இலக்கியம் மற்றும், கலை மொழி பெயர்ப்புகள் அடிப்படையாகக் கொள்கின்றன''[3] இவை மொழி பெயர்ப்பின் பொது நோக்கங்களாக அமைகின்றன. இந்த நிலையில், நாடுகளுக்கிடையே ஒரு நல்லெண்ணத்தினை, கூட்டுறவினை வளர்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடு நிறுவனங்கள் மொழி பெயர்ப்புப் பணியிலே ஈடுபடுகின்றன. மொழிபெயர்ப்புப் பணியிலே ஈடுபட்டிருக்கின்ற மொழிபெயர்ப்பாளர்கூடத் தங்களுக்கென்று சில தனித்த நோக்கங்களையும் கொண்டு விளங்குகின்றனர்.

மேற்கூறிய நோக்கங்களை (1) பொது நோக்கங்கள் என்றும் (2) நிறுவன நோக்கம் என்றும் (3) தனி மனித நோக்கம் என்றும் வகைப்படுத்திக் காணலாம்.

1. பொது நோக்கம்

பொது நோக்கத்தில் சிறந்த கதைகள் என்று இலக்கிய விமரிசகர்களால் பாராட்டப் பெற்றவற்றை மொழிபெயர்க்க வேண்டும் என்பது நோக்கமாக அமைகின்றது. சான்றாகச் சரத் சந்திரரின் நாவலான 'நிஷ்கிருதியை' அ கி. ஜெயராமன் 'சைலஜா' என மொழிபெயர்த்துள்ளார். அந்நாவலின் முன்னுரையில், ' சரத்சந்திரரின் நாவல்களில் மிகச் சிறந்தது என்று பாராட்டப்படுவது 'நிஷ்கிருதி' என்ற இந்த ஷைலஜா. கதை, பாத்திர சிருஷ்டி, கதை சொல்லும் பாணி, ஆகிய எல்லா வகைகளிலும் இது சிறந்து விளங்குகிறது என்று இலக்கிய விமரிசகர்களால் பாராட்டப் பெற்றது''[4] என்று கூறுகிறார். இக்கூற்றிலிருந்து இதுதான் மொழிபெயர்ப்பின் நோக்கம் என ஓரளவுக்குத் தெளியலாம்.

மொழிபெயர்ப்பின் மிக முக்கிய நோக்கங்களில் ஒன்று நாடுகளுக்கிடையே நட்புறவையும், பிணைப்பையும் ஏற்படுத்துவது. ஏற்கெனவே இருக்கின்ற நட்பினை வலுப்படுத்துவதும் மொழி பெயர்ப்பின் மூலமாக நடைபெறுகின்றது. அதற்கு அந்தநாட்டின்

---

3. S. Sivakami—"Bibliography on Translations", International Institute of Tamil Studies 1983; p. xx
4. அ. கி. ஜெயராமன் — 'சைலஜா—ஜோதி நிலையம், சென்னை-18. முன்னுரை

புறவளர்ச்சியை மட்டுமல்லாது அக உணர்ச்சியையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும் அதற்கு இலக்கியங்கள் ஒரு பாலமாக அமைகின்றன.

மேற்கூறிய கருத்திற்கு எடுத்துக் காட்டாக நம் நாட்டிற்கும், ருஷிய நாட்டிற்குமிடையே ஏற்பட்டுள்ள நட்புறவை எடுத்துக் கொள்ளலாம். மொழிபெயர்ப்பு அதற்கு எவ்வாறு உறுதுணையாக அமைகிறது என்ற வகையில் 'சோவியத் நாட்டுக் கவிதைகள்' என்ற கவிதைத் தொகுப்பு திரு. ரகுநாதன் என்பவரால் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. அதில் அவர் அளித்துள்ள முன்னுரையில்,

''மேலும் பாரதம் இன்று சமதர்ம லட்சியத்தைத் தனது சமுதாய மார்க்கமாக ஏற்றுக் கொண்டுள்ளது; சோவியத் யூனியனோ சமதர்ம லட்சியத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் உலகிற்கே மூத்த பிள்ளையாக விளங்குகிறது. எனவே அந்நாட்டின் அநுபவங்கள் நமக்கு நல்ல படிப்பினைகளை வழங்க் முடியும். இதனால் நாமும் அந்நாட்டின் வாழ்வையும் வளர்ச்சியையும் தெரிந்து கொள்வதில் அக்கறை காட்டுகிறோம். எனினும் இவற்றைத் தெரிவிக்கும் வரலாற்று நூல்களின் மூலம் நாம் அந்நாட்டின் புறவளர்ச்சியைத் தான் பெரிதும் தெரிந்து கொள்ள முடியும். அந்நாட்டின் அகவளர்ச்சியை, இதயப் பண்பைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால், அவற்றை நாம் உணர வேண்டுமென்றால், அந்நாட்டின் இலக்கியங்கள் தான் நமக்கு உதவ முடியும். அதிலும் குறிப்பாக அந்நாட்டின் கவிதைகள் தான் அந்த மக்களின் இதயத்தையும், பண்பாட்டையும் நமக்கு இனங் காட்ட முடியும். அவ்வாறு இனங் காண்பதற்கு எளிய முயற்சியாகத் தான் இந்தக் கவிதைத் தொகுதி உருப்பெற்றுள்ளது''[5] என்று கூறி மொழி பெயர்ப்பின் பொதுவான நோக்கத்தினைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

ஒவ்வொரு நாட்டின் முன்னேற்றத்திலும், அறிவியலும் அது தொடர்பான கண்டுபிடிப்புகளும் பங்கேற்கின்றன. அத்தகைய கண்டுபிடிப்புகளைப் பற்றி எல்லோரும் அறிந்து கொண்டிருக்கின்றனர் என்றுகூற முடியாது. அதற்குக் காரணம் அறிவியல்

---

5. ரகுநாதன்- 'சோவியத் நாட்டுக் கவிதைகள்' முன்னுரை- மு. ப. செப்டம்பர் 1965-ஸ்டார் பிரசுரம், சென்னை 5.

கண்டுபிடிப்புகள் வெளிவருகின்ற நூலின் மொழியை எல்லோரும் அறிந்திருப்பர் என்று கூற முடியாது. இம்மாதிரியான கண்டு பிடிப்புகள் பாமரமக்களைப் பொதுவாகச் சென்றடைவதில்லை இங்கு, பாமரமக்களைக் கண்டுபிடிப்புகளுக்கு இட்டுச் செல்கின்ற இணைப்பாக மொழிபெயர்ப்பு நூல்கள் செயல்படுகின்றன. இதனால் இம் மொழி பெயர்ப்பு நூல்கள் அறிவைப் பரப்புகின்ற கருவியாகச் செயல்பட்டு மக்களுக்கு நன்மையை விளைவிக்கின்றன. இதற்குச் சான்றாக, சார்புக் கொள்கையை உலகுக்கு அறிமுகப்படுத்திய ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் சில அறிவியல் கட்டுரைகளைத் தமிழிலே தந்துள்ளமையைச் சுட்டலாம். 'காலம் மிகமிகக் குறுகியது' என்னும் தலைப்பில் அதனைத் திரு. வை. சாம்பசிவம் அவர்கள் மிகச் சிறந்த மொழி பெயர்ப்பாக நமக்குத் தந்துள்ளார். பாமர மக்களுக்கும் அறிவைப் பரப்ப வேண்டுமென்ற நோக்கம் மொழி பெயர்ப்பு மூலமாகச் செயல்படுகின்றது. இந்நோக்கத்தினைத் திரு எஸ். வி. சபாபதி என்பவர், ''அவர் தம் வாழ்நாளில் ஏராளமான அறிவியல் கட்டுரைகளை எழுதி இருக்கிறார். அவற்றைப் பாமர மக்கள் எளிதில் படித்து உணர முடியாது, இத்தகையவர் அனைவரும் தெரிந்து கொள்ளத்தக்க, போற்றத்தக்க உண்மைகளையும் வெளியிட்டிருக்கின்றார். அவைகளின் சிறு தொகுப்பே இந்நூல்''[6] என்று பதிப்புரையில் கூறுவது தெளிவுபடுத்துகின்றது.

மற்றைய மொழிகளில் சிறந்து விளங்குகின்ற இலக்கியப் படைப்பாளரின் நூல்களை எல்லா மொழியினருக்கும் அறிமுகஞ் செய்கின்றதன் நோக்கமாக மொழிபெயர்ப்புகள் வெளி வந்தன. இதற்குச் சான்றாக 'மிதுன லக்னம்' என்ற தலைப்பில் வங்காளத்தின் தலை சிறந்த நாவலாசிரியர்களில் ஒருவரான விமல் மித்ராவின் நூலினைத் திரு ஆர். சண்முகசுந்தரம் என்பவர் தமிழ்ப் படுத்தியுள்ளதைச் சுட்டலாம்.

உலக வரலாற்றினை அறிந்து கொள்ளவும், அவ் வரலாற்றிலே நடைபெற்ற புரட்சிகள், புரட்சிக்காரர்கள் இவர்களின் பங்கு பற்றியும் அறிவதற்கு உறுதுணையாக அமைவது, வரலாற்றைப் பற்றிய புரட்சிக்காரர்கள் பற்றிய நூலாகத் தான் இருக்கும். உலக வரலாற்றினை உய்த்துணர்ந்து அறிந்து கொள்ள இம்மாதிரியான வரலாற்று நூல்களின் மொழிபெயர்ப்பு மற்றைய

6. வை. சாம்பசிவம், 'காலம் மிக மிகக் குறுகியது —மு. ப. நவம்பர் 1965 புது இலக்கியப் பதிப்பகம், சென்னை-1

மொழியினருக்கு வழிவகுக்கும். ஜெர்மனியில் ஹிட்லரின் ஆட்சிக் காலத்திலே நடைபெற்ற கொடுமைகளையும், அதன் விளைவாக ஏற்பட்ட புரட்சியினையும் திரு ஜூலிஸ்பூசிக் எழுதிய 'தூக்கு மேடைக் குறிப்பு' விளக்குகிறது. இது திரு. எம். இஸ்மத் பாஷா என்பவரால் தமிழுலகுக்கு அறிமுகம் செய்கின்ற பேற்றினைப் பெற்றது.

மற்றைய நாட்டு இலக்கியங்கள், அந்நாட்டின் சமுதாயத்தின் பிரதிபலிப்புகள், பாதிப்புகள் - இவைகள் எந்த நாட்டு, மொழி இலக்கியமும் செய்கின்ற பணியாகும். அதனால் மற்றைய நாட்டு இலக்கியங்களை நம் மொழியில் பெயர்த்தெழுவது என்பது மிகச் சிறந்த பணியாகும். இதை மொழி பெயர்ப்பின் ஒரு நோக்கமாகக் கொள்ளலாம். இதன் சான்றாக 'ஜார்ஜ் குலியா' எழுதிய 'வசந்த காலத்திலே' என்பதைத் தமிழாக்கம் செய்த திரு. க. சிவசங்கரன் அவர்களின் முன்னுரையிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.

''சோஷலிஸ்ட் சகாப்தத்தின் வீரம் மிகுந்த சாதனைகளைச் சித்திரிப்பதே சோவியத் இலக்கியத்தின் குறிக்கோள். இடையறாது வளர்ந்தோங்கும் சோவியத் சமூகத்தின் வாழ்வை, புதிய மனிதனின் பண்புகளைச் சித்திரிப்பதே அதன் ஜீவநாடியாகும்.''[7]

ஜார்ஜ் குலியாவின் நாவல் மேற் சொன்னவற்றைத் தான் பிரதிபலிக்கின்றது.

தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில், பழங்காலத்திலிருந்தே மொழியினை இயல், இசை, நாடகம் என முப்பெரும் பிரிவுகளாக அமைத்து வந்திருக்கின்றோம் அந்நிலையை இன்றளவும் கடைப் பிடித்தும் வருகின்றோம். இயல், இசை, நாடகம் இவை பற்றிய நூல்கள் பழங்கால முதலே காணக்கிடைத்தன. ஆனால் இன்று இந்த இயல்களை மக்களுக்கு விளக்குகின்ற வகையிலே நூல்கள் காணக் கிடைப்பது அரிதாக இருக்கிறது. இருப்பினும், கலையறிவு, தமிழ் நாட்டில் இருந்து வெளியேறவில்லை.

இன்றும், தமிழ் நாட்டில், நாட்டியக் கலை சிறந்து விளங்கி வருவதை நாம் அறிவோம் இந்நாட்டியக் கலைக்குரிய நூல்கள் ''பழங்காலம் முதற்கொண்டு வடமொழியிலிருந்து பெயர்க்கப் பெற்றும், தமிழிலேயே யாக்கப் பெற்றும் கலைஞர்களால் கையாளப்பட்டு வந்தன. ஆனால் கடந்த இரண்டு நூற்றாண்டு

7. க. சிவசங்கரன்-வசந்த காலத்திலே ப. 3

களாக அந்நூல் போற்றுவாரற்றுப் போனமையால் அவற்றின் இருப்பே மறைவதாகி, மாணவர்களும், ஆசிரியர்களும் பிறமொழி நூல்களை மட்டுமே கையாள வேண்டிய நிலை உண்டாயிற்று.''[8]

இம்மாதிரியான நூல்கள் ஏன் மொழிபெயர்க்கப் பெறுகின்றன என்ற காரணத்தை நந்திகேசுவரரால் இயற்றப்பட்ட 'அபிநய தர்ப்பணம்' என்ற வடமொழி நூலை மொழிபெயர்த்த திரு. வீரராகவையன் சுட்டுகிறார். ''தமிழ்நாட்டில் நாட்டியம் பயிலும் மாணவர்க்கு வடமொழி அபிநய தர்ப்பணத்தின் நேர் மொழிபெயர்ப்பான இந்நூல் இன்றியமையாததாக விளங்கும் என்ற எண்ணத்தாலும், தாய்மொழியிலுள்ள பழமையான இச் சிறந்த நூல் முற்றிலும் அழிந்து போகாமல் காப்பாற்றப்பட வேண்டுமென்ற கருத்தாலும் இது வெளியிடப் பெறுகின்றது''[9] என்பதினின்றும் உணரலாம்.

இந்திய இலக்கியங்களுக்கிடையே ஓர் உறவை ஏற்படுத்துவது மொழி பெயர்ப்பின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். இவ்வகையில் தமிழில் அமைந்த சிறுகதைகளை ஆங்கிலத்தின் மூலமாக அறிமுகப்படுத்தி, இந்திய இலக்கியங்களுக்கிடையே உறவை ஏற்படுத்தியது, 'Tamil short stories' என்ற, திரு க. நா. சுப்பிரமணியத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு மொழிபெயர்க்கப் பட்ட சிறுகதைத் தொகுப்பு. மேற்கூறிய பணி இந்திய இலக்கியங் களுக்கிடையே ஓர் உறவினை, பிணைப்பினை ஏற்படுத்த வேண்டு மென்று 'மொழிபெயர்க்கப் பெறுகின்ற நூல்களின் நோக்கமும் பயனுமாக அமைகிறது.

இது மட்டுமல்லாது உலக அளவிலே ஒற்றுமை, ஒருமைப்பாடு ஏற்படுவதற்கு, மொழிபெயர்ப்பின் பங்கு மிகவும் சீரிய முறையில் அமைந்துள்ளது. இன்று நாடுகளுக்கிடையே இனங்களுக்கிடையே சண்டை, சச்சரவுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவை கள் பொதுவாகப் புற உலகைப் பாதித்து வருகின்றன. இதற்குக் காரணம் மனிதனது எண்ணங்களே. இம்மாதிரியான எண்ணங் களை விட்டு, நல்ல ஒற்றுமையை ஏற்படுத்துவது இலக்கியங்

8. வீரராகவையன் - அபிநயதர்ப்பணம் முகவுரை III
9. மேற்படி நூல் முகவுரை-V.

களே. அதனால் அவ்விலக்கியங்களை மொழி பெயர்த்து மற்றைய மொழியினருக்கு அறிமுகப்படுத்தினோமென்றால் இதன் மூலமாக நாம் தேசிய அளவில் ஓர் ஒற்றுமையை, ஒருமைப் பாட்டை வளர்க்க இயலும். இந்த அடிப்படையில் எட்டுத் தொகையில் 'பரிபாடலை மட்டும் ஸ்ரீஇராமதேசிகர் என்பவர் மொழி பெயர்த்துள்ளார். அதற்கு முன்னுரை எழுதியுள்ள தமிழ் நாட்டின் முன்னாள் கவர்னர் பிரபுதாஸ் பட்வாரி 'தமிழ் இலக்கியத்தின் ஆழத்திலே சென்று அதன் எண்ணற்ற பொக்கிஷங் களை அறிய முயலுகின்ற வடமொழி தெரிந்த மக்கள், மொழி பெயர்ப்பின் மூலமாக இதைச் செய்யலாம். இம்மாதிரியாக மொழி களின் மூலமாக தேசிய ஒருமைப்பாட்டை நாம் வளர்க்க வேண்டும்''[10] என்று கூறியுள்ளார். இதையும் மொழிபெயர்ப்புக் கலையின் நோக்கமாகக் கொள்ளலாம்.

ஒரு நாட்டின் பண்பாடு அந்நாட்டின் நீதி நெறிகளிலே அடங்கியிருக்கிறது. அந்நாட்டின் நீதிநெறிகளைப் படித்துப் பயனடையுமாறு செய்ய வேண்டியது மொழிபெயர்ப்பாளர் களுடைய கடமையாகும். அந்நிலையிலே தமிழிலே ஏராளமான நீதிக் கருத்துகள் அடங்கிய நூல்கள் உள்ளன. அதில் 'கவிராஜன் ஜகவீரபாண்டியனாரின் 'தர்மதீபிகையும்' ஒன்று. ஆங்கிலம் தெரிந்த இந்தியர்களுக்கும், மேலை நாட்டினர்க்கும் பயன்படும் என்று கருதி திரு நியூமன் என்பவர் அதனை ஆங்கிலத்தில் சிறப்பாக மொழிபெயர்த்துள்ளார்.

மேற்கூறிய நீதிநெறி நூல்களில் 'கொன்றைவேந்தனை'த் திரு எஸ். வெங்கடாசலம் என்பவர் மொழி பெயர்த்துள்ளார்.

உலகத்தில் தோன்றிய தலை சிறந்த தலைவர் களின் வரலாறு எல்லோரும் அறிந்திருக்க வேண்டிய ஒன்று. இவ்வாறு அவர்களின் வரலாற்றைச் சாதாரண மக்களும் அறிந்து கொண்டு, அவர்களின் வாழ்க்கை முறையினைக் கடைப் பிடிக்க வேண்டுமென்ற எண்ணமே, பொதுவாக உலகில் சிறந்த தலைவர்களின் வரலாற்றினை மொழி பெயர்க்க வேண்டு மென்ற நோக்கத்திற்கு நம்மை இட்டுச் செல்கிறது. இவ் வரிசை யில் 'டாக்டர் மார்டின்லூதர் கிங்' அவர்களின் வரலாறு 'அறநெறி பாடிய வீரகாவியம்' எனத் தமிழிலே திலகவதி பால் அவர்

---

10. S. N. SRIRAMADESIKAN, Ettuttokai in sanskrit 1977, Foreword. IV.

களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்பாளர் நூன் முகத்தில் "நல்லார் குணங்களை உரைப்பது நன்று, என்பது நம் நாட்டு நன்மொழி. நல்லாரின் பண்புகளை எடுத்துரைப்பதால் பெருகும் நன்மை, நாட்டில் சான்றாண்மை தழைப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தருகிறது"[11] என்று கூறுவதிலிருந்து அதன் நோக்கத்தினை உணர முடிகின்றது.

அறிவினை ஊட்டுவதும் மொழிபெயர்ப்பின் முக்கிய நோக்கங் களில் ஒன்றாக அமைகின்றது. இலக்கிய வகைகளின் வழியாகவும் அறிவு ஊட்டப்படுகிறது. அவ்விலக்கிய வகைகளிலே 'உரைநடை தமிழ் மொழியைப் பொறுத்த அளவில் 19ஆம் நூற்றாண்டில் தான் வளர்ச்சி பெற்றது. 20 ஆம் நூற்றாண்டிலிருந்து அதன் கவனம் சிறுகதை, முழுநாவல், குறுநாவல், சித்திரத் தொடர் கதை முதலிய இலக்கிய துறைகளில் பரவலாயிற்று என்றாலும் தமிழ் இலக்கிய வளர்ச்சி துப்பறியும் துறையை ஒரு சிறிதும் எட்டிப் பார்க்கவில்லை. ஆங்கிலம் படித்த பெருமக்கள் சிலர் ஆங்கிலத் துப்பறியும் நாவல்கள் சிலவற்றைத் தமிழ் மொழி யில் பெயர்த்தளித்தும், தழுவித் தந்தும், உருவையும், பெயரையும் ஓரளவு மாற்றித் தமது சொந்தக் கற்பனை போல் உலவவிட்டும் அறிவுப் பணி புரிந்தனர். எனினும் இனிய துப்பறியும் நாவல் களைத் தமிழில் தாமே எழுத முயன்றோரும், முயற்சியில் வெற்றி கண்டோரும் மிகச் சிலராவர்.

முயற்சி சிறிதாயிருப்பினும் அவர் தம் படைப்புகள் தமிழ் மக்களால்-குறிப்பாக இளம் உள்ளங்களால் பெரிதும் வரவேற்கப் பட்டன. காரணம் அவை இளைஞரின் சிந்தனையைக் கிளறி அறிவுக்கு வேலை கொடுத்தமையே ஆகும். வளரும் உள்ளங் களுக்குத் துப்பறியும் நவீனங்களைப் போல அறிவு விருந்தளிக்கக் கூடிய சாதனம் வேறெதுவுமில்லை. விஞ்ஞானம், கைரேகை, சட்டநுணுக்கம், வழக்கு விசாரணை போன்ற பலதுறை அறிவும் இதன் மூலம் வளர்க்கப்படலாம். துப்பறியும் துறையினர், (C.I.D.) போலீஸ் இலாகாவினர் ஆகியோருக்கு இவை பெரிதும் பயன்படும். எனவேதான் நான் படித்த சில ஆங்கிலத்துப்பறியும் நாவல்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் முயற்சியில் ஈடுபட்டேன். அதன்

11. திலகவதிபால்-'அறநெறி பாடிய வீரகாவியம்'
—முன்னுரை.

விளைவுதான் இச் சிறு நூல்' [12] என்ற ஆசிரியரின் கூற்று மொழி பெயர்ப்பின் நோக்கத்தினை வெளிப்படுத்துகிறது. 'சர்க்கஸ் பேரரசி' என்ற துப்பறியும் நவீனம் தமிழில் கவிஞர் அரு சோம சுந்தரன் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இலக்கிய வகைகளிலே 'புதினம்' தான் மிகவும் அதிகமாக மொழிபெயர்க்கப்படுகிறதென்று கூறலாம். அவ்வகையில் மற்ற மொழிகளிலுள்ள புகழ் பெற்ற புதினங்கள் தாய்மொழியில் பெயர்க்கப்படுகின்றன. 'பனிமேகம்' எம். டி. வாசுதேவன் நாயரின் மலையாளப் புதினம். அது சி. ஏ. பாலன் அவர்களால் தமிழ் மண்ணிலே முகழ்த்தது.

மொழிபெயர்ப்பின் பணி பரந்தது, விரிந்தது. அப்பணியின் நோக்கங்கள் பலவாறாக அமைகின்றன. அந்நோக்கங்களில் சிறந்த ஒன்றாக அமைவது, ஒரு மொழியை அதே மொழியைக் கொண்டு வளர்க்காமல் இன்னொரு மொழித் திறன் கொண்டு வளர்ப்பது தான். மேற்கூறிய கருத்தை மனதில் கொள்ளும் போது, தமிழ் உலகைப் பொறுத்தவரையில், ஆங்கில இலக்கிய அறிவு பெறுவது தேவையான ஒன்றாக அமைகிறது. இதனை மொழிபெயர்ப்பு நோக்கமாக திரு அரு. சோமசுந்தரன் அவர்கள் கொண்டுள்ளார் கள். அவர்களின் நோக்கமாக ஷேக்ஸ்பியர் தமிழ் வடிவம் பெற்றுள்ளது. சான்று (1) இரண்டாம் ரிச்சர்டு (2) அந்தோனியா வும், கிளியோபாட்ராவும் (3) மாக்பெத் (4 எண்ணிய எண்ணி யாங்கு-இவ்வாறு விரிந்து கொண்டே செல்கின்றன.

ஒவ்வொரு மொழிபெயர்ப்பும் மூலநூலின் உணர்வினைப் பிரதிபலிப்பதாக அமைய வேண்டுமென்பது மொழிபெயர்ப்பின் விளக்கமாக மட்டுமல்லாமல் நோக்கமாகவும் அமைகிறது. இந் நிலையையும் மொழிபெயர்ப்பின் விளக்கமாக மட்டுமல்லாமல் நோக்கமாகவும் அமைகின்ற நிலையை ''ரோமானிய மக்களோடு பழகும் பேறு பெற்றேன். எனவே ரோமானிய உணர்வோடு இந்த நாடகத்தினை மொழிபெயர்த்துத் தமிழ்த்தாயின் திருவடிகளில் பணிவோடு சூட்டுகிறேன்'' [13] என்று கவிஞர் அரு. சோமசுந்தரன் அவர்கள் எழுதிய 'ஜூலியஸ் சீசர்' நாடகத்தின் முன்னுரைக் கூற்றினில் உணர்கின்றோம்.

---

12. அரு. சோமசுந்தரன்-'சர்க்கஸ் பேரரசி' -மு.ப. ஜனவரி 1963-அருணா பப்ளிகேஷன்-சென்னை-17. முன்னுரை-iii —iv.
13. அரு. சோமசுந்தரன்-'ஜூலியஸ் சீசர்'-மு.ப. 1982 முன் னுரை; பொன்முடி பதிப்பகம், காரைக்குடி.

ஒரு மொழியின் இலக்கிய வளர்ச்சி என்பது அந்தந்த இலக்கியத்தின் மொழிபெயர்ப்பின் வளர்ச்சியையும்பொறுத்து அமைவதாக அறிஞர் கருதுகின்றனர். இந்நிலையைக் காணுகின்ற பொழுது, மொழிபெயர்ப்புகள் இலக்கியத்தைப் பாதிக்கின்றன எனலாம். எவ்வாறென்றால் அவைகள் இலக்கியத்தினை வழிப்படுத்தவும் வரைப்படுத்தவும் செய்கின்றன. இதையே மொழிபெயர்ப்பின் நோக்கங்களில் ஒன்றாகச் சுட்டலாம். "மூல எழுத்துப்போல நூலில், கவிதை, நாடகம், விமரிசனம் போன்ற துறைகள் போல இலக்கியத்தில் மொழிபெயர்ப்பும் ஓர் அவசியமான துறை. மொழி பெயர்ப்பு வேகம் அதிகமாக இருக்கும் காலகட்டத்தில் தான் இலக்கிய வேகமும் ஒரு மொழியில் சுத்தமாக இருக்கும் என்பதற்கு உதாரணமாக உலக இலக்கியச் சரித்திரத்தில் பல பகுதிகளைச் சொல்லலாம். 1945-இல் தமிழ் இலக்கியம் ஓரளவிற்குத் தேக்கம் பெற்றது. அதன் விளைவாக 1950 முதல் சுமார் 1965 வரையில் மொழிபெயர்ப்பும் தேக்கமுற்றது"[14] என்பது நோக்கத்தின் சான்றாக அமைகின்றது.

மொழி பெயர்ப்பைப் பொறுத்த அளவில் மிகவும் முக்கிய மான பணி, மற்றொரு மொழியிலுள்ள கருத்தினைத் தாய் மொழிக்கு மாற்றுவதாகும். இப்பணியில் கருத்தைப் பெயர்க்கின்ற வேளையில், மொழிபெயர்க்கப்படுகின்ற மொழியின் அழகும், வண்மையும், மேன்மையும் வெளிப்படுகின்ற நிலையினைக்காண் கிறோம். இதனையும் மொழிபெயர்ப்புப் பணியின் நோக்கங்களில் ஒன்று எனலாம். அதோடு அம்மொழியில் புதிய சொற்கள், சொற் றொடர்கள் அமைக்கப்படுகின்ற நிலையைக் காண்கிறோம். இதற்குச் சான்றாகப் பைபிளைப் பற்றி ஜவஹர்லால் நேரு மொழி பெயர்ப்பின் மேன்மையை 'Discovery of India' என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

"பைபிளின் பிராமணிகமான மூலத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பில் கடும் உழைப்பையும், பக்தி ஈடுபாட்டையும் ஆழ்ந்த நோக்கத்தையும் காண்கிறோம். மேலும் அதன் மூலமாக ஆங்கில மொழிக்கு ஒரு புனிதமான மறை நூல் கிடைத்திருப்பது மட்டு மல்ல. அம்மொழிக்கு வண்மையும், மேன்மையும் மாண்பும் கிடைத்திருக்கின்றன."[15]

14. க. நா. சுப்ரமணியம்- "சுதந்திரத்திற்குப் பிறகு மொழி பெயர்ப்புகள்: சுடர்-1972-ப. 41-46.
15, மகரம் (தொகுப்பாசிரியர்)-எழுதுவது எப்படி, ப. 375,

மேற்கூறிய நோக்கங்களைப் பொதுவாக எல்லா மொழி பெயர்ப்புப் பணியின் நோக்கமாகக் கொள்ளலாம். இதோடு நிறுவனங்களும் மொழிபெயர்ப்புப் பணியிலே ஈடுபடுகின்ற தன்மையைக் காண்கிறோம். அவ்வாறு ஈடுபடுவதன் காரணமென்ன என்பதைப் பற்றி நாம் அடுத்துக் காணலாம்.

நிறுவனங்கள் மொழிபெயர்ப்புப் பணியிலே ஈடுபடுவதற்கு ஒவ்வொரு மொழி இலக்கியங்களையும், அம்மொழி அறியாதோர்க்கு அறிமுகஞ் செய்வித்தல் 'என்ற எண்ணத்தினாலாகும். இந்த வகையிலே நேஷனல்புக்டிரஸ்ட் நிறுவனம் இம்மாதிரியான சிறந்த பணிகளிலே ஈடுபட்டு வருகின்றது. நேஷனல் புக்டிரஸ்ட் நிறுவனத்தின் மொழிபெயர்ப்புப் படையல்களிலே ஒன்றான 'கறை படிந்த நிலம்' பணீசுவரிநாத் ரேணுவின் மூலத்திலிருந்து (மைலா ஆஞ்சல்) 1974 ஆம் ஆண்டு மொழிபெயர்க்கப்பட்டது. அதில் சிவதான சிங்சௌஹான் என்பவர் முன்னுரை எழுதியிருக்கிறார். அவர் அதில் அந்நாவலைப் பற்றிய தன் கருத்தாக "எந்த இந்திய மொழி வாசகரும், இதைத் தம் மொழியில் படித்து, இதன் கதையையும், பாத்திரங்களின் உயிர்த்துடிப்பையும், துயரம் துன்பங்களையும் புரிந்து கொள்வதோடு, இவை மூலமாக இந்தியப் பொது ஜீவனத்தின் ஜீவிய நிலையை உணர்வார்கள். அப்பொழுது மொழி நடை தடங்கலாக இராது; இலக்கியக்கலைப் பொலிவை உணர முடியாமல் போகாது"[16] என்று கூறுகிறார். மேற்கூறிய எண்ணமானது நிறுவனங்கள் மொழிபெயர்ப்புப் பணியிலே ஈடுபடுகின்றதன் நோக்கத்தினைக் கூறுகிறது.

இந்த வகையிலே ரஜனிகாந்த் பர்தலீயின் 'மலை நாட்டு மங்கை' என்னும் அஸ்ஸாமிய நாவல் திரு கா. அப்பாத்துரை மூலமாகத் தமிழில் உலா வந்துள்ளது. இம்மொழிபெயர்ப்பு நூலின் முன்னுரையில் பிரிஞ்சிகுமார் பருவா என்பவர் "நாவல் போன்ற அகன்றதோர் இலக்கிய அருங்கலைப் படைப்பினை ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு வடிவு பெயர்ப்பதென்பது எளிதான காரியமன்று. அதிலும் சமுதாயப் பின்னணியும் தாய்நில இயற்கை அழகு நயங்களும் மொழியுடன் மொழியாகப்பின்னி இழைந்துள்ள ஒரு மூல நாவல் வகையில், இம்முயற்சி இன்னும் சிக்கல் வாய்ந்ததாகும். குறிப்பிட்ட இந்நாவல் வகையில் மூல நூலுக்குரிய தனியழகையும் கவர்ச்சியையும் மொழிபெயர்ப்பு

16. சௌரி-'கறை படிந்த நிலம்'-மு. ப. 1977; முன்னுரை xii, நேஷனல் புக் டிரஸ்ட்.

எந்த அளவில் புத்துயிர்ப்படுத்திக் காட்டியுள்ளது என்பது வாசகர்களின் மதிப்பீட்டுக்கே உரியது. இச்சமுதாய நாவலை இந்தியிலும் (தற்போது தமிழிலும்) மொழிபெயர்த்து அதற்குரிய இரசிகர் குழாத்தின் தொகையைப் பெருக்கி, அந்த ஜனசமுதாயத்திற்குரிய இச்சிற்றோவியத்தைத் தமிழ்நாட்டு மக்கள்கண் முன் கொண்டு வந்த சாகித்திய அக்காதெமியின் சேவை போற்றுதலுக்குரிய தாகும்,''[17] என்று குறிப்பிடுகின்றார். இதை நாம் ஒரு நிறுவனத்தின் மொழிபெயர்ப்புச் சேவை என்று சொல்லலாம்.

பண்பாட்டை, பழக்க வழக்கங்களை அறிமுகஞ் செய்வதிலே சாகித்திய அக்காதெமி நிறுவனம் மிகுந்த அக்கறை காட்டுவது தெரிந்ததே. இந்தியப் பண்பாட்டை மட்டுமல்லாது, மேலை நாட்டுப் பண்பாட்டையும் அறிமுகஞ் செய்கின்றது. ஐரோப்பிய நாடகாசிரியருள் ஒருவரான ஹென்றி இப்சனின் 'காட்டு வாத்து' (Wild duck) என்ற நாடகத்தைத் தமிழிலே திரு துரை. அரங்கசாமி பெயர்த்துள்ளார். இதற்கு உறுதுணையாக யுனெஸ்கோ நிறுவனம் அமைந்து இந்நூலை வெளியிட்டிருக்கின்றது. இவ் யுனெஸ்கோ நிறுவனத்தின் நோக்கம் எதுவெனில் பண்பாடுகளைப் பரஸ்பரம் அறிமுகஞ் செய்வதே என அப்புத்தகத்தின் இரண்டாவது பக்கத்தில் ''கீழ் நாட்டு மேல் நாட்டுப் பண்பாடுகளைப் பரஸ்பரம் அறிமுகம் செய்வதற்காக யுனெஸ்கோ மேற்கொண்டுள்ள பெருந்திட்டத்தில் ஒரு பணியாக இந்நூல் யுனெஸ்கோ உதவியுடன் வெளியிடப் பெறுகின்றது''[18] என்று கூறியுள்ளது.

தென்னிந்திய மொழிகள் புத்தக டிரஸ்ட், நூல் வெளியீட்டுத் திட்டத்தில், தென்னிந்திய மொழி நூல்களுள் ஒன்றிலிருந்து ஒன்றுக்கு மொழிபெயர்க்கின்ற பணியினைச் சிறப்பாகச் செய்து வருகிறது. இப்பணி ''எழுதப் படிக்கத் தெரிந்த ஏராளமான மக்களைத் தங்கள் அறிவைப் பெருக்கிக் கொள்ள உண்மையான ஆர்வம் கொள்ளும்படி செய்து, அவர்களைப் பழக்கமாகப் படித்து வரும் தொகையினருடன் இணைத்து, அவர்கள் தாங்களாகவே மிகத் திறம் உடையவர்களாவதற்கு இவைகள் உறுதுணை ஆகும் என்பது எனது துணிபு''[19] என்ற கூற்றினைச் 'சிவம்' என்று தமிழில்

---

17. கா. அப்பாத்துரை-'மலை நாட்டு மங்கை'-மு. ப 1968, சாகித்திய அக்காதெமி; ப. 9.
18. துரை அரங்கசாமி - 'காட்டு வாத்து' - அட்டையில் உள்ளது.
19. எஸ். கே. சீதாதேவி- 'சிவம்'; மு. ப. ஜூலை 1959; ப. 6,

எஸ். கே. சீதாதேவி அவர்கள் பெயர்த்த 'சிறந்த தெலுங்கு நாடகாசிரியர்கள் அறுவரின் நாடகத் தொகுப்பின் நோக்கமாக வும், பயனாகவும் கொள்ளலாம்.

சாகித்திய அக்காதெமி நிறுவனம், தென்னிந்திய மொழி நூல்களை ஒன்றிலிருந்து ஒன்றுக்குப் பெயர்க்காமல், நம் பண் பாட்டை ஆங்கிலேயர்களுக்கும், மற்ற இந்திய மொழியினர்க்கும் அறிமுகஞ் செய்கின்ற எண்ணத்திலே மலையாள மொழியிலே சிறந்து விளங்குகின்ற கதாசிரியர் பி. கேசவ தேவ் அவர் களின் நாவலை 'Neighbours' என்று ஆங்கிலத்திலே பி. கே. ரவீந்திரநாத் அவர்களை மொழி பெயர்க்கப் பணித்தது.

இந்திய எழுத்தாளர் கூட்டுறவு சங்கத்தின் முக்கிய நோக்கம் இந்திய இலக்கியங்களுக்கிடையே ஓர் உறவை ஏற்படுத்த வேண்டு மென்பதாகும். அதற்கு மொழிபெயர்ப்பு நூல்கள் உறுதுணையாக அமைகின்றதைக் காணமுடிகின்றது. மொழிபெயர்ப்புகளினால் இலக்கியங்களுக்கிடையே ஒரு பரிவர்த்தனை அல்லது பரிமாற்றம் நிகழ்வதற்கு வாய்ப்பு உள்ளது. அவ்வாறு பரிமாற்றம் நிகழும் போது, இலக்கியங்களுக்கிடையே இருக்கிற பொதுக் கூறுகளை அறிந்து கொள்ள முடிகின்றது:

இவ்வாறாக நிறுவனங்களும் மொழி பெயர்ப்புப் பணியிலே ஈடுபடுகின்றன. அவை சில சீரிய நோக்கங்களுக்காக அந்தப் பணி யிலே ஈடுபடுகின்ற தன்மையைக் கண்டோம். மேலே கூறிய நிறுவனங்கள் மட்டுமல்லாது மற்ற நிறுவனங்களும் மொழி பெயர்ப்புப் பணியிலே ஈடுபடலாம். அதனை இடம் கருதி முழுமை யாகக் கூற இயலவில்லை.

நிறுவனங்களோடு போட்டி போட்டுக் கொண்டு தனிமனிதர் களும் மொழிபெயர்ப்புப் பணியிலே தங்களை ஈடுபடுத்திக் கொள் கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கென்று தனித்த நோக்கங்களைக் கொண்டுள்ளனர் என்பதைச் சில சான்றுகள் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

'சுதந்திரமும், பண்பாடும்' என்ற, இந்தியத் தத்துவ அறிஞரான டாக்டர் ராதாகிருஷ்ணனின் நூல் திரு. வி. எஸ். வி. இராகவன் அவர்களால் தமிழ் கூறும் நல் உலகத்திற்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன் நோக்கம் என்ன என்று புத்தகத்தைப் படித்த பொழுது முன்னுரையில் "Freedom and culture" என்ற பெயருடன் மெஸர்ஸ் ஜி. ஏ. நடேசன் அண்டு கம்பெனி சென்னை-

அவர்களால் தொகுத்து வெளியிடப்பட்டதுமான ஆங்கில நூலின் தமிழ்ப் பெயர்ப்பே இச்சிறுநூல் ஆகும். முதல் நூலில் காணப்படும் அத்துணை வேகமும், ஆழ்ந்த கருத்தும், சொற் கோவை வனப்பும் மொழி பெயர்ப்பில் அப்படியே கொண்டு வருதல் இயலாதென் பதை எவரும் மறுக்க முடியாததாகும். ஆயினும், டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் மேதையைப் போற்றும் அன்பர்கள் குழுவில் யானும் ஒருவன் என்ற காரணத்தைக் கொண்டு அன்பின் மேலீட்டால் அவருடைய பொன்மொழிகளைத் தமிழில் பெயர்க்கத் துணிந்தேன்''[20] என்று வி. எஸ். வி. இராகவன் அவர்களே இம்மொழிபெயர்ப்பு தோன்றியதன் நோக்கத்தினை உரைத்துள்ளார். இருப்பினும் தமிழிலே தத்துவ நூல்கள் ஏராளம் இருந்தும் இம்மாதிரியான மொழிபெயர்ப்புகள் ஓர் உலகளாவிய தத்துவத்தை அறிமுகஞ் செய்கின்றன.

காவியங்களை மொழிபெயர்ப்பதென்பது ஒரு சிறந்த நோக்க மாகக் கருதப்பட்டது, இன்றும் கருதப்படுகிறது. இதற்கு வால்மீகி இராமாயணத்தைத் தமிழிலே யாத்த கம்பனுடைய அற்புதப் படைப்பை நினைவு கூர்கின்றோம். இதனை 'எண்ணும் போது பண்டைய காலத்திலிருந்தே காவியங்கள் மற்றைய மொழிகளிலே பெயர்க்கப்பட வேண்டுமென்ற ஆவல், நோக்கம் தெள்ளத் தெளிவென விளங்குகிறது. தெலுங்கு பஞ்ச காவியங் களில் ஒன்றான 'விஷத்தில் அமுதம்' சீதாதேவி அவர்களால் தமிழ் வடிவம் பெற்றுள்ளது. இதன் மூலநூல் ஆசிரியர் அல்லஸானி பெத்தண்ணா. இம் மொழிபெயர்ப்பு தோன்றியதன் காரணம் என்ன என்று மொழி பெயர்ப்பாளரே 'வாசகர்களுக்கு' என்ற தலைப்பில் ''இந்த கதைப் பகுதியைப் புதிய நடையில் எழுதினால் இனிக்கும் என்ற நினைவில் இதைத் தமிழில் மொழி பெயர்த்தேன்''[21] என்று கூறுவதிலிருந்து இதன் நோக்கத்தினை உணரலாம்.

மொழி பெயர்ப்பு நூல்கள் தோன்றுவதன் நோக்கம், ஒவ்வொரு மொழிபெயர்ப்பாளரைப் பொறுத்த அளவில் வேறு படுகின்றது. இங்கு 'ஜான் மில்ற்றனார்' அருளிச் செய்த 'பூங்காவனப் பிரளயம்' முதலிரு காண்டங்களின் தமிழாக்கம்

20. வி. எஸ். வி. இராகவன், சுதந்திரமும், பண்பாடும்; முன்னுரை.

21. சீதாதேவி - 'விஷத்தில் அமுதம்'; மு. ப. 1960; அமுத நிலையம், சென்னை 14,

ஆசிரியர் சாமுவேல் வேதநாயகம் தாமஸ் அவர்களால் படைக்கப்பட்டுள்ளது. இதன் நோக்கம் என்ன? என்று சிந்தித்த பொழுது அதற்கு விடையாக, "இம்மொழிபெயர்ப்பின் மூலம், பண்புச் சொற்கள், அடைமொழிகள், கிறிஸ்தவ சமய சங்கேதச் சொற்களுக்குப் பஞ்சப்பட்டிருக்கும் தாய்மொழிக்கு வளம் கூட்டி, கவுரவம் உண்டாக்கி, ஆங்கிலத்தின் தரத்துக்கு அதை உயர்த்த முயன்றிருக்கிறார்"[22] என்ற பதிப்பாசிரியர்களின் கூற்று இம் மொழிபெயர்ப்பின் நோக்கத்தினை அறிவிக்கின்றது.

"சுதந்திரம் பெற்றோம், குடியரசு பெற்றோம், இலக்கிய மறு மலர்ச்சி கண்டோம். ஆனால் பிற நாட்டு இலக்கியங்களையும், பண்பாடு, நாகரிகம் என்பவற்றையும் அறிந்து கொண்ட அளவுக்கு இலங்கையில் வாழும் சகோதரர்களாகிய இருபெரும் சாகித்தி யினரான தமிழர், சிங்களவர் ஒருவரையொருவர் முழுமையாக அறிந்து கொள்ளவில்லை. ஒருவர் பண்பாட்டையும், நாகரிகத்தை யும் மற்றவர் முழுமையாக அறிந்து கொள்ளவில்லை. அவ்வாறு அறிந்து கொள்வதற்கு வாய்ப்பான இலக்கியங்கள் போதியளவு வெளிவரவில்லை. ஆக்க பூர்வமான முயற்சிகள் நடைபெறவில்லை என்று பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது. எனவே ஈழத்து இலக்கியங்களும், சிறுகதைகளும் தாம் இக்குறைபாட்டை நிறைவு செய்ய வேண்டும்.

ஈழத்து இலக்கியம் என்னும் போது அது தமிழ் இலக்கியத்தை மட்டும் கருதுவதாக அமையாது, இரு பகுதி இலக்கியங்களையும் சுட்டுவதாகவே அமையும். அந்த வகையில் இந்நாட்டிலுள்ள தமிழர்களும், சிங்களவர்களும் ஒருவர் இலக்கியங்களை மற்றவர் அறிந்திருத்தல் தேவை. இதற்காகச் சிங்கள நூல்கள் தமிழிலும், தமிழ் நூல்கள் சிங்களத்திலும் மொழி பெயர்க்கப்படலாம். இது இலக்கியப் பரிவர்த்தனையாக மிளிரும்"[23] சேதுபந்தனத்தை மொழிபெயர்த்த ஆசிரியர் திரு. த. கனகரத்தினம் அவர்களின் எண்ணமாக இது அமைகிறது.

மொழிபெயர்ப்பைப் பொறுத்த அளவில், பொதுவான நோக்கங்கள் அமைவது போன்று, மொழிபெயர்ப்பாளர்களுக்

---

22. சாமுவேல் வேதநாயம் தாமஸ் - பூங்காவனப்பிரளயம் மு. ப. 1887;—ப. VII.
23. த. கனகரத்தினம்— 'சேதுபந்தனம்' - மு. ப. 1979 VII& Viii - கொழும்பு தமிழ்ச் சங்கம்.

கென்று சில தனித்த நோக்கங்கள் அமைவதையும் ஏற்கெனவே கண்டோம். ஆரார் எனும் அறிஞர் 'காண்டர்பரிக் கதைகள்' என்ற மொழிபெயர்ப்பு நூலின் முன்னுரையில் "பிறமொழி இலக்கிய அறிவு, பொழுது போக்கு, உரத்த சிந்தனை"[24] இவை மொழி பெயர்ப்பின் நோக்கங்களாக அமைய வேண்டுமெனக் கருது கின்றார்.

இம்மாதிரியாக மொழிபெயர்ப்பாளர்களுக்கென்று ஏற்படு கின்ற சில தனித்த நோக்கங்களில், மொழிபெயர்ப்பாளர்களுக்கு ஒரு குறிப்பிட்ட நூலின் பாலுள்ள பற்றும் மொழி பெயர்க்கத் தூண்டுவதனை ராஜாராம் தனது 'பிறிதொரு இந்திரஜித்' நாடகத்தின் முன்னுரையில் "இந்த நாடகத்தை ஷௌவனிக் குழுவின் தயாரிப்பின் கீழ் முத்தாங்கள் அரங்கில் பார்த்த வுடனேயே இதைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும் என்று எனக்குத் தோன்றியது"[25] என்பதினின்றும் பெறலாம்.

மொழிபெயர்ப்புப் பணியிலே நம் சிந்து நதிக்கவி பாரதி கொண்டிருந்த அளப்பரிய ஆர்வம் சொல்லிலடங்காது. "ஐரோப்பாவில் வழங்கும் லௌகிக சாஸ்திரங்களைத் தமிழில் எழுத வேண்டுமென்று பல பண்டிதர் மிகவும் ஆவலோடு இருக்கி றார்கள். ஏற்கெனவே சில பகுதிகளின் ஆரம்பம் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறது. இந்த முயற்சி மேன்மேலும் வளரும்; வளர்ந்து தீர வேண்டும். அந்த சாஸ்திரங்களையெல்லாம் ஏககாலத்திலே தமிழிலே எழுதி முடிப்பதற்காக ஒரு பண்டித சங்கம் ஏற்படக் கூடும்"[26] என்ற பாரதியின் கூற்றும் அவருடைய நோக்கத்திற்கு சான்று பகர்கின்றது எனலாம்.

மொழிபெயர்ப்புப் பணியின் நோக்கங்கள் பலவாறாக இருப் பினும் அதனால் ஏற்படுகின்றபலன் அல்லது பயன்சமுதாயத்தைச் சிறப்படையச் செய்கின்றன. இன்றைய நிலையில் இலக்கிய வகை கள் பல தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தவை 'பிற மொழியிலிருந்து வந்து புகுந்த நூல்கள் தான், என்பதில் எள்ளள

---

24. ஆரார் — 'காண்டர்பரிக் கதைகள்' - மு. ப மார்ச்1979; IX- அறிவரங்கம், திருப்பத்தூர்

25. ராஜாராம் - பிறிதொரு இந்திரஜித் - மு. ப. டிசம்பர் 1978; ப. 5.

26. மு. கோவிந்தராஜன்; மொழித்திறன்களும் சில சிக்கல் களும் - மு. ப. 1980.ப. 210

வும் ஐயமில்லை. சிறுகதை, புதினம், உரைநடை போன்ற துறை கள் ஏற்பட இதுவே வழி வகுத்தது. ஒரு புதிய இலக்கிய வகை யைத் தோற்றுவிக்கிற அளவிற்கு மொழிபெயர்ப்புப்பணி ஒரு சிறந்த சீரிய நோக்கத்தினையும் பெற்றுள்ளது எனில் மிகை யாகாது.

"தமிழ்நாட்டில் நாவல் வளர்வதற்குள் மற்றநாடுகளில் பல வகைக் கதைகள் பெருகி வெளியாகி விட்டன. அவற்றைப் படித்த தமிழர், மொழிபெயர்க்கத் தலைப்பட்டனர். மொழிபெயர்ப்புக் கதைகள் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தன. ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷ்யா, வங்காளி முதலிய மொழிகளின் கதைகளே பெரும்பாலும் தமிழர் சற்கும் கதைகளாக இருந்தன. அதனால், தமிழ் மொழி யில் இந்தப் புதிய இலக்கிய வகை தனக்கென ஒரு பெற்றியோடு வளர்வதற்கு முன்பே பிறநாட்டுக் கதைகள் வந்து வழி வகுத்தன என்று கூறலாம். அவற்றின் செல்வாக்கே தமிழ் நாவல்களில் மிகுந்தது எனலாம்"[27] என்ற கூற்றும் புதிய இலக்கிய வகை தோன்றுவதற்கான சூழ்நிலையை மொழிபெயர்ப்புப் பணி செய்தது எனபதற்குச் சான்றாக அமைகின்றது.

பொதுவாக மொழிபெயர்ப்பு நூல்கள் மற்ற மாநிலங்களைப் பற்றி அறிமுகம் செய்கின்ற நிலையிலே அமைகின்றன. இதன் நோக்கம் அறிமுகம் என்ற ஒன்றாக இருந்தாலும் அதன் பயன் ஒப்பிலக்கிய ஆராய்ச்சிக்கு வழிவகுக்கக் கூடியதாக அமைகிறது. திரு பி. ஸி. ராய் சௌத்ரியின் 'பீகார் மாநில நாட்டுக் கதைகள்' திருமதி ராஜம் கிருஷ்ணன் அவர்களால் தமிழில் பெயர்க்கப் பட்டுள்ளது. இது 'இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளில் வழங்கி வரும் நாட்டுக் கதைகள் பெரும்பாலும் ஒரு பொதுத் தன்மையைக் கொண்டிருப்பதைக் குறித்த ஒரு முறையான ஆராய்ச்சிக்கு வழி வகுக்கும்.

பொதுவாக மொழிபெயர்ப்பின் முதன்மைப் பணி கருத்தைப் பெயர்த்தலே. மற்றைய மொழியிலுள்ள கருத்துக்களை அறிய வேண்டுமென்ற ஆவல் கொண்டவர்கள் ஏராளமாக இருக்கின் றனர். அதனால் அவர்களுக்காகத் தான் மொழிபெயர்ப்புத் தோன்றியது. இந்த ஆவல் கொண்டவர்களை நான்கு பிரிவிற்குள் அடக்கலாம்.

---

27. மு. வரதராசனார்; இலக்கிய மரபு; ப. 160

1. மூலமொழி அறியாதவர்கள். ஆனால் மூலமொழியிலுள்ள இலக்கியத்தின் மீது பற்றுக் கொண்டவர்கள். அவர்கள் மூல மொழியின் இலக்கியத்தில் அமைந்த ஒரு வார்த்தையைக் கூடப் புரிந்து கொள்ள முடியாதவர்கள்.

2. மூலமொழியினைக் கற்றுக் கொள்கின்றவர்கள். மூல மொழி இலக்கியத்தை மொழிபெயர்ப்பு மூலமாகக் கற்கின்ற வர்கள்.

3. மூலமொழியினை முன்பு கற்று, இப்போது பல வேலைகள் காரணமாக மறந்து விட்டவர்கள்.

4. மூலமொழியினை நன்கு கற்றறிந்தவர்கள், இன்றும் அதனை அறிந்தவர்கள்.

இந்நால்வரும் பல்வேறு காரணங்களுக்காக மொழிபெயர்ப் பினைப் பயன்படுத்துகின்றார்கள். பல்வேறு முறைகளில், பல்வேறு வகைகளில் அல்லது கருவிகளினால், பல்வேறு காரணத்திற்காக மொழிபெயர்ப்பினைப் பயன்படுத்துவதால் ஒரேவகையான மொழி பெயர்ப்பு அவர்களுக்குப் பயன்படாது. மொழிபெயர்ப்பினைப் பயன்படுத்துகின்ற காரணத்தைப் பொறுத்து, மொழிபெயர்ப்பின் நோக்கம் நிறைவேறுகிறது. மொழிபெயர்ப்பைப் பயன்படுத்து கின்ற மக்களை மனதில் கொண்டு நாம் மொழிபெயர்ப்புப் பணியிலே ஈடுபட வேண்டும். எந்த நில மக்களுக்கு, எந்த மொழி யில் தருகிறோம் என்பதை நினைவில் கொண்டு, அவர்களுக்கு எளிதில் கருத்து புரியக் கூடியதாக மொழிபெயர்ப்பு அமைய வேண்டும்.

பொதுவாக, மொழிபெயர்ப்புப் பணி ஏதாவது ஒரு பயன் பாட்டு நோக்கத்துடன் தான் செயல்பட்டு வருகின்றது.

மொழிபெயர்ப்பின் நோக்கத்தினைக் கீழ்க்கண்டவாறு சுருக்க மாகக் கூறலாம்.

1. நாடுகளுக்கிடையே ஒரு நல்லெண்ணத்தினை, கூட்டுறவினை வளர்ப்பது.

2. சிறந்த படைப்புகளை மொழிபெயர்த்தல்.

3. ஒவ்வொரு மொழி இலக்கியத்தையும், மற்ற மொழி யினருக்கு அறிமுகஞ் செய்வித்தல்.

4 மக்களின் பண்பாட்டை நமக்கு இனங்காட்டுதல்.

5. அறிவியல் நூல்களை வெளியிடுதல்.

6. தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்குதல்

7. உலகத்தின் தலைசிறந்த தலைவர்களின் வரலாற்றை எல்லோருக்கும் அறிவிக்கின்ற நோக்கத்தோடு செய்தல்.

8. மொழியினை அளவிடுதல்.

மேற்கூறிய நிலைகளிலே மொழிபெயர்ப்புப் பணி நடைபெற்று வருகின்றது. இதன் பயன்கள்

1. ஒப்பிலக்கிய ஆராய்ச்சிக்கு வழி வகுக்கின்றது.

2. மற்றமொழி, இலக்கியத்தைப் பற்றிய அறிவைப் பெற முடிகின்றது.

3. அறிவியல் கண்டுபிடிப்புகளை அறிந்துகொள்ளமுடிகிறது.

4. இலக்கிய மொழிபெயர்ப்புப் பணியினால், இலக்கியங்களுக்கிடையே அவைகள் பிரதிபலிக்கின்ற பண்பாடுகளுக்கிடையே ஒப்புமையைக் கண்டு உலக ஒருமைப்பாட்டிற்கு வழி கோலுகிறது.

5. உலகத்தில் தலைசிறந்து விளங்கியவர்களின் வரலாற்றைப் படிக்கச் செய்த பயனோடு அவர்களைப் போன்று விளங்க முயற்சிக்க வேண்டும் என்ற இலட்சியத்தை உருவாக்குகிறது.

இவ்வாறாக, ஒரு சீரிய பணியின் நோக்கமும் விளைவும் ஒரு நற்சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற லட்சியத்தினை நோக்கி நடைபோடுகின்ற செயல்திறனைக் காண்கிறோம்.

4

மொழிபெயர்ப்பு—கொள்கைகள்

இன்றைய நிலையைப் பொறுத்த அளவில் மொழிபெயர்ப்புக் கலை, இலக்கியத் துறையை மட்டுமல்லாது அறிவியல், சட்டம், பொருளாதாரம் வரலாறு, கலைகள் எனப் பல்வேறு துறைகளையும் ஊடுருவி நிற்கின்றது. பொதுவாகக் கீழ்க்கண்ட நிலைகளில் இவற்றை வகைப்படுத்தலாம்.

இலக்கியம் இதில் முதலிடமும் அறிவியல் துறைகள் இரண்டாமிடமும் பெறுகின்றன. சமயம், கலைகள், உரைநடை இவை முறையே மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது இடத்தைப் பெற்றுள்ளன.

ஒவ்வொரு துறையின் இயல்பிற்கேற்ப மொழிபெயர்த்தல் இன்றியமையாதது ஆதலின் இவை அனைத்திற்கும் ஒரே அளவு கோலினைப் பயன்படுத்துதல் பொருந்தாது. மேற்கூறிய துறைகள் மொழிபெயர்ப்பைப் பொறுத்தவரை சில அடிப்படைக் கூறுகளால் ஒன்றுபடுகின்றன. மற்ற நிலைகளில் தமக்கெனச் சில சிறப்புக் கூறுகளைக் கொண்டுள்ளன. இவ்விரண்டினையுமே மொழி பெயர்ப்புக் கொள்கைகளாக ஏற்க முடியும். முதலாவதாக அனைத்தின் பொதுக்கூறாக அமைவனவற்றைக் காணலாம். இவ் வடிப்படைக் கொள்கைகள் 'மொழிபெயர்ப்பு' என்ற வரன் முறையை ஏற்படுத்துகின்றன. கீழ்க்கண்ட நிலைகளிலே இவ்வடிப் படைக் கூறுகள் அமைந்திருக்கின்றன.

அடிப்படைக் கூறுகள்

1. முரண்பாடு தவிர்த்தல்

மூலநூலின் கருத்துகளை மற்றொரு மொழிக்கு மாற்றுதல் என்ற நிலையில், மூலநூலின் கருத்துகளில் சிறிதும் மாறுபாடு ஏற்படாது இருத்தல் மிகத் தேவையாகும். அவற்றுள் முரண்பாடு தோன்றின் மொழிபெயர்ப்பின் நோக்கம் தடைப்படும். எனவே தான் மொழிபெயர்ப்பாளர் மூலநூலினை நன்கு புரிந்து கொண்டு அதன்பின் மொழிபெயர்ப்பில் இறங்க வேண்டும்.

"மொழிபெயர்ப்பென்பது எளிதான வேலையல்ல. மூலப் பாடம் எழுதவல்ல ஆற்றலுடையவர்களே மொழிபெயர்ப்பில் இறங்க முடியும். மூலப்பாடம் எழுதுபவர்க்காயினும் ஒரு மொழிப் பயிற்சி போதுமானது. மொழிபெயர்ப்பாளர்க்கோ இருமொழி களிலும் தேர்ந்த கல்விஞானம் இருக்க வேண்டுவது இன்றியமை யாதது. சொல்லுக்குச் சொல் பெயர்த்தடுக்குவது மொழிபெயர்ப் பாகாது. பெயர்க்கப்பட வேண்டியது பொருளே. அங்ஙனம் பெயர்க்கும் போது அந்தந்த நாட்டு வழக்குகளையும், மரபுகளை யும் நன்கு தெரிந்திருத்தல் இன்றியமையாதது"[1] என்ற கவிமணி யின் கூற்றை இணைத்து நோக்கும் போது கருத்து முரண் தோன்றா வகையில் நூலை மொழிபெயர்ப்பதற்கு மொழி பெயர்ப்பாளருக்கு இருக்க வேண்டிய திறன் புலப்படும். முரண் பாடுகள் இருப்பின் அவை தவறான கருத்துகளை மாற்று மொழி யினருக்கு அறிமுகப்படுத்துவதோடு மொழிபெயர்ப்பினின்று மாறி தழுவலாகி விடும். இதனை ஒரு குறளுக்குள்ள சில ஆங்கில மொழி பெயர்ப்பு கொண்டு விளக்கலாம்.

> "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
> ஆகுல நீரபிற" என்பது குறள், (34) இது
>
> "Let him who does virtuous deeds be of Spotless mind to that extend is virtue all else is vain show."
> (W. H. Drew & John Lazarus.)

என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இம் மொழிபெயர்ப்பு அறச் செயல்களைச் செய்வதில் குற்றமில்லாத மனத்தினை உடையனவாக இருத்தல் அறம் என்று மொழி பெயர்த்து மூலத்தினின்றும் மாறுபடுகிறது. குற்றமற்ற மனதினை

1. மு. கோவிந்தராஜன்—மொழித் திறன்களும் சில சிக்கல் களும், ப. 215.

உடையதாயிருப்பதுவே அறம் என்று மூலம் உணர்த்த இங்குப் பொருள் வேறுபாடு எழுகிறது. இது மொழிபெயர்ப்பாளர் கொண்டுள்ள கருத்து மாற்றத்தின் விளைவு. இதோடு ஜி. யூ. போப் என்பவர் இதே குறளை

2. "Spotless be thou in mind, this only merits virtue's name;

All else, mere pomp of idle sound, no real worth can claim."

இதனையே

3. "Virtue is nothing but becoming pure in mind, The rest is nothing but empty and pompous noise" என S.R.V. Arasu என்பவர் மொழி பெயர்த்துள்ளார்.

4. "Be pure in mind, its virtues claim,
All else is only vain acelaim" என,

கஸ்தூரி சீனிவாசன் அவர்கள் பெயர்த்துள்ளார்கள். இதையே

5. Abolishing filthy thoughts from our mind is virtue;

All the other virtuous acts cannot be equated with it

என்றும் பெயர்க்கலாம். இரண்டாவது மொழிபெயர்ப்பு சற்று விளக்கமாக அமைகின்றதைப் பார்க்க முடிகின்றது. இதனை நாம் உண்மை மொழிபெயர்ப்பு என்று முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியுமாஎன்றால், ஏற்றுக்கொள்ளலாம் என்றே தோன்றுகிறது. ஏனென்றால் இந்த மொழிபெயர்ப்பு மூலத்தினை விளக்கி நிற்கின்றது. இதனை நாம் தவறு என்று சுட்டமுடியாது. மூலத்தின் பொருளிலிருந்து மாறுபட்டு உரைத்தால் தான், மொழிபெயர்ப்பு தவறு என்று சுட்டலாம். மூன்றாவது, நான்காவது மொழி பெயர்ப்புகள் ஓரளவுக்கு உண்மை மொழிபெயர்ப்புகளாக வெளி வந்துள்ளன. இரண்டு மொழிபெயர்ப்புகளும், வேறுபட்ட சொற் களிலே ஒரே கருத்தைக் கூறி நிற்கின்றன. ஐந்தாவது மொழி பெயர்ப்பானது ஒரு விளக்க மொழிபெயர்ப்பு என்றமைந்து, கருத்தினை விளக்கி நிற்கின்றது. இதனையும் நாம் மொழி பெயர்ப்பு எனக் கூறலாமா என்றால், கருத்தினைத் தெளிவாகப் புரிந்து கொண்டு கூறியிருப்பதால், அதனை மொழிபெயர்ப்பு என்று கூறுவதில் தவறில்லை.

முதல் மொழிபெயர்ப்பில் பொருள் வேறுபாடு ஏற்படுவதனால், மூலநூலின் கருத்தைத் தவறாகப் புரிந்து கொள்ள வாய்ப்பேற்படுகிறது. இங்கு மூலநூலாசிரியனை விட மொழிபெயர்ப்பாளரே முன் நிற்கிறார். இரண்டாவது, மூன்றாவது ஐந்தாவது மொழிபெயர்ப்புகள் விளக்கங்களாக அமைகின்றன. ஆனால் நான்காவது மொழிபெயர்ப்புதான், சுருக்கமாகவும், அதே நேரத்தில் ஆங்கிலக் கவிதையில் திருக்குறளைக் கூறுகின்றதாகவும் அமைகின்றது.

இம்மாதிரியாகப் பல மொழி பெயர்ப்புகள் தோன்றுவதன் காரணம், தவறாக மொழிபெயர்க்கப்பட்டிருப்பதும், மற்ற மொழிபெயர்ப்புகளை விட நாம் சிறப்பாக மொழி பெயர்க்க முடியும் என்ற எண்ணமும் ஆகும். இந்நிலையில் முரண்பாடுகள் ஏற்படின், அதுமூலநூலின் திறத்தைத் தவறுதலாக வெளிக்காட்டுகின்ற வாய்ப்பினை நல்குகின்றது. மொழிபெயர்ப்பினின்றே, அதனை ஊடு மொழியாகக் கொண்ட பிறிதொரு மொழிபெயர்ப்பு எழுதலும் பரவலாகக் காணப்படுதலின் இதன் முதன்மை கருதற்பாலது.

மேற்கூறியதைப் போன்று அறிவியல், மருத்துவம், சட்டம், வரலாறு போன்றவற்றில் முரண்பாடுகள் நிகழ்ந்தால் அதன் விளைவுகளும் மொழிபெயர்ப்புக் குறையினால் அமையக் கூடும். ஆகவே இவை மிக முக்கியமானதொன்றாக வேண்டப்படுகிறது.

2. எளிமை

ஒரு மொழிக் கருத்தினை மற்றொரு மொழியினருக்கு அறிமுகப்படுத்துதல் என்ற நிலையில் இது மிகுதியாக வேண்டப்படுகிறது. மொழிபெயர்ப்பு என்பது எப்பொழுதுமே அறிஞர்களுக்கு மட்டுமல்லாது பொதுமக்களுக்கும் புரியக்கூடிய நிலையிலே அமைக்கப்பட வேண்டும். மூலநூலின் அழகு சிதையா வண்ணம், கற்பாருக்கு இயல்பான நடையில், இது மொழிபெயர்ப்பு எனத் தோற்றமளித்து விடாதபடி எளிய இனிய சொற்களால் மொழி பெயர்க்கும் போது இவ்வெளிமை அமைந்துவிடுகிறது. சான்றாகக் குஜராத்தி மொழியிலே மூலமாக இருந்து பின் ஆங்கிலத்திலே அமைந்த, கோயிலிலே நாட்டியமாடுகின்ற நாட்டியக்காரியின் அளவில்லாத அன்பினை வெளிக்காட்டுகின்ற

நாவல் தான் 'ஜெயசோமநாத்' என்பதாகும். அந்நாவல் இவ்வாறு தொடங்குகிறது.

"It was the eleventh day of the month of Kartik in the year 1082 of the Vikramaditya Era (A. D 1024), the most sacred day in the year. They came in an uninterrupted flood the pilgrims. They were arriving at the shrine of Lord Somanath, the Lord of the Three Worlds in the holy city of Prabhas, as if attracted by a magnet"[2]

அதன் மொழி பெயர்ப்பு எளிமையாக.

"1082-ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் வளர்பிறை ஏகாதசி. இரும்பு காந்தத்தினால் கவரப்படுவது போல் யாத்திரிகர் சோமனாத்தின் புனித சிவாலயத்தின் பால் கவரப்பட்டவர்களாய் அதை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்"[3] என்று அமைகிறது. அதோடு F. L. Lucas என்பவர் மொழி பெயர்ப்பைப் பற்றி "நல்ல மொழிபெயர்ப்புகள் நம் காலத்தின் முக்கிய தேவைகளில் ஒன்றாகும்" என்று கூறுகிறார்.[4] இதனையும் மொழிபெயர்ப்பில் எளிமை என்ற குணநலனின் சான்றாக்கலாம்.

3. தெளிவு

மொழிபெயர்ப்பினைக் கற்கும் பொழுது அது மிகத் தெளிவாக அமைந்திருந்தால் தான் எடுத்ததன் நோக்கம் நிறைவேறும். கருத்துகளைத் தெளிவின்றி உரைப்பின் அதனால் எவ்விதப் பயனுமில்லை. கருத்துத் தெளிவிற்காக மூலநூலின் மிக நீண்ட தொடர்களை ஆங்காங்கே எளிய தொடர்களாக்கியும் மொழி பெயர்க்கலாம். மூலநூலார் பயன்படுத்தியிருக்கும் கடினமான பதங்களையோ அன்றி மொழி பெயர்ப்பினைப் படிப்பார் அறியாத சில மரபுச் சொற்றொடர்களையோ, பொருட்களையோ மொழிபெயர்க்க வேண்டிவரின் அவற்றைக் கற்பார் அறிந்த வழக்கு மொழிகளில் தருவதால் தவறில்லை. ஆங்கிலத்தில் மிகவும் பரவலாகக் கூறப்படுகின்ற மரபுச் சொற்றொடரான 'Carrying Coal to New Castle' என்பதை இந்தியாவில் உள்ள

---

2. K. M. Munshi - Tr, by H. M. Patel; Jaya Somanath; E. P. 1976, Bharatiya Vidya Bhavan, Bombay. P. 1
3. சரஸ்வதிராமனாத்—ஜெய சோமநாத்-மூலம் கே. எம். முன்ஷி, ஸ்டார் பிரசுரம், மு. ப. பிப்ரவரி 1978 ப. 9
4. Ian F. Finlay; Translating; P. 91.

தமிழர்களுக்குப் புரிய வைக்க வேண்டுமென்றால் 'கொல்லன் தெருவில் ஊசி விற்றல்' என்று பெயர்க்கலாம். ஆனால் இதனை யாழ்ப்பாணத்து தமிழர்களுக்குப் புரிய வைக்க வேண்டுமென்றால் 'யாழ்ப்பாணத்துக்குப் பனங்கொட்டை கொண்டு போதல்' என்று தான் பெயர்க்க வேண்டும். அப்பொழுது தான் அவர்கள் கருத்தினைத் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள்.

4. விளக்கங்கள்

ஒவ்வொரு மொழிக்கும் என்று தனித்த சிறப்புக் கூறுகள் உண்டு. ஒன்றன் சிறப்பு மற்றொன்றில் உறுதியாக இருக்கும் என்று கூறுவதற்கில்லை. அந்தந்த மொழியினரின் மரபுகளும், பழக்க வழக்கங்களும், சூழல்களும் இச்சிறப்பினைத் தோற்றுவிக்கின்றன. இது போன்ற நிலைகளில் அச்சொற்களை எப்படி மொழி பெயர்ப்பது என்ற சிக்கல் எழுகிறது. அச்சொற்களை அவ்வாறே தந்துவிட்டு அவற்றிற்குத் தேவையான விளக்கங்களை அடிக் குறிப்பில் தந்துவிடலாம். அதனால் கற்பார் மூலத்தின் சிறப்பினை அறிந்து கொள்வதோடு அவற்றின் சிறப்பினையும் முழுமையாகப் புரிந்து கொள்ள இயலும். எஸ். இராமகிருஷ்ணன் தமது லியோ டால்ஸ்டாயின் 'சக்கரவர்த்தி பீட்டரை' மொழிபெயர்க்கும் பொழுது ''பாயர்கள், ருஷிய நாட்டு நிலப்பிரபுக்களில் ஒரு வகையினர். உச்சவட்டத்துப் பிரபுக்கள், மகாப் பிரபுக்கள் என்றழைக்கப்பட்டனர். அடுத்த தட்டிவிருந்தவர்கள். பாயர்கள் என்று குறிக்கப்பெற்றனர்.'' என்று விளக்கியிருப்பதைக் காட்டலாம். நூல் முழுவதும் இவ்வாறு பல விளக்கங்களை இவர் அளித்துள்ளமை எல்லா மொழிபெயர்ப்பாரிடையேயும் வரவேற்கத் தக்கதாம்.

''மூலத்திலுள்ள சொல்லும் எழுத்தும் மொழிபெயர்ப்பாளருடைய சுதந்திரத்தைப் பாதிக்கும் விலங்காக அமைந்து விடக் கூடாது. சில சமயங்களில், மூலத்திலுள்ள சில சொற்களை மொழிபெயர்க்காமல் விட்டுவிட்டால் அதனால் மொழிபெயர்ப்பு ஒன்றும் கெட்டுப் போய் விடாது. உண்மையில், மூலத்தின் பொது பாவத்தைச் செம்மையாக மொழிபெயர்ப்பதற்காகவே சில சொற்களைத் தமிழாக்கம் செய்யாமல் தவிர்க்க வேண்டி இருக்கும்''[5] என்ற கூற்றினையும் இதனுடன் ஒப்பு நோக்கலாம்.

5. எஸ். மகராஜன், மொழிபெயர்ப்பது எப்படி?—'Studies in Arts and Sciences' P. 95-96.

5. தன்வயமாக்கல்

பிற மொழியினரின் பெயர்ச் சொற்கள் அதாவது பாத்திரத்தின் பெயர், இடப்பெயர் போன்றனவும், நம்மிடையே இல்லாத பொருட்களின் பெயர்களும் மூலத்தில் வருங்கால் அவற்றைத் தன் வயமாக்கி ஏற்றுக் கொள்ளுதல் சால்புடைத்து. உதாரணமாக ஆங்கிலத்திலே சிறந்த நாடகாசிரியரான ஷேக்ஸ்பியரைச் 'செகப்பிரியர்' என்றும் 'Merchant of Venice' என்பதை 'வாணிபுர வணிகன்' என்றும் தமிழ்ப் பெயராக மாற்றி அமைக்கின்ற நிலையினைக் காண்கிறோம். இந்நிலை இலக்கிய வாசகர்களை அதனுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளச் செய்கிறது.

6. மூலநூல் ஆசிரியர்+மொழி+ மூலநூல் அறிமுகம்

மொழிபெயர்ப்பாளர் தம் மொழிபெயர்ப்பின் முகவுரையில் மூலநூலினைப் பற்றியும், மூலநூலாசிரியர் பற்றியும், எந்த மொழியில் அமைந்தது என்பது பற்றியும். ஒரு சிறந்த அறிமுகம் தரல் கற்பாருக்குப் பேருதவியாக இருக்கும். கற்கும் நூலின் மூலம் எது? ஆசிரியர் யார்? மொழி என்ன? என்னும் செய்திகளை அறியவும், சிறப்புகள் யாவை என்பதனை உணரவும் கற்பார் விழைதல் இயல்பு. எனவே இவற்றை நிறைவு செய்தலும் தேவை.

''இராஜா பீர்பால் அவர்களின் நகைச்சுவைப் பண்பால் அக்பர் உட்பட குடிமக்கள் பலரும் நன்மை பெற்றனர். புகழ் பெற்ற அவருடைய நகைச் சுவைப் பேச்சுக்களும் செயல்களும், இன்றும் இத்தனை நூற்றாண்டுகள் ஆனாலும் அனுபவித்து சுவைக்கக் கூடியதாகும். அவை அனைத்தும் இன்றும் ஓர் இலக்கியமாகத் திகழ்கின்றது. உலக மொழிகள் பலவற்றில் பீர்பால் கதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன'' என்று அசரியா செல்வராஜின் 'பீர்பால் கதைகள்' மொழிபெயர்ப்பின் பதிப்புரை சுட்டுவது போன்று பல நூல்களைக் கொண்டுள்ளமை சான்றாகிறது. இவை மொழிபெயர்ப்பு நூல்களில் பொதுவாக வேண்டப்படுதலாக அமைகின்றன. இது போன்றல்லாது மூல நூலினைப் பற்றியும், மூலநூலாசிரியர் பற்றியும், மூலமொழி எது என்று அறிவிக்காமலும் இருக்கின்ற பல மொழிபெயர்ப்புகள் உள்ளன. இம்மாதிரியான மொழிபெயர்ப்பு நூல்களைப் படிக்கும்

போது அதில் இருக்கின்ற செய்திகளை முழுமையாகப் புரிந்து கொள்வதற்குக் கடினமாக உள்ளது. 'ராகுல சாங்கிருத்தியாயன் சுயசரிதை' - புதிய ஒளி என்ற நூல் எத்திராஜுலு என்பவரால் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அதன் மூலநூல் எது? மூலமொழி எது? என்ற செய்திகள் கொடுக்கப்படவில்லை. இது மொழிபெயர்ப்பு நூலின் செய்தியினைத் தெளிவாகப் புரிந்து கொள்ள, ஒரு தடையாக அமைகிறது. அதனால் படிக்கின்ற ஆர்வமானது குறைவதற்கு அதிகமான வாய்ப்புகள் உள்ளன,

7. மொழி பெயர்ப்பு இயல்பு

பொதுவாக மொழிபெயர்ப்பின் இயல்பு என்று சிந்திக்கின்ற போது, மொழிபெயர்ப்பினைப் படிக்கின்ற ஒருவர், மூலமொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர் மூலநூலினைப் படிக்கும் போது என்ன உணர்வைப் பெறுவாரோ, அதே உணர்வைப் பெறுகின்ற வகையிலே அமைய வேண்டும். அப்பொழுது தான் அம் மொழிபெயர்ப்பு ஒரு சிறந்த மொழிபெயர்ப்பு என்று அறுதியிட்டு உரைக்கலாம். சான்றாகப் பாரதியின் பாடல்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் 'Bharati in English Verse' என்று எஸ். பிரேமா மொழிபெயர்த்துள்ளார்கள். அதில் வந்தேமாதரப் பாடலில்,

"ஆயிரம் உண்டிங்கு சாதி· எனில்
அன்னியர் வந்து புகல் என்ன நீதி?
ஒருதாயின் வயிற்றில் பிறந்தோர்-தமக்குள்
சண்டை செய்தாலும் சகோதரர் அன்றோ?"[6]

என்ற வரிகளை

"Although a thousand castes may flourish here,
The alien shall have no quarter
The Mother's sons may quarrel and wrangle,
Yet brothers are they still"[7]

என்று மொழி பெயர்த்துள்ளார். இது மொழிபெயர்ப்பில் மூல நூல் இயல்பு என்பது கருத்தின் உணர்வு என்பதற்குச் சான்றாகத் திகழ்கிறது. இவற்றுடன் நூலின் இயல்பிற்கேற்ப சில தனித்த நெறிமுறைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றினை இனிக் காணலாம்.

---

6. பாரதியார் கவிதைகள்
7. S.Prema- 'Bharati in English Verse' p. 59

இலக்கியம்

மிக அதிகமாக மொழிபெயர்ப்புகள் காணப்படும் ஒரு துறை இலக்கியமாகும். அறிஞர், புலவர் எல்லா மொழியினரிடையேயும் தோன்றுகின்றனர். அவர்களின் சிறப்பு நோக்கி உலகம் அவர்களைப் புகழ்கிறது. உலகம் அவர்களின் சிறப்புகளை அறிந்து கொள்ள உதவுவன மொழிபெயர்ப்புகளேயாம். கீதாஞ்சலியின் ஆங்கில மொழிபெயர்ப்பு இந்தியக்கவி இரவீந்திரநாத் தாகூருக்கு நோபல் பரிசினைப் பெற்றுத் தந்தமை இதற்கு மிகச் சிறந்த சான்றாகும். 1974-இல் ரஷ்ய மொழியில் திருக்குறளின் கவிதை வடிவ முதல் மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டது. அதன் மொழி பெயர்ப்பாளர் அலெவ் இப்ராகிமோவ் "நிலைத்த உண்மைகளையும், விவேகமிக்க உலகியல் நடைமுறைத் தன்மையையும் மதிப்பதோடு, மக்களின் அறிவுத்திறனையும் உட்படுத்திக் கொண்ட திருவள்ளுவரின் இந்த அமரப் படைப்பு"[10] என்று போற்றியிருப்பது தமிழ் இலக்கியச் சிறப்பினை ரஷ்யர்கள் புரிந்து கொண்டமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பிற துறைகளினின்றும் மிகுந்த அளவில் மாறுபட்டமைவது இலக்கியமாகும். மொழிபெயர்ப்பதில் தன் இயல்பால் மிகுந்த இடர்ப்பாடுடையது இலக்கியமாகும். "மொழிபெயர்ப்பில் தொலைந்து விடுவது கவிதை" என்னும் ராபர்ட் பிராஸ்ட் கூற்று[8] இவ்வுண்மையை அறிவுறுத்தும். மூலத்தின் நடையினையும், சிறப்பினையும் முழுமையாகத் தருவது இலக்கிய மொழி பெயர்ப்பில் இன்றியமையாததாகின்றது. இதுவே கடினமான பணியாகவும் இம் மொழிபெயர்ப்பில் அமைகிறது.

இலக்கிய நயம் நோக்கிப் பல பொருள் உள்ள ஒரு சொல் மூலத்தில் பயன்படுத்தப்பட்டிருத்தல் இயல்பு. அதனை மொழி பெயர்க்குங்கால் அச்சொல் அந்த இடத்தில் எந்தப் பொருளைக் கொண்டுள்ளது, எப்பொருள் மிகுந்த ஏற்புடைத்தாய் இருக்கிறது என்பதனை நோக்கி, அதற்கேற்ற இணையான சொற்களையே பயன்படுத்த வேண்டும். இல்லையாயின் பொருள் மாற்றம் ஏற்பட்டுக் கவிதையின் ஆழமும் சிறப்பும் கெட்டுவிடும்.[9]

---

8. சோவியத் நாடு; சூலை 1983; இதழ் 14: ப. 37.
9. ந. கடிகாசலம்: மொழிபெயர்ப்பு-ஒரு கண்ணோட்டம்; வாரக் கருத்தரங்கு (3-10-1980) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் (தட்டச்சுப் பிரதி)

"இரவலர் புரவலை நீயும் அல்லை
புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்
இரவலர் உண்மையும் காண், இனி; இரவலர்க்கு
ஈவோர் உண்மையும் காண், இனி: நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்து யாம் பிணித்த
நெடுநல் யானை எம் பரிசில்
கடுமான் தோன்றல், செல்வல் யானே. (புறம் 162)

1. Thou art no protector of the Suppliant poor
Yet to the Suppliant kindly friends are ever found
See here the State of worthy suppliants!
See here the worth of kindly friends!
Behold I tether neath the Shadow of the fort
This elephant, another's gift; and so, farewell
Thou chieftain of the swiftly running steed!

2. You a patron? oh No!
OhNo! you are no patron of suppliant bards;
Yet bards do not lack for patrons at all;
Look around! You be see suppliants a plenty still,
And patrons enough to succour them all
Look at this tall and stately elephant of traine
Which I have tethered to your sacrosanct tree
inviolable
Which stands in the city as the symbol
Of your kindly power, See how it frets that tree!
It is my gift to you, O Lord of Gushing Steed!
I now bid you farewell, and go hence on my way.

முதல் மொழிபெயர்ப்பினை உற்று நோக்கினால் சில குறைபாடுகள் வெளிப்படக் காணலாம். புலவர்களை ஏழைகள் என்னும் பொருள்படக் குறிப்பிட்டுள்ளார். அதைவிடப் புலவர் என்று குறித்திருந்தால் மூலக்கவிதைக்குத் தீங்கு செய்யாமல் இருந்து இருக்கக்கூடும். இரண்டாவது வரியில் 'Friends' என்று இருப்பதைக் காட்டிலும் 'Patrons' என்று இருந்தால் சிறப்பாக இருந்து இருக்கும். அப்பொழுது தான் புரவலர் என்ற தமிழ்ச் சொல்லின் பொருள் விளக்கம் பெறும். நான்காவது வரியிலும் அப்படியே இம் மொழிபெயர்ப்பாளர் 'கடிமரம்' என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவில்லை. ஆதலால் கடிமரம் என்பதை 'Fort' என்று

குறிப்பிட்டிருக்கிறார். மேலும் 'Another's gift' என்பதில் தெளிவு இல்லை. வேறு ஒருவரின் பரிசு அல்லது வேறு ஒருவர் தந்த பரிசு எனவும் இதற்கு விளக்கம் கூறமுடியும். ஆனால் எம்பரிசில் என்னும் புலவரின் பெருமிதக் கூற்று இங்கு மாறி ஒலிக்கின்றது.

இரண்டாவது மொழிபெயர்ப்பில் முதிர்ச்சி காணப்படுகிறது. இத்தமிழ்ப்பாடலை முழுமையாகவும், தெளிவாகவும் உணர்ந்து கொண்டு ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ள திறமை வெளிப் படுகிறது. புறநானூற்றுப் புலவரின் பாடலுக்குத் துரோகம் இழைக்காமல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இரவலர்க்குப் பரிசில் வழங்கக் கூடியவன் நீ ஒருவன் மட்டிலும் அல்ல, இன்னும் பலர் இருக்கிறார்கள் என்ற உண்மையை உணர்வாயாக. நின் கடிமரம் வருந்தப் பிணித்த யானை உனக்கு நான் தரும் பரிசில் என்னும் பெருஞ்சித்திரனாரின் பெருமிதம் மொழிபெயர்ப்பில் ஒலிப்பதை உணர முடிகின்றது. எனவே கவிதையை மொழி பெயர்க்கும் போது அதன் உள்ளார்ந்த உயிரோட்டத்தைப் புரிந்து கொண்டு அதற்கு ஊறு நேராமல் மொழி பெயர்த்தால், அது சிறப்பாக விளங்கக் கூடும் என்பது தெளிவாகப் புரிகிறது. சாதாரண சொல்லாயினும் கூட, அதனுடன் சரியான தொடர் புடைய பிறமொழிச் சொல்லைப் பயன்படுத்தும்பொழுதுதான் மூலநூலாசிரியர் எண்ணம், திறமை அவ்வாறே வெளிப்படும். ஒரு சொல்லுக்குப் பொருந்தாத சொல்லைப் பயன்படுத்தினால் மூலத்தின் அழகே கெடுவதுண்டு என்பதனை இப்பகுதியில் உணரலாம்.

உள்ளுறை, குறியீடு, உருவகம், சிலேடை போன்றவற்றை அவ்வாறே மற்றொரு மொழிக்கு மாற்றுதல் மிகக் கடினமான பணியாகும். இவற்றைச் சரியாக அமைக்க இயலாத போது மொழிபெயர்ப்பாளர் தகுந்த விளக்கங்களைப் பின்னால் அளிப்பதால் ஓரளவுக்கு நிறைவுபடுத்தக்கூடும். சான்றாகச் சங்க இலக்கியத்தின் பகுதியான குறுந்தொகையில் 152-ஆவது பாடல் தலைவி, தலைவனைக் குறைகூறுவதாக அமைகின்றது. திருமணத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டே போகிறான். அவனுக்குக் காமத்தின் தன்மை தெரியவில்லை என்கிறாள். இதற்குக் கவிஞர் முட்டையிட்ட ஆமை, முட்டையைப் பாது காக்காது இருப்பதை உவமையாகக் காட்டுகின்றார்.

"யாவது மறிகிலர் கழறு வோரே
தாயின் முட்டை போலவுட் கிடந்து
சாயினல்லது பிறிதெவ னுடைத்தோ
யாமைப் பார்ப்பினன்ன
காமங் காதலர் கையற விடினே" (குறுந்தொகை-152)

என்பதனை,

"Gossips know nothing;
When the one you love
With a love like the look
of a young turtle,
leaves you broken hearted,
What else is left
beside dying inside
like an egg left to rot
Without its mother? என்று மொழிபெயர்த்து அதோடு

"Between each meeting, he leaves her broken hearted, and she grieves without him. The love she has for him is like 'the look of a young turtle' because it grows in quantity and quality every time she is with him, just as the turtle grows in size and character as it looks upon its mother. But, the mother turtle is there for its young to see. He is not there so she dies inside, like an unhatched egg, rotting in the sun, without its mothers protection. The gossips do not understand this, and talk about her without sympathy"[10]. என்று விளக்கமும் கொடுத்துள்ளனர்.

"மொழிபெயர்ப்பு என்பது ஒரு கலை, அந்தக் கலையில் வசனத்தை மொழிபெயர்ப்பது ஓரளவுக்கு எளிதானது. கவிதையை மொழிபெயர்ப்பதோ மிகவும் கடினம். கவிதையை மொழிபெயர்ப்பதற்கு ஒருவன் கவிஞனாகவும் இருக்க வேண்டும் என்பதோடு, மொழிபெயர்க்கும் கவிதையின் கருத்தும், உணர்வும் உருக்குலையாத வண்ணம், மொழிபெயர்ப்புக்கு வடிவும், வலுவும் கொடுக்கும் பொறுப்பும், திறமையும் அவனுக்கிருந்தாக வேண்டும். மேலும் எதுகையும், மோனையும், தாளக்கட்டும் சமயங்களில் மூலக்கவிதையை நீட்டவோ, குறுக்கவோ தூண்டும்

10. Dr. M. Shanmughan pillai & David Ludden—KURUNTOKAI. p. 300.

நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தும். இவற்றுக்குத் தலை வணங்காது, எடுத்துக் கொண்ட கனவடிவத்துக்குள்ளேயே மூலக் கவிதையின் கருத்தையும், உணர்ச்சியையும் இழுத்து மடக்கிக் கொண்டுவந்து நிலை நிறுத்துவதே மொழிபெயர்ப்பாளரின் கடமையாகும்"[11] எனும் கூற்றும் செய்யுள் இலக்கிய மொழிபெயர்ப்பின் அருமையை உணர்த்தும். செய்யுள் இலக்கியங்கள் உரைநடை வடிவினை மொழிபெயர்ப்பில் கொள்ளுவதற்கு இதுவே முதற்காரணமாகும் எனலாம்.

மூலத்தின் புலமையையும், கருத்தினையும் மொழிபெயர்ப்பில் கொணரக் கருத்துக் கொள்ளும் அதே வேளையில் அதன் சுவை குன்றாதவாறும் பார்த்துக் கொள்ளுதல் வேண்டற்பாற்று. சுவை கெடாதிருப்பின் தான் கற்பார் அதில் ஈடுபடுவர். அல்லது கற்பாரின்றி மொழிபெயர்ப்பாளரின் பணி வீணாதற்கு வாய்ப் புண்டு. சான்றாகத் தம் ஆசிய ஜோதியினை

வாய் முத்தம் தாராமல்
மழலையுரை யாடாமல்
சேய் கிடத்தல் கண்டெனக்குச்
சிந்தை தடுமாறுதையா!
நீடும் மதியினைப் போல்
நிலவெறிக்கும் செல்வமுகம்
வாடி நிறம் மாறியதென்
வயிற்றிலெரி மூட்டுதையா
பின்னி முடிச்சிடம்மா
பிச்சிப்பூ சூட்டிடம்மா!
என்னும் மொழிகளினி
எக்காலம் கேட்பனையா
சித்திரத் தேரும்
சிறுபறையும் கூடியெனைப்
பித்தியிலும் பித்தி
பெரும் பித்தி யாக்குதையா!

என்பது போன்று வெகு அழகாகப் பழகு தமிழில் அமைத்திருப்ப தனைக் காட்டலாம்.

மொழிபெயர்ப்பின் போது மூலத்தின் தலைப்பும் மொழி பெயர்ப்பின் தலைப்பும் சில இடங்களில் வேறுபடுகின்றன.

---

11. ரகுநாதன்: சோவியத் நாட்டுக் கவிதைகள்; முன்னுரை. ப. 7.

தலைப்புகளைத் தம் விருப்பம் போல் மாற்றிக் கொள்ளும் உரிமையை மொழிபெயர்ப்பாளர்கள் பெறுகின்றனர். ஜெய காந்தனின் 'இது என்ன பெரிய விஷயம்' என்பது கா. திரவியம் மொழிபெயர்ப்பில் 'A busy business man' என மாற்றம் பெற்றுள்ளது. மொழிபெயர்ப்பாசிரியரின் கண்ணோட்டத்திற்கு ஏற்ப இத்தகு மாற்றங்கள் நிகழும் போது அவற்றைச் சுட்டிச் செல்லுதல் தேவையாகும்.

உரைநடை நூல்களுக்கென்று தனித்த கொள்கைகள் உண்டா என்று அறிந்து கொள்ளுவது சிறப்பாக அமையும். உரை நடை நூல்களில் பயணம், வாழ்க்கை வரலாறுகள் அடங்கும். இம்மாதிரியான நூல்கள் எந்த மொழியில் மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றதோ, அந்தந்த மொழியிலே தெளிவாக விளங்கு கின்ற நிலையினைக் காண்கிறோம். சான்றாக, வீரேசலிங்கத்தின் சுயசரிதைச் சுருக்கம் தெலுங்கு மொழியிலிருந்து தமிழுக்கு சாகித்திய அகாதெமியினரால் பெயர்க்கப்பட்டுள்ளது. அதன் மூல நூலாசிரியர் கொடவடிகன்டி குடும்பராவு, மொழியாக்கம் ப. பாலசுப்பிரமணியன் என்பவர் அதில் மூலநூலாசிரியரின் 'அறிமுகம்' என்ற பகுதியைப் படிக்கும் போது தமிழிலே ஒரு நூலைப் படிக்கின்ற உணர்வே ஏற்படுகின்றது. இவ்வாறாக அது முழுமையும், தெளிவான மொழிபெயர்ப்பாக அமைகிறது.

பொதுவாக இலக்கிய மொழிபெயர்ப்புகள், இலக்கிய நயம் குன்றாது எளிமை, தெளிவு என்ற நோக்கில் அதிகமாக வழக்குச் சொற்களைக் கலந்து விடாது, அதே வேளையில் பொருள் புலப் பாட்டிலும் ஐயமோ, இடரோ எழாது கவினுற அமையவேண்டும். மொழிபெயர்ப்பைக் கற்பார் மூலநூலைப் படித்த நிறைவினைப் பெறின் அது மொழிபெயர்ப்பாளர் பெறும் வெற்றியாகும்.

பிற துறைகள்

இலக்கிய மொழிபெயர்ப்பே பிறதுறைகளினின்றும் பெரிதும் வேறுபட்டு அமைகின்றது. அறிவியல் துறைகள், கலைகள், மதம், உரைநடை எனும் பிறபிரிவுகள் ஓரளவே தம்முள் வேறுபட்டமை கின்றன. மொழிபெயர்ப்புக் கொள்கை காணல் முதல் நோக்க மாதலின் இங்கே இவை பற்றிய சிறப்பான கொள்கைகள் மட்டுமே சுட்டிச் செல்லப்படுகின்றன.

மருத்துவம், தொழில் நுட்பம் போன்ற துறைகளையும் அறிவியல் துறைகளுடன் இணைக்கலாம். ஓவியம், நாட்டியம்,

இசை போன்ற துறைகள் கலைகளில் இடம் பெறுகின்றன சமயம் பற்றிய நூல்களும் சமயம் சார்ந்தனவும் சமயம் எனும் பிரிவில் அடங்குகின்றன. வரலாறு, பொருளாதாரம், புவியியல், அரசியல் எனும் ஏனைய துறைகள் உரைநடையாகின்றன. இரு மொழிகளைப் பற்றிய பரந்த ஆழ்ந்த அறிவுடன், மொழிபெயர்ப் பாளருக்கு அந்தந்தத் துறைகளிலும் சிறப்பான அறிவு தேவைப் படுகிறது. அப்பொழுது தான் மூலத்தின் கருத்துகளை நன்கு புரிந்து கொண்டு தவறு நிகழாதபடி மொழிபெயர்க்க இயலும்.

இலக்கியத்தில், படைப்பாளனின் கருத்தை அப்படியே, அவன் நோக்கில் தருதல் எவ்வளவு கடினமோ அதைப் போன்று இங்கே அந்தந்தத் துறையில் வழங்கும் கலைச் சொற்களை மொழி பெயர்த்தல் சிக்கலுக்குரியதாகிறது. கலைச் சொற்களை அவ்வாறே அதே ஒலிக்குறிப்பில் வரிவடிவில் மட்டும் மாற்றித் தருதல் சிறப்பா அன்றி மொழிபெயர்த்துத் தரல் சிறப்பா என்பது இங்கு வினாவாக அமைகிறது. மொழியின் வளர்ச்சி என்பதனை முதன்மைப்படுத்தின் புதிய சொல்லாக்கங்களாக மொழி பெயர்த்துத் தரலே ஏற்புடைத்தாகிறது என்பது முன்பே சுட்டப் பட்டது. ஆயின் அறிவுத் துறைகளைப் பொறுத்தமட்டில் உலகளவில் பொதுக் குறியீடுகளாக அவை அமைந்திருக்கையில், அவற்றை மொழிபெயர்த்துத் தரல் பொருந்துமா? இதனால் மேற் கல்விக்கும், அவர்களுடன் இணைந்து முன்னேறிச் செல்வதற்கும் இத்தனிக்குறிப்பு ஒரு தடையாக அமையாதா? என்ற ஐயமும் உடன் எழுகிறது.

''பல அறிவு வளர்ச்சிக் கருத்துகளும் அவ்வப்போது கட்டுரை யாக ஆராய்ச்சி இதழ்களில் உலகமொழிகளில் வெளிவருகின்றன. எந்த நாடும் முற்போக்கில் இருக்க வேண்டுமானால் இவற்றைக் கற்றுத் தான் தீர வேண்டும். உலகத்தில் முன்னேறியுள்ள ஆங்கில மொழி பேசுகின்றவர்கள் கூட பிரெஞ்சு, ருஷ்யன், ஜெர்மன் என்ற மொழிகளில் வரும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை அறிவதற் காக அம்மொழிகளில் சிலவற்றை அறிந்தே முன்னேறுகிறார் கள்''[12] என்பதனை நோக்குங்கால் இவ்வுண்மை புலப்படும். இவ் விரண்டினையும் எண்ணிப் பார்க்கும் பொழுது அறிவியல் தவிர ஏனையவற்றில் மொழிபெயர்ப்பினையும், அறிவியலில் எழுத்துப் பெயர்ப்பினையும் மேற் கொள்ளலாம் எனத் தோன்றுகின்றது.

---

12. மு. கோவிந்தராஜன்-மொழித்திறன்களும், சில சிக்கல் களும் ப. 220.

"தமிழால் அறிவியலைக் கூறவே முடியாது என்கின்றனர். சிலர் தூய்மையான தமிழிலே தான் கூற வேண்டும் என்கின்றனர். வேற்று மொழிச் சொற்களை அப்படியே ஏற்றுக் கொள்ளலாம் என்று ஒரு சிலர் கருதுகின்றனர். சிலர் பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்கிக் கொள்ளலாம் என்கின்றனர். சிறிதும் பிறழாமல் ஒலிபெயர்ப்புச் செய்து கொள்ளலாம் என்று சிலர் கருதுகின்றனர். அவரவர் நிலையில் நின்று பார்த்தால் அவரவர் கூற்றுச் சரியாக இருக்கலாம்"[13] எனும் மொழியும் இங்கு எண்ணத்தக்கது.

கருத்துகளை விளக்குதல். தெளிவாக்குதல் என்பதே இவற்றில் முதன்மையாதலின் மொழி அலங்காரத்திற்கு இங்கே வேலையில்லை. பொருள் மயக்கம் தரக்கூடியசொற்களை விலக்கி, நேரிடையாகத் தெளிந்த பொருள் தரும் சொற்களையே பயன் படுத்துதல் நன்றாம்.

தேவையான இடங்களில் பொருள் தெளிவிற்காக மொழி பெயர்ப்பாளர் கூடுதல் விளக்கங்களை அளித்தல் இங்கு வேண்டப் படுகிறது. இதனால் மொழிபெயர்ப்பாளர் மூலத்திற்குத் துரோகம் செய்வதாகக் கருதப்படுவதில்லை. சிறந்த மொழிபெயர்ப்பாசிரிய ராக விளங்கும் வி. எஸ். வி. இராகவன் தனது மெகஸ்தனீஸ் நூலில் வரும் வரலாற்றுத் தொடர்பான பகுதிகளுக்கு வரலாற்றில் புகழ் மிக்க பலருடைய நூல்களிலிருந்து ஆங்காங்கே மேற்கோள்கள் காட்டியுள்ளார். தமிழ் இலக்கியங்களிலிருந்தும் ஆங்காங்கே பொருத்தமான ஒப்புமைப் பகுதிகளும் சேர்க்கப் பட்டுள்ளன. இவை கற்பார் கூடுதலறிவைப் பெற உதவுகின்றன.

சமயம் தொடர்பான மொழிபெயர்ப்பு நூல்களைப் பற்றி எண்ணும் போது,

"சமயம், தத்துவம் இரண்டுமே பெரும்பாலும் பொறிகளுக் கும், உள்ளத்திற்கும் அப்பாற்பட்ட பொருள்களைப் பற்றி யுள்ளன. எனவே பொறிகளாலும், உள்ளத்தாலும் அறியக் கூடிய பொருள்களைப் பற்றி எழுதும் போது அமையக் கூடிய அளவிற்கு, அவற்றிற்கப்பாற்பட்ட பொருள்களைப் பற்றி எழுதும் போது தெளிவு இருக்க முடியாது என்பது அடிப்படை உண்மை"[14] என்ற

13. ஜி. ஆர். தாமோதரன் அறிவியல் தமிழாக்கம்-ஐந்தாம் உலகத்தமிழ் மாநாடு கட்டுரை-ப. 450.

14. வ. ஆ. தேவசேனாபதி -சமய தத்துவ நூல்களின் மொழி பெயர்ப்பு, புத்தக நண்பன்-ஜுலை 1968.

கூற்று அதன் இடர்ப்பாட்டைச் சுட்டிச் செல்கின்ற நிலையைக் காண்கிறோம். இந்நிலையில் சமயம் தொடர்பான மொழி பெயர்ப்பு நூல்கள் மொழிபெயர்ப்பு நூல்களுக்கிருக்கின்ற பொதுக் கூறுகளில் ஒன்றான தெளிவினைத் தர மிகுந்த அக்கறை கொள்ள வேண்டியிருக்கிறது.

கலைகளைப்பற்றிய நூல்கள் ஏராளமாக வெளிவருகின்ற நிலையினைக் காண்கிறோம். ஆனால் மற்றைய நாட்டின் கலைகளை அறிமுகஞ் செய்கின்ற நோக்கத்தோடு, நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளனவா? என்றால் இல்லை என்றே கூற வேண்டும். தமிழ்மொழியைப் பொறுத்த அளவில், அது இயல், இசை, நாடகம் எனும் பிரிவுகளை உடையது. இம்மூன்று பிரிவுகளிலும் பழங்காலத்திலிருந்தே நூல்கள் பல வழங்கிவந்திருக்கின்றன. ஆனால் இன்றைய நிலையை நாம் நோக்கும் போது, இம்மாதிரி நூல்கள் தோன்றுவதற்கு வாய்ப்பு இல்லையா என்ற எண்ணம் ஏற்படுகின்றது.

ஓவியம், இசை, நாட்டியம், இவை தொடர்பான நூல்கள் பரவலாகத் தோன்றாமல் போயிருந்தாலும், இன்றளவும் தமிழ் நாட்டில் இக்கலைகள் போற்றப்பட்டு வருகின்ற நிலையினைக் காண்கிறோம். நாட்டியத்தைப் பொறுத்த அளவில் பரத நாட்டியம் இன்றளவும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்வது யாவரும் அறிந்ததே. 'இந்நாட்டியத்திற்குரிய பல நூல்கள் பழங்காலம் முதற் கொண்டு வடமொழியிலிருந்து பெயர்க்கப் பெற்றும், தமிழிலேயே யாக்கப் பெற்றும் கலைஞர்களால் கையாளப்பட்டு வந்துள்ளன. ஆனால் கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக அந் நூல்கள் போற்றுவாரற்றுப் போனமையால் அவற்றின் இருப்பே மறைவதாகி, மாணவர்களும், ஆசிரியர்களும் பிற மொழி நூல்களை மட்டுமே கையாள வேண்டிய நிலை உண்டாயிற்று. ஆயினும், இப்பொழுது கலைஞர்களும், அரசியலாரும் காட்டி வரும் ஊக்கத்தால் நாட்டியக் கலைக்குரிய தமிழ் நூல்கள் பல தேடியெடுக்கப் பெற்று வெளியிடப்படுவது மகிழ்ச்சிக்குரியதாகும்' என்ற கூற்றில் இன்றைய நிலையில் நாட்டிய மொழிபெயர்ப்பு நூல்கள் தோன்றுகின்ற நிலையினைக் காண்கிறோம்.

'அபிநயதர்ப்பணம்', 'மகாபரதசூடாமணி' என்ற நூலின் சுருக்கமாகவும், அபிநயங்களை மட்டுமே கூறுவதாகவும் அமைந்துள்ளது. இது வடமொழியிலிருந்து தமிழுக்குப் பெயர்க்கப்பட்டுள்ளது என்பதைக் 'குருகூர் நம்மாழ்வார் பாத

பங்கயம் பணிந்து......மேதருந் தமிழாற் செய்தான் வீரராகவை யன்றானே' என்ற இந்நூலின் பாயிரப்பாடற் பகுதியால் அறிகிறோம்.

இம்மொழிபெயர்ப்பு நூல் எந்த விதமான கொள்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது என்பதை "அபிநயங்களை மட்டுமே கூறும் இந்நூலுக்கு முன் ஒட்டாகவும், பின்ஒட்டாகவும் பல இன்றியமையாச் செய்திகள் மகாபரத சூடாமணி என்னும் நூலிலிருந்து தேர்ந்தெடுத்துக் கூறப்பட்டுள்ளன. இப்பாடல்கள் யாவும் தமிழ் இலக்கணவளம் செறிந்து விளங்காவிடினும், எளிமையும், கலைவளமும், நேர்மையும் பெற்றுள்ளன. அவற்றை யும் முடிந்த வரையில் பதங்களைப் பிரித்தும், நிறுத்தற் புள்ளி களைக் காட்டியும் கொடுத்திருக்கிறோம். பாடல்களின் பொருள் களையும் இலக்கணம், விநியோகம் என்ற தலைப்புகளின் கீழ் கொடுத்துள்ளோம். செய்யுள்களுக்கு ஏற்ற வடமொழிச் சுலோகங்களை அவ்வவற்றின் கீழே கொடுத்திருக்கிறோம்"[15] என்று முகவுரை செப்புகின்றது. மேற்கூறிய கூற்றினை நோக்கும் போது கலை சம்பந்தமான மொழிபெயர்ப்பு நூல்கள், மூலத்தை யும், மொழிபெயர்ப்போடு சேர்த்து அமைக்கின்ற பாங்கினை, அதன் கொள்கையாகக் கொண்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. மற்றைய மொழிபெயர்ப்பு நூல்களில் மூலத்தையும் சேர்த்துத் தருவது என்பது இயலாத ஒன்று. அந்நிலையை நோக் கும் போது கலைநூல்களின் மொழிபெயர்ப்புகள் மற்ற மொழி பெயர்ப்பினின்று வேறுபட்டு தனித்த இடத்தைப் பெற்றுள்ளதை நம்மால் உணர முடிகின்றது.

இவ்வாறாக, நாம் மொழிபெயர்ப்புக் கொள்கை என்று எண்ணுகின்ற பொழுது, முதலில் கூறிய முரண்பாடு தவிர்த்தல், எளிமை, தெளிவு, தன்வயமாக்கல், மூலநூலார், மூலநூல் அறிமுகம், விளக்கங்கள், இவை பொதுவாக மொழிபெயர்ப்பு நூல்களில் காணப்பட்டாலும், இலக்கியம் தவிர பிற துறைகளைக் கருதுகின்ற பொழுது, அவைகளுக்கென்ற சில தனித்த கொள்கை களைக் காண முடிந்தது. பொதுவாக, இவற்றையும் நாம் மொழி பெயர்ப்புக் கொள்கையாகக் கருதலாமா என்றால், அவற்றை அவ்வாறு நோக்குவது சரியல்ல. ஏனென்றால் அவைகள் சில தனித்த நோக்கங்களை உடையதாக அமைகின்றன.

---

15. வீரராகவன், அபிநயதர்ப்பணம்—முன்னுரை

கொள்கைகள், ஒரு முடிந்த முடிபிற்கு நம்மை இட்டுச் செல்ல வேண்டும். இவ்வகையிலே நோக்கும் போது மொழிபெயர்ப்பைப் பொறுத்த அளவில் நாம் சில கொள்கையினை மேற்கொண்டு செயல்படுத்தினாலும், மொழிபெயர்ப்பு என்பது இவ்வாறாகத் தான் அமைய வேண்டும் என்ற முடிந்த முடிபினை நம்மால் ஏற்படுத்த முடியவில்லை. அதற்குக் காரணமாக அமைவது மொழி பெயர்ப்பாளர்களிடையே இருக்கின்ற தனித்த குணங்களே தவிர வேறல்ல. இங்குப் பிஷப் பேன்கிராப்ட் என்பவரின் கூற்றான

''ஒவ்வொரு மனிதனின் மனநிலையினையும் கருத்தில் கொண்டால், மொழிபெயர்ப்பு என்பதற்கு முடிவே இருக்காது''[19] என்பதை நினைவு கூர்தல் நலம். ஆனால் ஒவ்வொரு மனிதனின் மனநிலையின் காரணமாக ஒரே நூல் பலதடவை மொழி பெயர்க்கப்படுகின்ற நிலையினைக் காண்கிறோம். இதனையும் நாம் மொழிபெயர்ப்பு நூல்களின் வகைகள் என்றளவிலே அடக்க லாமா என்றால் அடக்கலாம் என்பதாகத்தான் பதில் அமை கின்றது. மேற்கூறிய நூல்களும் வகைகளில் அடங்குவதோடு மற்றைய வகைகளும் உள்ளன.

ஒவ்வொரு ஆசிரியருக்கென்றும் சில தனித்த கொள்கைகள் உண்டு. 1. மூலநூலை மொழிபெயர்ப்புடன் தரல் 2. முன்னே குறிப்பிட்ட நூலுக்கு மொழிபெயர்ப்பிருக்கத் தானும் புதிதாகத் தர முனைதல் போன்றன.

1. மூலநூலை மொழிபெயர்ப்புடன் தரல் என்பதற்கு பாரதி தாசனின் அழகின்சிரிப்பை ஆங்கிலத்திலே பரமேஸ்வரன் என்பவர் மொழிபெயர்த்துள்ளதைச் சான்றாக்கலாம். இதில் மொழி பெயர்ப்பு, மூலத்தின் உணர்வினை எந்த அளவுக்கு பிரதிபலிக் கிறது என்பதை உடனடியாக அறிய உதவுகிறது.

2. முன்னே குறிப்பிட்ட நூலுக்கு மொழிபெயர்ப்பிருக்கத் தானும் புதிதாக தர வேண்டும் என்பது ஏற்கெனவே உள்ள மொழிபெயர்ப்பை விட சிறப்பாகத் தரமுடியும் என்ற நம்பிக்கை யின் பேரில் ஏற்பட்ட ஒன்றாகும்.

---

19. Bishop Bancroft—Theodore Savory:; Multiple Translation in The Art of Translation- P 132

5

மொழி பெயர்ப்புச் சிக்கல்கள்

மொழிபெயர்ப்பு என்றதுமே நம் மனக் கண்ணில் நிற்பது, அதில் எழும் சிக்கல்களேயாகும். இருப்பினும் மொழிபெயர்ப்பு எவ்வளவு சிக்கலான பணியாக அமைந்தாலும், இன்றளவும் அப் பணியினை பெரும்பாலோர் செய்ய முயலுதல் வெளிப்படை. பொதுவாக மொழிபெயர்ப்புப் பணியின் சிக்கல்களைப் பல்வேறு வகைகளாகப் பிரிக்க முடியும். அவ்வாறு பிரிக்கும் பொழுது, அச் சிக்கல்களிலே எளிமையானவை எவை? சற்றுக் கடினமானவை எவை என்றளவிலே அமைகிறது. மூலமொழியின் கருத்துகளை மற்றொரு மொழிக்கு மாற்றி அமைப்பதே மொழிபெயர்ப்பு எனக் கண்டோம். இதனை நாம் நோக்கும் போது, இக்கலை ஒரு சாராரின் பண்பாட்டை, நாகரிகத்தை, பழக்க வழக்கங்களை அறிமுகப்படுத்துதல், விளக்குதல் எனவாக அமைகிறது.

இலக்கியம் ஒரு சாராரின் பண்பாட்டை, பழக்க வழக்கங்களைப் பிரதிபலிப்பதாக அமைகிறது. அதனால் இலக்கியத்தை மொழிபெயர்ப்பதென்பது, சமூக சேவை எனக் கூறலாம். ஆனால் இலக்கியத்தை மொழிபெயர்க்கின்ற நிலையிலே பல்வேறு சிக்கல்களை நாம் எதிர் கொள்ள வேண்டியுள்ளோம்.

ஒரே மொழிக்குடும்பத்தைச் சார்ந்த மொழியிலுள்ள இலக்கியங்களை மொழிபெயர்ப்பதென்பது எளிது. ஏனென்றால் அவைகள் பொதுவான கலாச்சாரப் பின்னணியினையும், மொழியியல் அமைப்பினையும் கொண்டதாக விளங்குவதே ஆகும். மேற்கூறிய வகையிலே ஒப்புமை இல்லாத மொழிகளை மொழிபெயர்ப்

பதிலே சிக்கல்கள் இன்னும் அதிகமாகும். தமிழும், ஆங்கிலமும் இருவேறு குடும்பத்தைச் சார்ந்த காரணத்தினாலும், வேறு கலாச் சாரத்தைக் கொண்டதாலும், பல்வேறு நிலைகளிலே சிக்கலைத் தோற்றுவிக்கின்றன.

தமிழிலுள்ள இலக்கியத்தைப் பொறுத்த அளவில் இதே நிலை தான் காணப்படுகிறது. தமிழ் இலக்கிய அணியானது பல்வேறு வகைகளிலே விளங்குகிறது. அதனால் மொழிபெயர்ப் பாளரும் பல்வேறு சிக்கலை எதிர் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர். பல்வேறு வகையான சிக்கல்களானது, பல்வேறு இலக் கியங்களை மொழிபெயர்க்கப் புகுகின்ற வேளையில் ஏற்படுகின்ற பல்வேறு சிக்கல்களை நாம் இரு தலைப்பின் கீழ்க் கொணரலாம். (1) பொதுச் சிக்கல்கள், அதாவது எந்த மொழிக்கும் பொதுவான சிக்கல்கள் (2) குறிப்பிட்ட மொழியிலே ஏற்படுகின்ற சிக்கல்கள் (உ-ம்) தமிழ் மொழியை மொழி பெயர்ப்பதிலே உள்ள சில சிக்கல்கள்.

இச்சிக்கல்களை நாம் இரு நிலைகளில் அணுகலாம். அதாவது, வடிவம், பொருள் என்ற இரு நிலையே அவை. வடிவம் என்பதில் வாக்கிய அமைப்பு, சொல்லாட்சி என்பன அமைந்து இன்னும் சில சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றன. வாக்கிய அமைப்பிலேயே, கவிதை, உரைநடை இவை பல சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றன. பல்வேறு வகையான உள்அமைப்பின் காரணமாக, காப்பியம், விடுகதைகள், பழமொழிகள், கட்டுரை, நாவல், நாடகம் இவை களிடையேயும் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. சொல் லாட்சியில் மொழி, நடை, இக்கூறுகளும் பல்வேறு சிக்கலைத் தோற்றுவிக்கிற நிலை ஏற்படுகின்றது; மொழியில் கூட இலக்கிய, கொச்சையான, மரபு சார்ந்த, வழக்குச் சொற்கள் சிக்கலைத் தோற்றுவிப்பது இயல்பே. சிலேடை, ஒலிக்குறிப்பு, இரட்டைக் கிளவி என்ற சொல்லாட்சி, ஆகுபெயர், அடுக்குத் தொடர் இவை களும் சிக்கலைத் தோற்றுவிக்கின்றன.

பொதுவாக எல்லா மொழிகளிலும் ஏற்படுகின்ற சிக்கல்களை நாம் காண்போம்.

(1) சொல்லும் பொருளும்

ஒரே சொல் பல பொருளைக் குறிக்கிறது. இந்நிலை மொழி பெயர்ப்புப் பணியிலே, மொழிபெயர்ப்பாளர்க்கு இடர்ப்பாடாக இருக்கின்றது. இந்நிலையில் அச்சொல் வெளிப்படுத்துகின்ற

பொருள் என்ன என்பதை அறிந்து, அப்பொருளினை மொழி பெயர்ப்பில் கொணர வேண்டும். நீதிநெறி நூலான ஆத்திச் சூடியில் 'கிழமைப் பட வாழ்' என்ற நெறி அமைகிறது. இதில் 'கிழமை' என்ற சொல் நாள், உரிமை, நட்பு என்ற மூன்று பொருட்களை உணர்த்துகின்றது. ஆனால் மேற்கூறியவையில் கடைசிச் சொல்லான நட்பு என்பதைத் தான் ஆத்திச்சூடி விளக்கு கிறது. அதனை நாம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் போது 'Live in Friend hip)' (நட்போடு வாழ்) என்றே பெயர்க்க வேண்டி உள்ளது. அப்படிப் பெயர்த்தால் தான் மூலநூல் கூறு கின்ற கருத்து ஆங்கிலத்தில் தெளிவாக விளங்கப்பட்டிருக்கும்.

பழமொழிகள்

மக்களின் அன்றாடப் பழக்க வழக்கங்களிலே, அதாவது பேச்சு வழக்கிலே 'பழமொழிகள்' பெரும்பாலும் விரவியிருப்பதைக் காணலாம். 'வாய்மொழி', எழுத்து உலகிலே,பழமொழி மிகவும் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. பழமொழியானது, அந்தந்த மொழியிலே பேசுகின்ற மக்களின் வாழ்க்கையின் சாராம் சத்தைப் பிரதிபலிக்கிறது. இம்மாதிரியான உபயோகங்களை மொழிபெயர்ப்பது கடினம். இந்நிலையில் நாம் இரு இணையான பழமொழியை அளிப்பதிலே திருப்தியுறுவது நலம். மாற்றுமொழி யாளர் அப்பொழுது தான் அப்பழமொழியின் உள்ளார்ந்த உயிரோட்டத்தைப் புரிந்து கொள்வர். தமிழில் 'அத்தி பூத்தாற் போல' என்பது அரிதான நிலையினைக் குறிக்கின்ற பழமொழி யாக விளங்குகிறது. இதனை நாம் அப்படியே ஆங்கிலத்தில் நேராக மொழிபெயர்த்தால் ஆங்கில மக்களுக்கு இந்தப் பழமொழி தருகின்ற உணர்வினைக் கொடுக்க முடியாது. அதற்கு நாம் 'As rare as hen's teeth' என்ற இணையான ஆங்கிலப் பழமொழியைக் கொடுப்பது நலம்.

மரபுச் சொற்கள்

மரபுச் சொற்களும் மொழிபெயர்ப்பாளரைப் பொறுத்த அளவில் தடைக் கற்களாக விளங்குகின்றன. தமிழிலே நாம் மந்தி' என்று பெண் குரங்கையும், 'கடுவன்' என்று ஆண் குரங் கையும் குறிக்கச் சொற்களைப் பயன்படுத்துகிறோம். ஆனால் ஆங்கில மொழியில் மந்தி, கடுவன் என்ற இரண்டு சொற் களுக்கும்'Female Monkey and Male Monkey'என்று பயன்படுத்த வேண்டிய நிலையில் உள்ளோம். அதே போன்று 'சிறுமி' என்று பெண்குழந்தையையும் 'சிறுவன்' என்று ஆண் குழந்தையையும்

அழைக்கின்ற வழக்கம் நம்மிடையே உள்ளது. இதனை நாம் ஆங்கில மக்களுக்குப் புரிய வைக்க 'Child' என்ற சொல்லை தான் அடிப்படையாக நினைக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

வழக்குச் சொற்கள்

மேற்கூறிய மரபுச் சொற்களைப் போன்று வழக்குச் சொற்களும், மொழிபெயர்ப்பாளர்களினால் மொழி மாற்றம் செய்ய முடிவதில்லை. மூலமொழியிலுள்ள சொற்களுக்கு இணையான கலைச் சொல்லை மாற்று மொழியில் பெறுவது என்பது இயலாத காரியம். இம் மாதிரியான சிக்கல்கள் ஏற்படும் போது, வழக்குச் சொற்கள் நிறைந்த வாக்கியங்கள், பத்திகளை விட்டு விட்டு ஒரு சாதாரண நடையினைப் பயன்படுத்துதல் நலம். 'உன்னைப் போல் ஒருவன்' நாவலில் ஜெயகாந்தன் சென்னையில் உள்ள சேரிப் பகுதி மக்களின் வழக்கிலே இருக்கின்ற சொற்களைத் தருகின்றார். சான்றாக,

'இப்பப் பாக்கணுமே அதே! படா ஸ்டைலு
ஆளும் சும்மா சம்னு கீறா.''[1] இங்கு ஒரு குறிப்பிட்ட இடத்திலே வழங்கப்படுகின்ற சொல் மட்டுமல்லாது, மற்றைய மொழிச் சொற்களும் அடங்கியுள்ளன. (படா—ஹிந்திச் சொல், ஸ்டைலு — ஆங்கிலச் சொல்). இதனை ஆங்கில வடிவமாக்கும் போது

Now you can see her very form;Very elegant and beautiful is the person too என்று தான் அமைக்க வேண்டி உள்ளது. வழக்குச் சொற்கள் இவ்வாறாக சிக்கலைத் தந்தாலும், அதனை நாம் மேற்கூறிய முறையிலேயே மொழிபெயர்ப்பது நலம்.

பொருள்கோள்

கவிதையில் சொற்றொடர்கள் சிலவேளைகளில் பொருளில் தெளிவின்மையைத் தோற்றுவிக்கும். சொற்களின் வரிசையினை மாற்றி அமைத்தால் தான், சரியான பொருளைத் தெரிந்து கொள்ள அது வாய்ப்பாக அமையும். அதனால் மொழி பெயர்க்கும் போது மூலத்திலிருப்பது போன்றே வாக்கிய அமைப்பை வைத்துக் கொள்வதா அல்லது தெளிவிற்காக வரிசையினை மாற்றி அமைத்தல் நலமா என்ற கேள்வி எழுகிறது. சான்றாகத் திருக்குறள்

---

1. 'ஜெயகாந்தன் —'உன்னைப்போல் ஒருவன்'

"உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன் உண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு" (குறள்—255)

என்று செப்புகிறது. மூலம் 'உண்ணாமை உள்ளது உயிர்நிலை' என்று கூறுவது, மாமிசம் உண்ணாமல் இருப்பது, உயிரை நீண்ட நாள் வாழ வைக்கும் என்று கூறுகிறது. அதனை 'ஊன் உண்ணா அண்ணாத்தல் செய்யாது அளறு' என்ற வரிகளில் அமைந்த 'ஊன் உண்ணா என்பதை முதல் வரியிலும் சேர்த்தால்தான் பொருள் தெளிவு பிறக்கும். இதனை நாம் ஆங்கில மொழிக்கு மாற்றும் போது

"Not to eat flesh contributes the continuance of life,
If a man eats flesh, hell will not open its mouth"[2]

இவ்வாறு 'Flesh' என்ற சொல்லை முதல் வரியிலும் அமைத்தால் தான் குறளின் சரியான பொருளை அறிந்து கொள்ள முடியும்.

பொருள் கொள்ளுகின்ற நிலைகள்

இதனை நாம் ஏற்கனவே பார்த்த 'சொல் பொருள் தலைப் பினுள்ளும் அடக்கலாம். சில வாக்கியங்களை, கவிதைகளை ஆங்கிலத்தில் பெயர்க்கும் போது, மேலோட்டமாகத் தெரிகின்ற அல்லது அறிகின்ற பொருளை மட்டும்தான் கூற முடியும். முழுப் பொருளையும் கொடுப்பது என்பது இயலாத காரியம். 'பிறன் மனை நயவாமை' என்ற அதிகாரத்தில்

"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு" (குறள்-148)

என்ற குறளடியை ஆங்கிலத்தில்

He only leads a manly life
Who looks not another's wife

என்று பெயர்க்கலாம். மூலத்தில் 'நோக்காத' என்ற சொல் 'பார்க்காத' என்ற பொருளில் மட்டுமல்லாமல், காம இச்சை யோடு பார்த்து விரும்பி அடைய முயலுகின்ற நிலையினையும் குறிக்கின்றது. மொழி பெயர்ப்பில் நாம் குறித்துள்ள சொல் இம் மாதிரியான ஆழமான பொருளைக் குறிப்பதில்லை.

---

2. Rev. Dr. G. U. Pope Drew & John Lazarus'— Tirukkural p. 68.

விடுகதைகள்

விடுகதைகள் என்பது வார்த்தையும், அதோடு சேர்ந்து பொருளும் வருமாறு அமையும். இந்நிலை அமையாவிட்டால் விடுகதைக்கு விடையளிப்பது கடினம். ஆனால் வார்த்தையும், பொருளும் ஒரு சேர அமைகின்ற நிலையிலே அதனைப் பெயர்க்க முடியாது.

விடுகதையினை விளக்கி மொழிபெயர்த்தால் அது விடுகதை யாக அமையாது. இதற்குச் சான்றாகத் தமிழில்,

''அறிவின் மறுபெயர்
இரவில் வருவது—அது என்ன? என்பதை

A Synonym of knowledge
It comes at night—what is it?

என்று பெயர்க்கலாம். என்றாலும் தமிழிலே 'மதி' என்ற சொல் அறிவையும், சந்திரனையும் ஒரு சேரக் குறிக்கும். இதனை நாம் ஆங்கிலத்திலே அமைக்க முடியவில்லை. இதனை ஒரு வகையில் குறை என்று சொல்லலாம். இம்மாதிரியான நிலைகளை மொழி பெயர்க்க முடியாதவை என்ற வகையிலும் அடக்கலாம்.

மெய்ப்பாடு

மொழிபெயர்ப்பு, மூலநூலின் மெய்ப்பாட்டை பிரதிபலிக்க வேண்டும். ஆனால் நடைமுறையில் நோக்கும்போது, அது எளிதான செயலாகப் படவில்லை. சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் அழுகுரல் அவலச் சுவையாக வெளிப்படுகின்றது. ஆனால் நாம் மொழிபெயர்ப்பில் அந்த அவலச் சுவையைப் பிரதி பலிப்பது என்பது கடினமாக உள்ளது.

''என்னுறு துயர்கண்டும் இடருறும் இவள் என்னீர்
பொன்னுறு நறுமேனி பொடியாய் கிடப்பதோ
மன்னுறு துயர்செய்த மறவினை அறியாதோர்க்கு
என்னுறு வினைகாணா இதுவென உரையாரோ''

(ஊர் சூழ்வரி—39-42)

''O Seeing me in deep affliction and without a word of consolation, is it fit that your body, fair as the fairest gold, should lie here in the dust? Will not people say that it is my inevitable fate that made the righteous king act thus wrongly

in ignorance"[3] மேற்கூறிய மொழிபெயர்ப்பில் பொருள் தெளிவு அமைந்திருந்தாலும் கூட, அந்த அவலச் சுவையானது பிரதிபலிக்க வில்லை.

சிலேடை

ஆங்கிலத்தில் 'Pun' என்று குறிப்பது தான் இங்குச் சிலேடை யாக வெளிப்படுகிறது. இருபொருள் தருகின்ற சொற்களே அவை என்பது தெரிந்ததே. அழகிய சொக்கநாத பிள்ளை சிவனையும், தேங்காயையும் இணைத்து சிலேடையாக மூன்று கண்களை உடை யவனும், வழிபடப்படுபவனும், வழிபடுவதற்கு பயன்படுகிறதை யும் இன்னும் பல நிலைகளிலும் பாடியிருக்கின்றார்.

"கல்லால் அடியுறலால் கண்மூன் றிருப்பதனால்
எல்லோரும் பூசைக் கெடுத்திலால்"
(தனிப்பாடல் திரட்டுVol.—2) பாடல் 667

இதனை

Being pelted by stones
Having three eyes
Taken by all for puja

என்று சாரமில்லாமல் மொழிபெயர்ப்பாக்கலாம்.

தொடை நயம்

எதுகை, மோனை கவிதைகளிலும், மற்றும் சில இலக்கிய வகைகளிலும் காணப்படுகின்றன.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" என்பதில் உள்ள எதுகையானது

ஆங்கில மொழியாக மாறும் போது

"A, as its first of letters, every speech maintains
The Primal Deity is first through all the world's
domains"[4]

மறைந்து விடுகின்றது.

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்" (குறள்-121)

என்பதில் உள்ள மோனையானது மொழிபெயர்ப்பில்

---

3. The Cilappatikaram—Tr. by prof- V.R. Ramachandra Dikshitar p. 283.
4. Rev. Dr. G U. Pope Rev. W.H. Drew and Lazarus and Mr. F.W. Ellis—p. 1.

"Control of self does man conduct to bliss
the immortal's share;
Indulgence leads to deepest night, and
leaves him there[5]"

இருக்குமிடம் தெரியவில்லை.

மேற்கூறிய சான்றுகளெல்லாம் எல்லாமொழியிலும் மொழி பெயர்க்கப் புகும்போது ஏற்படுகின்ற சிக்கலாக அமைகின்றது. இதோடு மட்டுமல்லாது, தமிழ் மொழிக்கே உரிய சில மரபுகள், வழக்குகள் உள்ளன. அதனை மொழிபெயர்க்கும் போதுகூட மொழிபெயர்ப்பாளர் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டி உள்ளது. இதனை நாம் ஒவ்வொன்றாகக் காண்போம்.

உறவுமுறைச் சொற்கள்

தமிழில், உறவுமுறைச் சொற்கள் அதிக அளவிலே வழங்கி வருதலைக் காண்கிறோம். இம்மாதிரியான உறவு முறைச் சொற்களை மொழிபெயர்க்கும் போது அதற்கு இணையான சொல்லையே பயன்படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறோம். அதோடு தேவையேற்பட்டால் அடிக்குறிப்பில் விளக்க வேண்டிய நிலையும் ஏற்படலாம். தி. ஜானகிராமன் என்பவரின் நாவலான 'அம்மா வந்தாள்' என்பது 'The Sins of Appu's Mother' (அப்புவினது அம்மா செய்த பாவங்கள்) என்று ஆங்கிலத்திலே மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அதில் தமிழில் 'அத்தை' என்ற சொல் ஆங்கிலத்தில் 'ஆன்ட்' என்று பெயர்க்கப்பட்டுள்ளது. 'ஆன்ட்' என்ற ஆங்கிலச் சொல் 'அத்தை' என்ற உறவு முறைச் சொல்லின் உண்மையான பொருளை வெளிப்படுத்தவில்லை. தமிழில் தனித்தனியாகக் குறிக்கின்ற சித்தி, அத்தை, மாமி, பெரியம்மா என்ற சொற்களுக்கும் 'ஆன்ட்' என்றே பயன்படுத்த வேண்டி உள்ளது..

பெயர்ச்சொல்

'அவன்', 'அவர்' என்ற இரு சொற்களை ஆங்கிலத்தில் 'He' என்ற ஒரே சொல்லால் குறிக்கிறோம். ஆனால் தமிழில் மேற் கூறிய இரு சொற்களும், மரியாதையின் அடிப்படையில் பிரிக்கப் பட்டுள்ளது. இதனை நாம் மொழிபெயர்ப்பில் முற்றிலுமாக இழந்து விடுகின்றோம்.

---

5. Ibid P. 33

இரட்டைக் கிளவி

இரட்டைக் கிளவி என்ற சொற்றொடரானது தமிழுக்கே உரியது. குடுகுடு கிழவன் என்ற தொடரில் குடுகுடு என்பது பெயரடையாக அமைகின்றது. இப்பெயரடையானது, மிகவும் வயாதனவன் என்றபொருளைத் தருகிறது. இதே போன்று ஒரு புறப்பாடலில் குழந்தையின் நடையை 'குறுகுறு நடந்து' என்று கவிஞர் வருணிக்கிறார். மொழிபெயர்ப்பில் நாம் அதன் பொருளைக் கொடுக்கலாமே ஒழிய, அந்தக் குறிப்பிட்ட சொற்றொடரானது விலகிவிடுகின்றது.

அடுக்குத் தொடர்

தமிழ் இலக்கியத்தைப் பொறுத்த அளவில், கவிஞன் விரும்புகின்ற உணர்வைக் கொடுப்பதற்கும், தன் கருத்திற்கு அழுத்தத்தைக் கொடுப்பதற்கும், அடுக்குத் தொடர் என்ற உத்தியைக் கையாள்கிறான். இந்த உத்தி "கலஞ்செய் கோவே! கலஞ்செய் கோவே" (புறநானூறு 228) என்று விளியாகவும்,

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று" (குறள்—29)

என்று அழுத்தங் கொடுப்பதற்காகவும் எனப் பலவாறாக அமைகிறது. முதல் விளி நிலையை,

O who makes pot, O who makes pot

என ஆங்கிலத்திலும், அதே போன்று இரண்டாவது நிலையை,

"If all your life be utter truth, the truth alone
Tis well, though other virtuous acts be left undone"[6]

மொழி பெயர்க்கலாம். ஆனால் இந்த உத்தியின் முக்கியப் பண்பானது அடிபட்டுப் போகிறது.

மடக்கு

சில இலக்கிய வடிவங்களில் வார்த்தைகள் அல்லது வரிகள் மறுபடியும் மறுபடியும் அமைகிறதோடு, அது ஒரே பொருளைத் தருவதோடு, பல பொருளைத் தருவதாகவும் அமைகிறது. ஒரே வரி பல பொருளைக் கொடுக்கின்ற நிலையிலே, மூலத்தின் வடிவம் மொழிபெயர்ப்பிலே அமையாமல் மறைந்து விடுகின்றது. "வான

6. Ibid p. 79

கந்தரு மிசைய வாயின" என்ற ஒரே வரி நான்கு தடவை அமைந்து பல பொருளைத் தந்து ஒரு கவிதையாக அமைகிறது' இப்பாடலானது

The cloud sounded as the sea,
It grew to fill the sky;
Big mountains had trees on their peaks
They were as famous as the heavens;

என் மொழி பெயர்க்கப்படலாம். இதில் தமிழிலே இருக்கின்ற வடிவமானது முற்றிலும் அழிந்துபட்டது.

குறிப்புப்பொருள்

தமிழர்களின் அகப்பாடல்கள் உள்ளுறை, இறைச்சி என்ற குறிப்புப் பொருள்களின் கருவூலமாக விளங்குகிறது. அங்குக் கவிஞர், குறியீடு, உவமைகளை குறிப்புப் பொருளாகப் பயன் படுத்துகின்றார். அம்மூவன் இயற்றிய குறுந்தொகைப் பாட லொன்று தலைவன் தலைவியைத் திருமணம் செய்யாமல் நெடு நாள் பழகி வருவதை கண்டு துயருற்ற தலைவி, தலைவன் தன்னைத் திருமணம் செய்து கொள்ளாவிடில் தன் உயிர் பிரியும் என்று குறிப்பாற் உணர்த்தி நிற்கின்றது.

"இலங்குவளை நெகிழச் சா அ யானே
உளனே வாழி தோழி சாரற்
றழையணி யல்குன் மகளி ருள்ளும்
விழவுமேம் பட்டவென் னலனே பழவிறற்
பறைவலந் தப்பிய பைதனாரை
திரைநோய் வாங்கு சினை யிருக்கும்
தண்ணந் துறைவனொடு கண்மா றின்றே".
(குறுந்தொகை—125—அம்மூவன்)

இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு,

"As my shining bangles slip from my arms,
I am wilting
But, I am alive, my friend
My glorious virtue
Which was so important
like a festival of all the hillside women, with their skirts of leaves on their loins:

it is with that man
from the cool seashore,
Where a sorrowful crane
that has lost its old strength
and cannot fly.
Sits on a branch that bends
to touch the waves"[7]

மேற்கூறிய சங்கப் பாடலைமொழிபெயர்க்கும் போது பாடலைச் சரியாகப் புரிந்து கொள்ள,

"As the crane cannot fly, and must wait for the fish to come to him, so she cannot go to him, but must wait for him to come to her. She has lost her strength because her virtue is with him என்ற விளக்கத்தினையும் பாடலின் மொழிபெயர்ப் போடு சேர்க்க வேண்டி உள்ளது.

ஆகுபெயர்

ஒரு சொல்லானது, இடத்தோடும், காலத்தோடும், செய லோடும் பொருந்தி நின்று தொடர்ச்சியான பொருளை விளக்கு கிறது. கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதையில், ஒரு பருவத்தின் பெயர், பருவத்தை மட்டும் குறிக்காமல், அதனோடு தொடர் புடைய துன்பத்தையும் கூறி நிற்கின்றது.

"பூல்காலன்ன செங்கா லுழந்தின்
ஊழ்படு முதுகை யுழையினன் கவரும்
அரும்பனி யச்சிரந் தீர்க்கும்
மருந்துபுரி தில்லையவர் மணந்த மார்பே"

(குறுந்தொகை—68)

இதில் கடைவரிக்கு முந்திய வரி 'to end the harsh season of mist and dew' என்று மொழி பெயர்க்கப்படலாம். இதுதான் வெளிப்படையாகத் தெரிகின்ற பொருளாக அமைந்தாலும், பிரிவுத் துயரினால் வாடுகின்ற தலைவி இப்பருவத்தினால் துன்புறுவதையே கவிஞரின் நோக்கமாக அமைகின்றது. இதன் மொழிபெயர்ப்பானது,

---

7. Dr. M. Shanmugham pillai and E. Ludden—KURUNTOKAI. KOODAL PUBLISHERS 217—A, South Masi Street, Madurai-1,—FE 1976 p. 301.
8. Ibid p. 301.

"This misty season
is so hard to bear
When flocks of deer steal
the dried, ripe grain from the black gram
With its red legs, like the forest hen
His chest
Close to me
is the only medicine
that will end this misery"[9]

இம்மொழிபெயர்ப்பில், பனிக்காலத்தினால் ஏற்பட்டுள்ள நோயை மூலத்திலிருந்து மாறுபட்டு தெளிவாக விளக்கி நிற்கின்றது.

சித்திரக்கவி

சித்திரக்கவி என்பது பலவகையான கவிதைகளாகும். அதில் எழுததுக்கள் ரதமாகவோ, வண்டிச் சக்கரமாகவோ, இரு நாக மாகவோ, குத்து விளக்காகவோ, அன்னமாகவோ அமைகின்றது. இதில் எழுத்துக்கள் குறிப்பிடத் தகுந்த இடத்தைப் பெற்றுள்ளன. இதை நாம் மற்றொரு மொழிக்கு மாற்றி அமைக்கின்ற போது, எழுத்துக்களை மூலத்தில் அமைவது போன்றே அமைப்பது கடினம், இயலாதது.

நிரோட்டகம்

இதுவும் 'சித்திரக்கவி' வகையைச் சார்ந்ததாகும். அங்கு ப, ம என்ற இதழ் சேர்ந்து ஒலிக்கக்கூடிய ஒலிகளைப் பயன்படுத்தாது பாடல் அமைகின்றது. இதனை நாம் மொழிபெயர்க்கும் போது, ப, ம என்ற ஒலிகள் மொழிபெயர்ப்பிலே தோன்றி மூலக் கவிதை யின் இலட்சிய உருவை அழிக்கின்றது. இவ்வகைப் பாடலில் மேற் கூறிய கருத்தே சிக்கலாக அமைகின்றது.

யாழியல் வாய வியலாள வாயவொளி
ஏழிய லொட்டாவா லேழியுரை வாழி
யுழைஇய வியளா வாயில்விழி யையோ
விழைஇய லொழியா விருள் என்பது கவிதை.

இதை,

---

9. I bid p. 154

Un Comparable is her Speech
To the Sound of the yazh (lyre)
Her Spear like eyes
In no way Similar
to the deer's eyes
Her beauty itself
Darkens the Sparkling Ornaments என இவ்வாறே மொழிபெயர்க்கப்பட முடிகின்றது.

பிரிவின் பெயர்கள்

தமிழ்க் காப்பியங்களில், காண்டம், காதை, படலம் அல்லது பருவம் என்பது உள்பிரிவைக் குறிக்கின்ற சொல்லாக அமைகிறது. அதனை நாம் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் போது, 'Canto', அல்லது 'Section' அல்லது 'Part' என்ற சொல்லையே பயன் படுத்துகிறோம். மேற்கூறிய தமிழ்ப் பகுப்புகளுக்கு இவை இணைகள் என்று சொல்ல முடியாது.

கலைச் சொற்கள்

தமிழ் இலக்கியமானது, தமிழர்களின் மரபுச்சொற்களை, பழக்கவழக்கங்களைத் தன் கவிதையிலே கொண்டு அமைந் துள்ளது. சங்க இலக்கியத்தில் இம்மாதிரியான மரபுச் சொற்கள் அதிகம். சங்க இலக்கியத்திலே குறிக்கப் பெறுகின்ற 'அகவல் மகளிர்' என்ற சொல்லை மற்றொரு மொழியில் காண்பது என்பது கடினம். அதனை நாம் ஆங்கிலத்தில் 'the women who sing akaval' என்றே மொழிபெயர்க்க முடியும். இதனை வேறெந்த நிலையிலும் அமைக்க முடியாது.

இதே போன்று சங்கப் பாடல்களில் பொருளடக்கமானது திணை, துறை என்று இருவகையாகப் பகுக்கப்பட்டது. அதனை நாம் 'theme', 'subtheme' என்றே விளக்க வேண்டிய நிலையிலே இருக்கின்றோம். இதன் கீழ், திணை –பொதுவியல் என்றும், துறை—கையறுநிலை என்றும் அமைகின்றது. இதனை நாம் விளக்கலாமே ஒழிய மொழிபெயர்க்க முடியாது.

சங்கப் பாடல்கள், அகம், புறம் என்று இருபிரிவாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. அகம், தலைவன் தலைவியின் அன்பினைச் சுட்டுவதாகவும், புறம் என்பது வீரம், கொடை, மன்னனின் ஆட்சிச் சிக்கல், மக்கள்மீது வரி விதிப்பு இவை பற்றி விளக்குவ

தாகவும் அமைகிறது. இவ்விரண்டிலும் 'குறிஞ்சி', 'வெட்சி' என்ற குறிப்புப் பொருளாகப் பயன்படுகின்ற சொற்கள் பூக்களைக் குறிக்கின்ற சொற்களாக மட்டும் அமையாது, நிலங்களைக் குறிக்கின்ற சொல்லாகவும், பின்புலமாக விளங்குகின்ற பாத்திரங்களின் உணர்ச்சிக் குறியீடுகளாகவும் உள்ளன.

புறப்பாடலில் போரின் நிலை குறித்தோ, ஆட்சி அமைப்பின் பகுதியையோ சுட்டுவதாக அமைகிறது. இம்மாதிரியான நிலையில், கருத்தினையோ, பொருளினையோ மொழிபெயர்ப்பில் கொணர்வது என்பது கடினம்.

தோழி, பாங்கன் என்று அடிக்கடி அகப்பாடலில் குறிக்கப்படுகின்ற சொற்களும், அதே போன்று பாணன், பாடினி என்று வருகின்றவைகளும் விளக்கப்படலாமே ஒழிய மொழிபெயர்க்க முடியாது. சில சமயங்களில் தாவரப் பெயர்களும் மூலத்திலே இருப்பது போலவே அமைக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். அதற்குச் சான்றாக 'வேங்கை', 'மாறா', 'நெருஞ்சி' போன்ற சொற்களைக் கூறலாம்.

இயற்கையிலே நிகழ்கின்ற காட்சிகளான வேங்கை மரம் பூத்திருக்கின்ற காட்சியும், வயலில் கதிர் முற்றி நிற்கின்ற நிலையும், அகமாந்தர்களின் தனிப் பேச்சிலே கல்யாண காலத்தையும், வீட்டிலே பெண்களை வைத்திருக்கின்ற நிலையினையும் குறிப்பாக உணர்த்தி நிற்கின்றது. இம்மாதிரியான கவிதை மரபிலே அமைகின்ற நிகழ்வுகளை மாற்று மொழிகளில் படைப்பது கடினம்.

'வெறியாட்டு' என்ற தமிழ் இலக்கியச் சொல், மேலோட்டமாக பேயினால் பிடிக்கப்பட்ட நாட்டியமாக குறிக்கப் பெறினும், அதனைவிட ஆழமான பொருளைக் கொண்டுள்ளது. தலைவியின் காதல் நோயானது, தவறுதலாக 'வெறியாட்டு' என்று கருதப்பட்டு, நோய்க்கு ஒரு தெய்வீகத் தன்மையை வழங்குகின்றனர். இதனை 'வெறியாட்டு' என்ற சொல் குறிக்கின்றது.

'அறத்தொடு நிற்றல்' என்பது ஒழுக்கத்தோடு அமைவது என்று பொருள்படும். இக்கூற்று தலைவி தன் காதலை வெளிப்படுத்தும் போது, தோழி செவிலித் தாயிடம் தலைவியின் காதலை வெளிப்படுத்தி, அவள் நற்றாயிடம் இச் செய்தியைக் கூறி, தலைவியை இன்னொருவனுக்கு மணம் முடித்துக் கொடுப்பதைத் தடை செய்வதாகும்.

இம்மாதிரியான நிலைகளில் மொழிபெயர்ப்புப் பணியானது அடிக்குறிப்புகளில் விளக்கப்படுதல் நலம். மரபினைப் புரிந்து கொண்டாலொழிய வெளிநாட்டவர் தமிழரின் பழமையான இலக்கியத்தைப் புரிந்து கொள்வது எளிதாக அமையாது.

மொழிபெயர்ப்பிலே பொதுவான சிக்கல்கள் எவை அதாவது எல்லா மொழிகளிலும் மொழிபெயர்க்கும் போது ஏற்படுகின்ற சிக்கல்கள் எவை? தமிழ் மொழிக்கே உரிய சிக்கல்கள் எவை என்பதைப் பார்த்தோம். அந்தச் சிக்கல்களில் சிலவற்றை எவ்வாறு தீர்க்கலாம் என்ற வழிவகைகளையும் கண்டதோடு, சில வற்றை மொழிபெயர்க்க முடியாதவை என்ற நிலையிலும் அமைத் தோம். மொழி, இலக்கியம் இவைகளில் மட்டுமா சிக்கல்கள் உள்ளன என்று பார்த்தால் அறிவியல், சட்டம் போன்ற துறை களிலும், மொழிபெயர்க்கப் புகும் போது பல்வேறு சிக்கல்களை நாம் எதிர்கொள்ள வேண்டி உள்ளது. இதற்குமேல் அறிவியல், சட்டத்துறைகளில் எந்த மாதிரியான சிக்கல்கள் ஏற்படுகின்றன என்று பார்ப்பது, மொழிபெயர்ப்புச் சிக்கல்களுக்கும், அறிவியல், சட்டத்துறை மொழிபெயர்ப்புகளைச் செய்யும்போது ஏற்படு கின்ற சிக்கலுக்கும் உள்ள வேறுபாட்டினை அறிய வழிவகுக்கும். அதனை நாம் பிற துறைகள் என்ற அமைப்பின் கீழ்க்காண்போம்.

பிற துறைகள்

(1) அறிவியல்

இலக்கியத்தை மொழி பெயர்க்கின்ற பணி தான், அறிவியல் கருத்துகளை மொழிபெயர்க்கின்ற பணியோடு அதிகமாக நடத்தப் பட்டு வருகின்றது என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. அறிவியலில் உள்ள அடிப்படைக் கருத்துகள் எல்லா நாட்டினரிடை யேயும் மிகவும் பரவலாகப் பரப்பப்பட்டு வந்தது, வருகின்றது. இதனால் அறிவியலைப் பற்றிய புத்தகங்கள் எழுதப்பட வேண்டும் என்ற சூழ்நிலை உருவாகியது. இதன் காரணமாக ஒரு நாட்டில் உள்ள எழுத்தாளர் அறிவியல் கருத்தைப் பற்றிப் பேசு கின்ற நிலையிலே, தொலைதூரத்திலுள்ள இன்னொரு நாட்டின ருக்காக அவர்களுடைய மொழியில் அதே அறிவியல் கருத்துகளை மற்றொருவர் எழுதி வந்தார்.

மேற்கூறிய எழுத்தாளர்கள் இருவரும், புதிய கண்டுபிடிப்பு கள், கருத்துகள் இவற்றை அறிவியல் பத்திரிகைகளிலே இருந்து தான் திரட்டினார்கள். இம்மாதிரியான பத்திரிகைகளிலே வரு

கின்ற கருத்துகள், அதிகமாக அறியப்படாத மொழிகளிலே அமைந்தால், அதனோடு ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் போன்ற மொழிகளிலே அதன் சுருக்கம் விளக்கப்பட்டிருக்கும். பல அறிவியல் வல்லுனர்கள் இந்த அளவிலே செய்திகள் வருவதை ஏற்றுக் கொள்கின்றனர். இந்த நிலையிலே அறிவியல் மொழி பெயர்ப்பு தேவை தானா என்று நீங்கள் வினவலாம். அறிவியல் மொழிபெயர்ப்பு ஏன் தேவை என்பதற்கு நான்கு காரணங்களைக் கூறலாம்.

முதலாவதாக, இலக்கியத்தை அதிகமாக மொழிபெயர்க் கின்ற நிலையிலே, மொழிபெயர்ப்புத் துறையிலே ஈடுபட்டிருக் கின்ற எவரும் அறிவியல் துறையில் தங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டியது மிகவும் தேவையான ஒன்றாகும். ஏனென்றால் இன்றைய உலகம், ஒரு அறிவியல் உலகமாகத் திகழ்கிறது என்ப தோடு அந்த அறிவியல் கருத்துகளானது எல்லோருக்கும் அறிவுறுத்தப்பட வேண்டும் என்பதாலேயாகும்.

இரண்டாவதாக, அறிவியல் படைப்புகளை மொழி பெயர்ப்பது என்பது, ஒரு சிறந்த மொழிபெயர்ப்பிற்குச் சான்றாகக் காட்டவாம். அதில் கருத்துகளுக்குத்தான் முதலிடம் அளிக்கப் படுகிறதே தவிர, கருத்துகள் எழுதப்படுகின்ற முறைக்கு அல்லது நடைக்கு அல்ல என்பதாகும்.

மூன்றாவதாக, மூலமொழியிலுள்ள கருத்துகளைப் பற்றிய அறிவை, அறிவியல் மொழிபெயர்ப்பு செய்கின்றவர் பெற்றிருக்க வேண்டிய தேவையை வலியுறுத்துவதாகும். நான்காவதாக, அறிவியல் மொழிபெயர்ப்பிலே சொற்களுக்கு மிகுந்த முக்கியத் துவம் அளிக்கப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாது இன்னும் பல காரணங்கள் உள்ளன.

அறிவியல் நூல்கள், கருதுகோள்கள் காரணமாகப் பரிசோதனையை நடத்தி சில உண்மைகளை வெளியிட்டு நிற் கின்றன. இந்நூல்களைப் படிக்கின்றவர்கள் உண்மைகளைத் தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் உள்ளார்கள். இதனால் அவர் படைப்பாளியினுடைய இலக்கிய நடையிலே கவனம் செலுத்துவது கிடையாது.

அறிவியல் நூல்களை எழுதுவோர் இலக்கிய நடையில் எழுத வேண்டுமென்று கவனம் செலுத்துகிறார்களோ இல்லையோ, அவர்கள் ஒரு குறிக்கோளை தங்கள் மனதிலே நிலை நிறுத்த

வேண்டியது தேவையாகும். அந்தக் குறிக்கோள் என்ன என்றால் கருத்துகளைத் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்பதேயாகும். ஏனென்றால் அறிவியல் நூல்களைப் படிக்கின்றவர்கள் செய்திகளுக்காகத் தான் அதனைப் படிக்கின்றார்கள். அறிவியல் நூல்களைப் படிக்கின்றவர்களில் தாங்கள் படிக்கின்ற அறிவியல் செய்திகளைப் பற்றிய முழு அறிவு பெற்றவர்கள் ஒரு பகுதியாகவும், மற்ற அறிவியல் பிரிவுகளை அறிந்தவர்கள் இன்னொரு பகுதியாகவும், அறிவியலே தெரியாதவர்கள் இன்னொரு பகுதியாகவும் கொள்ளலாம். எல்லோரும் அறிவியல் செய்திகள் எளிதாக தெளிவாக விளக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறார்கள். பொதுவாக மொழிபெயர்ப்பைப் பற்றிய விளக்கங்களெல்லாம் மொழிபெயர்ப்பு நூல்கள் மூலநூல் போன்று இருக்க வேண்டுமென்றும், எந்த மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது என்பதை வெளிப்படுத்தக்கூடாது என்றும் தருகின்றன. இது அறிவியல் மொழி பெயர்ப்பிற்கு முற்றும் பொருந்தும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

அறிவியல் செய்திகள் தெளிவாகச் சொல்லப்பட வேண்டும் என்ற நிலையில், இதில் வருகின்ற சொற்கள் தான் முக்கிய இடம் பெறுகின்றன. இந்நிலையில் தமிழில் நாம் அறிவியல் செய்திகளை, கருத்துகளைச் சொல்வதற்குச் கலைச் சொற்கள் மிகவும் தேவைப்படுகிறது. இந்தக் கலைச் சொற்களை நம்முடைய மொழியிலே ஏற்கெனவே இருக்கின்ற சொற்களைப் பயன் படுத்துதல் ஒரு நிலையாகும். இன்னொரு வகையிலே நாம் மூலச் சொல் தருகின்ற பொருளைத் தெளிவாக உணர்ந்து கொண்டு அந்தப் பொருள் தமிழில் எளிதில் விளங்கக் கூடிய வகையிலே சொற்களைப் புதிதாக உருவாக்க வேண்டும். மேற்கூறிய இரு நிலைகளும், அறிவியல் மொழிபெயர்ப்பில் ஏற்படுகின்ற சிக்கலைத் தீர்க்கின்ற வகையிலே இடம் பெறுகின்றன. சான்றாக ஆங்கிலத்தில் 'Pump' என்ற சொல் உள்ளது. அது கிணற்றிலிருந்து நீரை இறைத்து வெளியேற்றும் கருவியைக் குறிக்கின்றது. ஆனால் தமிழில் இதற்கு இணையான சொல் உண்டா என்று சிந்தித்த பொழுது, அதனை 'அறிவியல் மொழி பெயர்ப்பில் ஏற்படும் சிக்கல்கள்' என்று வானொலியில் கொடுமுடி. சண்முகன் விடையிறுத்தார்கள். அதாவது அவருடைய நண்பர்கள் சேர்ந்து சிந்தித்த பொழுது 'எற்றி' என்ற சொல்லைப் பெற்றதாகவும், பின் மருத்துவக் கல்லூரியில் 'Pump' என்பதை 'எக்கி' என்று விளக்குகிறார்கள் என்று அறிந்ததாகவும். பின் பேரகராதியைப் பார்த்த பொழுது அதில் எக்கி என்பது 'நீர் வீசும் பொறி' என்று

பொருள் தந்திருப்பதாகவும், கூறினார். பின்பு பரிபாடலில் இது பற்றிய விளக்கம் உள்ளது என்பதும் அறியப்பட்டது. இவ்வாறாக, அறிவியலில் கலைச் சொற்களை ஆக்குவது ஒரு வகையாக அமைகின்றது.

அடுத்த நிலையிலே கலைச் சொற்களைப் புதிதாக உருவாக்குவது இன்னொரு வகையாக அமையும். இவ்வாறு நாம் உருவாக்கும் போது, சொற்கள் மிகவும் தெளிவாக மூலச் சொல்லின் பொருளை நுட்பமாக விளக்குதல் வேண்டும் அவ்வாறு விளக்காமல் பொருளாகவே நின்று விடுவதும் உண்டு. 'Budget' என்பதை "வரவு செலவுத் திட்டம்" என்கிறோம்; Budget பொருளாதாரத்தில் மட்டுமின்றி, Time Budget, Water Budget என்றெல்லாம் வரும் போது புதிய சொல் தேட வேண்டி உள்ளது. இச்சொல்லுக்கேற்ற நல்ல சொல் இன்னும் உருவாக வில்லை.'[11] என்ற கூற்று சுட்டத்தக்கது.

இவ்வாறு நாம் சொற்களை உருவாக்குகின்ற நிலையிலே, மொழி என்பது வளருகின்ற தன்மை கொண்டது என்பதை நாம் மறத்தலாகாது. அந்தப் புதிய சொற்கள் வளருந்தன்மையைக் கருத்தில் கொண்டு மற்றை மொழிகளில் புதிய சொற்களை நாம் அமைக்க வேண்டும். சான்றாக 'Photo' என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். அந்தச் சொல்லிலிருந்து 'Photograph', 'photography', photosynthesis, photometry என்ற சொற்கள் பிறந்துள்ளன. இதற்குத் தமிழில் கலைச்சொற்களை உருவாக்கும் போது 'Photo' என்ற சொல்லின் பொருளான 'ஒளி' என்பதை அடிச்சொல்லாக வைத்து சொற்களை உருவாக்க வேண்டும். சான்றாக இவை

"Photograph	—	ஒளிவரை
Photography	—	ஒளிவரையம்
Photosynthesis	—	ஒளிச்சேர்க்கை
Photometry	—	ஒளிஅளவையம்"[12]

என அமைகின்றன. ஆனால் அறிவியல் மொழிபெயர்ப்பில் கருத்து மாறுபாடு என்பது எளிதில் அமைந்து விடுகின்ற நிலையைக் காண்கிறோம். அறிவியல் செய்திகளானது உலகளாவிய தன்மை கொண்டிருப்பதனால், அது எவ்வாறு உலகத்தில் பயன்படுத்தப் படுகிறதோ, அவ்வாறே தான் தமிழிலும் பயன்படுத்த வேண்டு மென்பது பலரின் கருத்தாக அமைகின்றது. சான்றாக ஆக்ஸிஜன்,

11. கொடுமுடி. சண்முகன்—'வானொலி' —'அகில இந்திய வானொலி நிலையம்—சென்னை-4. '22-12-84'—ப. 5.
12. மேற்படி இதழ் ப. 6.

கார்பன்டை ஆக்ஸைடு போன்ற சொற்களைக் கூறலாம். இன்னும் சிலர் ஆக்ஸிஜன் என்பதற்குப் 'பிராண வாயு' என்ற சொல்லையும், 'கார்பன்டை ஆக்ஸைடு' என்பதற்குக் 'கரியமில வாயு' என்ற சொல்லையும் பயன்படுத்தலாம் என்றும் கூறுகின்றனர்.

இதற்கு நாம் முடிவு கூற வேண்டுமென்றால், நாம் நம் தமிழ் மொழியை வளர்க்க வேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டவர்களுக்கு தமிழிலே புதிய கலைச் சொற்களை உருவாக்கலாம். ஆனால் அதே நேரத்தில் அறிவியல் செய்திகள் ஒரு உலகளாவிய தன்மை கொண்டிருப்பதனால், எல்லோரும் ஏற்கெனவே ஏற்றுக் கொண்ட சொல்லை அவ்வாறே பயன்படுத்துதல் நலமாக இருக்கும்.

2. சட்டத் துறைகள்

சட்டத்துறை என்பதும் அறிவியல் துறை சார்ந்ததாகும். அதிலும் சொல்லாக்கம் தான் மொழிபெயர்ப்பாளருக்கு மிகுந்த சிக்கலை அளிக்கின்றது என்பதில் எந்த வித ஐயமுமில்லை. சட்டத்துறையைப் பொறுத்த அளவில், கலைச்சொற்கள் ஆங்கிலத்தில் தான் அமைந்துள்ளன. அச் சொற்களைத் தமிழில் பெயர்க்கும் போது மொழிபெயர்ப்பாளர் பல கருத்துகளை மனத்திலே கொள்ள வேண்டியது மிகவும் தேவையாகும். அவையாவன "மொழிபெயர்ப்பாளர் சட்டச் சொற்களை நன்கு புரிந்தவராக இருத்தல் முதல் தேவையாகும். அவர் சட்டத்துறையில் நன்கு தேர்ச்சி பெற்றிருத்தல்வேண்டும். இரண்டாவதாகத் தமிழ்மொழியிலும் போதிய அளவு பயிற்சியுடையவராக அவர் இருத்தல் வேண்டும். ஆங்கிலத்திலுள்ள சட்டச் சொற்களை நன்கு புரிந்து கொண்டு, அச் சொற்கள் உணர்த்தும் கருத்துகளைக் குறைவற அறிந்து கொண்டு, அதன் பின் அக்கருத்துகளைத் தமிழில் கூறும் ஆற்றல் மொழிபெயர்ப்பாளரிடம் இருத்தல் இன்றியமையாததாகும்."[13]

மேற்கூறிய நிலையிலே நாம் சொற்களை உருவாக்கும் போது தமிழிலே அமைகின்ற சொற்கள் ஆங்கிலச் சொற்களை விடத் தெளிவாகவும், திட்பமாகவும் விளங்குகின்றன. 'Damages' என்று ஆங்கிலத்தில் சட்டச் சொல்லானது ஒன்று உண்டு. 'இரண்டு பேர் தமக்குள் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளுகின்றனர்; அவர்களில்

---

13. மா. சண்முக சுப்பிரமணியம்—மொழிபெயர்ப்பும் மொழியாக்கமும்; 'சட்டத் தமிழ்'—திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1. மு. ப. 1969. ப 17

ஒருவர் அந்த ஒப்பந்தப்படி நடக்கத் தவறுகிறார்; இதனால் மற்றவருக்கு இழப்பு நேருகிறது. எவருக்கு இழப்பு விளைந்ததோ அவர் ஒப்பந்தத்தை மீறியவர் மீது வழக்கிட்டு, விளைந்த இழப்பிற்கு ஈடாக ஒரு தொகையைப் பெறலாம். இவ்வாறு பெறும் தொகையை ஆங்கிலத்தில் 'Damages' என்பார்கள். நாம் தமிழில் அதை 'இழப்பீடு' என்கிறோம்.

ஒருவர் மற்றொருவரைக் குறித்து அவதூறாகப் பேசுகின்றார். அவதூறு இழைக்கப்பட்டவர் அவதூறு இழைத்தவர் மீது வழக்கிட்டு, தமக்கு விளைந்த அவமானத்திற்கு மாற்றீடாக ஒரு தொகையைப் பெறலாம். இந்தத் தொகையையும் ஆங்கிலத்தில் 'Damages' என்று தான் குறிப்பிடுகின்றனர். இங்கு 'Damages' என்பதை நாம் தமிழில் 'தீங்கிடு' என்கிறோம்.[14] என்றது குறிப்பாக விளக்கி நிற்கின்றது. ஆனால் மேற்கூறிய சான்று மொழிபெயர்ப்புச் சிக்கலைத் தீர்த்து வைக்கின்றது.

இதே போன்று தான் ஆங்கிலத்தில் 'Sentence' என்ற சொல்லிற்கு தொடர் தண்டனை என்ற இருபொருள் உண்டு. 'Sentence' என்ற சொல் நீதி மன்றத் தண்டனையைத் தான் குறிக்கின்றது என்ற தெளிவு இல்லை. தீர்ப்பில் விதிக்கப்படும் தண்டனையை நாம் "தீர்ப்புத் தண்டனை" என்று தமிழில் கூறுகிறோம். நீதிமன்றம்' கூறுவது 'தீர்ப்பு'. அத்தீர்ப்பில் விதிக்கப்படும் தண்டனை தீர்ப்புத் தண்டனை.

இவ்வாறு 'Punishment', 'Sentence' என்ற ஆங்கிலச் சொற்களுக்குள்ள வேறுபாட்டினைத் 'தண்டனை', 'தீர்ப்புத் தண்டனை' என்ற சொற்களால் விளக்குகிறோம்.[15] என்பதும் நம் தமிழ்மொழியில் சட்டத்துறைச் சொற்களைத் தெளிவாகக் கூற முடியும் என்பதை அறுதியிட்டுக் கூறுகின்றன.

மொழிபெயர்ப்புப் பணியிலே ஈடுபடுகின்ற போது, எதிர்கொள்ளுகின்ற சிக்கல்களிலே பலவற்றிற்கு நாம் ஏதாவது மாற்றம் காண முடியும். சிலவற்றை மொழிபெயர்க்க முடியாத தன்மை கொண்டது என்ற வகையில் அடக்கலாம். ஆனால் இவ்விரண்டையும் சீர்தூக்குகின்ற நிலையிலே, மொழி பெயர்ப்புச் சிக்கல்கள் வெற்றி கொள்ளக் கூடியவைகளே என்பதாகத் தான் அமைகிறது. இவ்வாறு மொழிபெயர்ப்புப் பணியிலே சிக்கல்கள் அதிகமாக இருந்தும், அவற்றை நிறைவு செய்து விட முடியும் என்ற நம்பிக்கையில் மொழிபெயர்ப்புப் பணியானது மிகவும் சீரிய முறையில் பன்னெடுங்காலமாகவே நடைபெற்று வந்திருக்கின்றது, இன்றும் வருகின்றது. இதனை நாம மொழிபெயர்ப்பின் தோற்றம், வளர்ச்சி, வரலாறு என்றடிப்படையில் காணலாம்.

14. மேற்படி நூல் ப. 19.
15. ,, ப. 20.

6

மொழிபெயர்ப்பின் தோற்றம், வளர்ச்சி, வரலாறு

மொழிபெயர்ப்புக் கலை பழமை வாய்ந்தது. எல்லா மொழிகளும் முதன் முதலில் பேச்சு வழக்கில் இருந்துதான் பின்னர் எழுத்துலகிற்குக் கொண்டு வரப்பட்டது. பல ஆண்டுகளாக சப்பானியரிடம் பேச்சு வழக்கு மொழியே காணப்பட்டது. கிறிஸ்துவின் பிறப்பிற்குப் பின்னர் முதல் நூற்றாண்டில் தான் அவர்கள் சீன எழுத்து வடிவத்தை ஏற்றுக் கொண்டு எழுதி வந்தனர் என்பதை அறிகிறோம்.

மேற்கத்திய நாகரிகத்தின் சின்னமாக விளங்கிய கிரேக்க நாட்டில் மொழிபெயர்ப்புத் துறையின் இரண்டு அமைப்புகள் தோன்றின. முதன் முதலில் கிரேக்க மொழியிலிருந்து லத்தீன் மொழிக்கு ஹோமருடைய 'ஒடிசியை, லிவியஸ் அன்றோனிக்கஸ் என்பவர் கி. மு. 250-இல் மொழிபெயர்த்தார். லத்தீன் எழுத்தாளர்களில் இருவரான காட்டலஸ், சிசரோ என்பவர்கள் கிரேக்க மொழியிலிருந்து லத்தீனுக்குப் பல நூல்களை மொழிபெயர்த்தனர். ரோமப் பேரரசு தோன்றியவுடன் ஏராளமான நூல்கள் லத்தீனிலிருந்து கிரேக்க மொழிக்குப் பெயர்க்கப்பட்டன.

கிறிஸ்து ஆண்டின் ஆரம்ப காலத்திலே, அதாவது எட்டாவது ஒன்பதாவது நூற்றாண்டுகளிலே அரேபியக் கல்வியின் வளர்ச்சியினால் கிரேக்க மொழியிலிருந்து ஏராளமான மொழிபெயர்ப்புகள் தோன்றின. இது தான் இன்னொரு அமைப்பாகும். பெரும்

பான்மையான அரேபிய அறிவின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தது கிரேக்க அறிவாகும். அவ்வறிவினை அரேபிய மொழிக்குக் கொணர்ந்தது சிரியன் நாட்டைச் சார்ந்த அறிஞர்களாகும். அவர்கள் பாக்தாத் நகரத்தை அடைந்து அங்குக் கிரேக்க அறிஞர்களான அரிஸ்டாட்டில், ப்ளேட்டோ, கேலன், ஹிப்போகிரட்டஸ் போன்றோருடைய படைப்புகளை அரேபிய மொழியிலே பெயர்த்தனர். அவர்களுடைய செயல்பாட்டின் காரணமாகப் பாக்தாத் நகரம் மொழிபெயர்ப்புப் பணியின் நடுநாயகமாக விளங்கியது.

எட்டாம் நூற்றாண்டிலே ஸ்பெயின் நாட்டின் மீது மூரிஷ் படையெடுத்தது. அதன் விளைவாக அரேபிய மொழிப் புத்தகங்களை லத்தீன் மொழிக்கு மொழி பெயர்க்கின்ற ஒரு அமைப்புத் தோன்றியது இந்த அமைப்பில் மொழிபெயர்ப்பு நூல் மீண்டும் மூலமொழிக்கு மாற்றம் செய்யப்பட்டதைக் காண்கிறோம். அதாவது லத்தீன் மொழியிலிருந்து கிரேக்க மொழிக்கும், அங்கிருந்து அரபி மொழிக்கும், மறுபடி லத்தீன் மொழிக்கும் மாற்றம் செய்யப்பட்டது. இம்மாதிரியான மொழிபெயர்ப்புகள் மூலநூலிலிருந்து மிகவும் வேறுபட்டிருந்தது. இருப்பினும் இம்மாதிரியான மொழிபெயர்ப்புகள் இன்றும் நடைபெறுகின்றன. உதாரணமாக அதிகமாக அறியப்படாத மொழியிலிருந்து ஒரு அறியப்பட்ட மொழிக்கு மொழி மாற்றம் செய்யும் பொழுது, இம்மொழிபெயர்ப்பு நூல் மற்ற மொழியினருக்கு மூலநூலாக விளங்குகிறது. இதனால் மொழி மாற்றம் ஏற்படும் பொழுது பல சிக்கல்கள் நேருகின்றன.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் டொலடோ என்னுமிடத்தில் ஜெரோட் ஆப் கிரோமனா என்பவர் மொழிபெயர்ப்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். அவர் தான் மொழிபெயர்ப்பாளர்களின் மூதாதையராக விளங்கினார். அதோடு அவ்வாறே போற்றப்பட்டும் வருகிறார் அவர் பலவகையான அறிவியல் படைப்புகளை கிரேக்க அரபி மொழியிலிருந்து லத்தீன் மொழிக்கு மொழி மாற்றம் செய்தார்.

ஒரு நூற்றாண்டிற்கும் மேலாக அறிஞர் பெருமக்களுக்கு டோலடோ ஒரு முக்கிய நகரமாக விளங்கிற்று. அவ்வறிஞர் பெருமக்களில் ஆங்கிலத் தத்துவ ஞானி அடிலாட் என்பவரும் ஒருவர். அவர் பிரான்சு, ஸ்பெயின், இத்தாலி, வடஆப்பிரிக்கா, ஆசியா

சண்டம் போன்ற இடங்களில் பயின்றுள்ளார். அவருடைய மொழி பெயர்ப்புகளிலே சிறந்ததாகக் கருதப்படுவது யூகிளிட்ஸ் என்பவர் எழுதிய 'எலிமன்ட்ஸ்' என்பதாகும். அதனை அவர் அரபி மொழியிலிருந்து லத்தீன் மொழிக்குப் பெயர்த்தார்.

பன்னிரண்டாம் நூற்றாண்டிலே மொழிபெயர்ப்புக் கலை ஒரு தலைசிறந்த நிலையை அடைந்தது. அப்போது தோன்றிய மொழிபெயர்ப்பு நூல்கள் சமயத்தைச் சார்ந்தவை. மொழி பெயர்ப்பு வரலாற்றிலே, பல மொழிகளிலே மொழி பெயர்க்கப் பட்ட விவிலிய நூல் சிறப்பிடம் பெறுகின்றது. இவ்வகையான மொழிபெயர்ப்புகள் ஒரு மொழியினை அளக்கின்ற கருவியாகப் பயன்படுகின்றன. பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியிலே மார்டின் லூதர் அவர்களால் உயர்ந்த செர்மன் மொழியில் விவிலியமானது மொழிபெயர்க்கப்பட்டது.

இந்தக் காலத்தில் தான் சில மொழிகள் அதிக தாக்கத்திற் குள்ளாகி தூய்மை பெறுகின்ற நிலையை அடைந்தன. அத் தூய்மைப் பணியானது சங்கங்கள் மூலம் நடைபெற்று வந்தது. இம்மாதிரியான சங்கங்கள் மறுமலர்ச்சிக் காலத்தின் பயனாகும். இதில் ஒரு குறிப்பிடத்தகுந்த சங்கத்தின் பெயரானது 'அகாதெமி பிராங்காய் (Academie francaise) என்பதாகும். இது 1635-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இது போன்ற சங்கங்கள் இத்தாலி நாட்டிலும், ஸ்பெயின் நாட்டிலும் தோன்றி, மொழிக்கு ஒரு தரத்தை நிர்ணயித்ததோடு, மொழிபெயர்ப்பாளர்கள் தங்கள் பணியைச் சிறப்பாகப் பணியாற்ற வழிவகை செய்தது. மொழித் தரமோ, தேவையான அளவு அகராதிகள் இல்லாததன் காரண மாகவோ, பலமொழிகளில் இருந்து பெயர்ப்பானது நடை பெறுவது மிகவும் தடைப்பட்டது.

இங்கிலாந்து நாட்டைப் பொறுத்த அளவில், மொழி பெயர்ப்புக் கலை தோன்றியது எலிசபெத் அரசியாரின் ஆட்சிக் காலத்திலாகும். ஆங்கில மொழியில் மட்டுமல்லாது, மற்ற மொழி களிலும் பல நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டன. மொழி பெயர்ப்புப் பணி தொடர்பு கொள்ளுவதற்கான பயிற்சியாகவும், எதிர்நீச்சலிட வைக்கின்ற பணியாகவும் விளங்குகிறது. இருப்பினும் ஹோமருடைய ஒடிசியும், இலியதமும் பல மொழிபெயர்ப்பாளர் களைக் கவர்ந்திழுத்து மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபடச் செய்தது. பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிரேக்க,

லத்தீன், பிரெஞ்சு, இத்தாலி, ஸ்பானிஷ் ஆகிய மொழிகளிலிருந்து மொழிபெயர்ப்புகள் செய்யப்பட்டன.

பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டுகளில், மூலநூலுக்கும் மொழிபெயர்ப்பு தோன்றிய காலத்திற்கும் இடைவெளி குறைந்திருந்தது. ஆனால் இன்றைய சிறந்த படைப்புகள் ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கப்படக் காலம் அதிகமாகத் தேவைப்படுகிறது. அதற்குச் சான்றாக 1580ஆம் ஆண்டில் பிரெஞ்சு மொழியில் மாண்டேயின் எழுதிய 'கட்டுரைகள்' (Essays) என்ற நூல் 1603-ஆம் ஆண்டிலேயே பெயர்க்கப்பட்டது, குறிப்பிடத் தக்கது. ஸ்பானிஷ் மொழியில் செர்வான்டிஸ் என்பவர் எழுதிய 'டான் க்யூக்ஸாட்' (Don Quixote), தாமஸ் செல்டன் என்பவரால் ஆங்கில மொழியில் ஏழாண்டுகளுக்குப் பிறகு மொழிபெயர்க்கப் பட்டது.

பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில், கிரேக்க இலத்தீன் இலக்கியங்கள் மொழி பெயர்ப்பாளர்களைக் கவர்ந்தன. ஜான் டிரைடனுடைய ஜீவனல் (Juvenal 1673), வெர்ஜில் (Virgil 1677) மொழிபெயர்ப்புகள் இம்மாதிரியான அமைப்பில் அடங்கும். இம் மாதிரியான மொழிபெயர்ப்பு நூல்களின் முன்னுரையில் மொழி பெயர்ப்புப் பணியின் உத்திகள் மிகவும் நல்ல முறையிலே விளக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் 1684-ஆம் ஆண்டில் லண்டனில் ரோஸ்காமன் என்பவர் எழுதிய "மொழி பெயர்க்கப்பட்ட செய்யுள்களைப் பற்றிய ஒரு கட்டுரை" என்ற நூல் சான்றாக அமைகின்றது.

பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த அலெக்ஸாண்டர் போப்பும், வில்லியம் கூப்பரினுடைய மொழி பெயர்ப்புகள் முறையே ஓடிசியும், இலியதமும் ஆகும். இந்நூற்றாண்டிலே தான் ஜே. எச் வாஸ் என்பவரின் செர்மன் மொழிபெயர்ப்பு உருவாயிற்று.

சேக்ஸ்பியர் நாடகத்தினைச் செர்மனியில் மொழிபெயர்த்த அகஸ்ட் வில்ஹாமும், செர்மன் மொழியில் டான் க்விக்ஸாட்டையும், மற்றும் எல்சபெத் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த நாடகாசிரியர்களின் பல படைப்புகளை மொழி பெயர்த்த ஜோஹனும் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியையும் 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியையும் சார்ந்தவர்கள். அலெக்ஸாண்டர் பிரேஸர் என்பார் 1790-இல் வுட்ஹவுஸ்லீ பிரபுவின் 'மொழி பெயர்ப்புக்

கொள்கை பற்றிய கட்டுரையை மொழிபெயர்த்தார். அது நல்ல மொழி பெயர்ப்புக்கு ஒரு சான்றாகும். அலெக்ஸாண்டர் பிரேஸர் தான் ஒரு நல்ல மொழிபெயர்ப்பு எங்ஙனம் விளங்க வேண்டு மென்று விளக்கம் கொடுத்தவராவார். நல்ல மொழிபெயர்ப் பென்பது மூலமொழியைப் பேசுகின்றவர்கள் தங்கள் மொழி களிலே எழுதப்பட்டுள்ள நூலினைப் படிக்கும் போது எந்த உணர்வைப் பெறுவார்களோ, அதே போன்று பிறமொழியினர் அதைப் படிக்கும் போது அவ்வுணர்வினைப் பெற வேண்டும். மேலே குறிப்பிட்ட நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட இலக்கியங்களின் பட்டியல்களைக் கூறிச் செல்கின்றது என்பதும் மிகவும் குறிப்பிடத்தகுந்ததாகும்.

பழைய ஓலைச் சுவடிகளையோ, ஆவணங்களையோ கண்டு பிடிப்பதிலே, மொழிபெயர்ப்பாளர்கள், சில சமயங்களில் ஈடுபடு கிறார்கள். இப்பணி மொழிபெயர்ப்பாளர்களைப் பொது மக்களிடத்து ஈர்க்கின்றது.

முந்தைய நூற்றாண்டுகளை விடப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கில மொழியில் அதிகமான படைப்புக்கள் மொழிபெயர்க்கப்பட்டன. உலக நாடுகளிடையே இந்தக் கால கட்டத்தில் பல கிறித்துவச் சமய அமைப்புகள் தோன்றலாயின. அதனுடைய பணி விவிலிய நூலின் முழுமையையோ, பகுதி யையோ பல மொழிகளிலும், வட்டார வழக்குகளிலும் மொழி பெயர்க்க வேண்டுமென்பதே ஆகும். மொழி சம்பந்தப்பட்ட அளவிலே சமயப்பணி ஆற்றுகின்ற சங்கங்களின் செயலானது குறிப்பிடத் தகுந்தது. குறிப்பாகச் சீன, சப்பானிய மொழிகளிலே பல (மொழி பெயர்ப்புகள்) பாதிரிமார்களால் படைக்கப்பட்டன உலகத்தின் பல பாகங்களிலே இம்மாதிரியான படைப்புகள் இன்றளவும் உருவாக்கப்பட்டு வருகின்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இலக்கிய உலகிலே, இணையற்ற மொழிபெயர்ப்பாளராகத் தாமஸ் கார்லைல் ஏற்றம் பெற்றார். 1822-ஆம் ஆண்டில் அவர் கதேயின் 'வில்ஹெம் மெய்ஸ்டர்' என்ற நூலினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இந்நூற்றாண்டில் பல கவிஞர்கள் மொழி பெயர்ப்புப் பணியிலே ஈடுபட்டனர்.

உதாரணமாக ஷெல்லி, பைரன், லாங்பெலோ இவர்களைச் சுட்டலாம். உமர் கய்யாமின் ரூபயத்தை 'எட்வர்ட் பிட்ஸ்ஜரால்ட்

என்பவர் மொழிபெயர்த்தார். 1861 - இல் மாத்யூ ஆர்னால்டு 'ஹோமரை மொழிபெயர்ப்பதைப் பற்றிய கட்டுரை' ஒன்றை எழுதினார். அது பத்தொன்பதாம் நூற்றாண்டின் மொழி பெயர்ப்பைப் பற்றிய கருத்து விளக்கமாக அமைந்தது.

முதல் வாசகர்களை மூலம் எவ்வாறு பாதித்திருக்குமோ அவ்விதமே மொழிபெயர்ப்பு நம்மைப் பாதிக்க வேண்டும் என்று மொழிபெயர்ப்பிற்கு விளக்கமளிக்கிறார் மாத்யூ ஆர்னால்டு.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவில் பல மொழிகளி லிருந்தும் உள்ள படைப்புகள் ஆங்கில மொழிக்கு மாற்றம் செய் யப்பட்டன. அம்மொழிகள் ஆங்கிலேயர்கள் அறியாதவையா யிருந்தன. ஹங்கேரி மொழி ஆசிரியர் எம். ஜோகாய் பல நாவல்களை மொழிபெயர்த்துள்ளார். இச்சமயத்தில் தான் ரஷ்ய மொழியில் அமைந்த இலக்கியம் மூலநூலிலிருந்து, பிரெஞ்சு மொழியின் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நிலையில் ஸ்கேண்டனேவிய எழுத்தாளர்களின் படைப்புகள், செர்மன் நாட்டு மொழிபெயர்ப்பாளர்களின் கவனத்தை ஈர்த்தன. இந் நேரத்தில் நெதர்லாண்ட்ஸ், செக்கோஸ்லோவாக்கியா போன்ற ஐரோப்பிய இலக்கியங்களில் சிலவற்றை மொழிபெயர்ப்பாளர்கள் புறக்கணிக்கின்ற நிலை ஏற்பட்டது. இப்பொழுது பல பதிப்பாளர் களின் முயற்சியால் மேற்கூறிய நிலை மாற்றம் பெற்று வருகிறது

இருப்பினும் இக்கால கட்டத்தில் மொழிபெயர்ப்பு தன் கவர்ச்சியை இழந்து விடவில்லை. போருக்குப் பின் ஏற்பட்ட விரும்பத் தக்க நிகழ்ச்சி, உதிர்ந்து போன நிலைமையிலிருந்த சுவடி களைக் கண்டுபிடித்ததேயாகும். 1947-இல் கோடைக் காலம் ஆரம்பமாகின்ற வேளையிலே ஒரு அரேபிய ஆட்டிடையன் இறப்புக் கடலின் அருகே பழமையான சுவடிகளைக் கண்டெடுத் தான். கிறிஸ்துவின் காலத்திற்கு முன்னும், அவர் காலத்திலேயும் இவை யூதபாதிரிமார்களுடைய நூலகத்தில் இருந்தது. இதன் பிற்பாடு, ஏராளமான சுவடிகள் கண்டுபிடிக்கப்பட்டு, அதன் விளைவாக யூதர்கள் 'இனவாதத்தை அறியும் வாய்ப்பு ஏற்பட்டது.

மொழிபெயர்ப்பாளர், கல்வெட்டு ஆராய்ச்சியாளர், மொழி யியலாளர், இவர்கள் 'Linear B' என்ற ஒன்றைக் கண்டுபிடித் தனர். மைக்கேல் வென்றிஸ்' என்ற இங்கிலாந்தைச் சேர்ந்த கட் டிட நிபுணர் 'Linear B' என்ற ஒரு மொழி வடிவத்தைக் கண்டு

பிடித்தார். மேற்கூறிய வடிவம் கிரேக்க மொழியின் வடிவமாகத் திகழ்ந்தது. இது கல்வெட்டு ஆராய்ச்சியில் மிகப் பெரிய கண்டு பிடிப்பாகத் திகழ்ந்து, கிரேக்க, கிரடானின் முந்தைய வரலாற் றைப் பற்றிய கருத்தை மாற்றி அமைத்தது. இக்கண்டுபிடிப்பு ஹோமாருக்கு முன்பே ஒரு பழமையான நாகரிகம் இருந்ததாகவும், வெகு காலத்திற்கு முந்திய பழைய எழுத்து மொழியை வெளிக் காட்டியதாகவும் தெரிகின்றது. இந்நிகழ்ச்சியும் ஒரு கடினமான துப்பறியும் கதை என்றளவில், மொழியியல், மொழிபெயர்ப்பு முதற்கொண்டு, பல்வேறு துறை அறிவையும் இணைத்து நின்றது.

இரண்டாவது உலகப் போருக்குப் பின், மொழிபெயர்ப்புப் பணி மிகவும் சீரிய முறையிலே வளர்ந்தோங்கியது என்பதைப் புத்தக வெளியீட்டாளர்களின் அட்டவணையில் இருந்து தெரிந்து கொள்கிறோம். பலநாடுகள், இலக்கிய மொழிபெயர்ப்புக்கென்று வருடாந்தரப் பரிசுகளைக் கொடுத்து உற்சாகப்படுத்தி வருகின்றது. இதேநேரத்தில் 'விஞ்ஞான தொழில் நுட்ப மொழிபெயர்ப்பு களும் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்ற நிலையைக் காண்கிறோம். அதிலும் குறிப்பாக ரஷ்ய, சீன தொழில் நுட்பப் பத்திரிகைகளை முழுவதுமாக ஆங்கிலத்தில் பெயர்க்கின்ற பணி நடைபெற்று வருகின்றது. உலகத்தில் தலைசிறந்த இலக்கியங்களை மிகவும் குறைந்த விலைக்கு ஆங்கிலேயர்கள் வாங்கிப் பயனடைய வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன. அகிலஸ், பல்சாக், சீசர், செக்கோவ், தாந்தே, டாஸ்டோவெஸ்கி, ப்ளாபர்ட், ஹோமர், இப்சன், மாப்பசாந்த், மாண்டேயின், ப்ளேட்டோ, டால்ஸ்டாய் போன்றவர்களின் படைப்புகள் இவ்வகையில் கிடைக்கின்றன.

மேற்கூறிய வகையிலே ஜார்ஜ் சிமெனான், ப்ராங்காய் சாகன் போன்றவர்களின் புகழ்பெற்ற புதினங்கள் மிக அருமையான முறையில் மொழிபெயர்க்கப்பட்டு மிகவும் குறைந்த விலைக்குக் கிடைக்கின்றன. மொழிபெயர்ப்பு மிகவும் புகழ் பெறுவதற்கு, மக்களிடையே தொடர்பை ஏற்படுத்துகின்ற தொடர்பு சாதனங் களான வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி இவைகளின் பங்கும் குறிப்பிடத் தகுந்தது. இன்று எல்லா நாட்டாராலும் போற்றப்பட்டு மொழிபெயர்ப்பு பல துறைகளிலும் தன் ஆளுமையைச் செலுத்தி வருவதைக் காணலாம.

மேற்கூறிய வகையிலே மொழிபெயர்ப்பின் பொதுவான வளர்ச்சி நிலை அமைந்திருக்கின்றது. ஆனால் தமிழ் மொழியைப்

பொறுத்த அளவில் மொழிபெயர்ப்பின் தோற்றம், வளர்ச்சி என்ன என்பதை நாம் இங்கே சற்றுச் சுருக்கமாகக் காண்போம்.

தமிழ் மொழிபெயர்ப்பின் வரலாறு, வளர்ச்சி பற்றி நாம் சிந்திப்பதற்கு முன்பாக, பொதுவாக மொழியின் வரலாற்றைப் பற்றி சிந்திப்பது மிகவும் பயனளிக்கும். மொழி என்பது எப்பொழுது தோன்றியிருக்க வேண்டும்? மனிதன் தன் எண்ணங்களை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற தீவிரம் இதன் அடிப்படையாகக் கூட இருக்கலாம். இதன் பிற்பாடு சொற்றொடர், வாக்கியம் என்ற நிலையில் அமைந்திருக்க வேண்டும். மேற்கூறிய கருத்துகள் எல்லா மொழிகளுக்கும் பொருந்தக் கூடிய ஒன்றாக அமைகிறது.

மொழிபெயர்ப்பு என்று நாம் பேசுவது 'சொல்' என்ற அடிப்படைநிலையில் தான் முதலில் அது அமைந்திருக்க வேண்டும். கிரேக்க, உரோம, தமிழ் அல்லது பிற்காலத்தில் தோன்றிய ஆங்கில மொழியாக இருந்தாலும், இந்நிலை தான். நம் தமிழ் மொழியைப் பொறுத்த அளவில், 'தொல்காப்பியம்' தான் முதல் நூலாக, இலக்கண நூலாக விளங்குகிறது. ஆனால் அதற்கு முன்பே இலக்கிய நூல்கள் பல இருந்திருத்தல் வேண்டும். தொல்காப்பியத்தில் மொழியின் பிறப்பைப் பற்றிப் பேசினாலும் இலக்கிய நூல்களுக்கும் இலக்கணம் வகுத்துள்ளமை யாவரும் அறிந்ததே.

மேற்கூறிய வகையிலே இலக்கிய நூல்கள் சீரும் சிறப்பும் பெற்றிருந்ததால், இலக்கியத்தில் வழங்குகின்ற மொழியும் சிறப்பிடம் பெற்றிருக்க வேண்டும். இவ்வகையில் நோக்கும் போது மொழி பெயர்ப்பும் சீரும் சிறப்பும் பெற்றுத்தான் விளங்கியிருக்க வேண்டும். ஆனால் அதற்கான சான்றுகள் நமக்குக் கிடைக்க வில்லை. தொல்காப்பியத்தில் மரபியலில் நூலைப் பற்றிக் கூற வந்த தொல்காப்பியர் வழி நூலின் வகையாக,

> "தொகுத்தல், விரித்தல், தொகை விரி மொழிபெயர்த்து
> அதர்ப்பட யாத்தலொடு அனை மரபினவே"

என்று சுட்டியுள்ளார். 'மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல்' என்பது பொதுவாக 'மொழிபெயர்ப்பினைப் பற்றிச் சுட்டுகின்றது'. மொழிபெயர்ப்பின் முதல் நிலை எந்த வகையில் அமைந்திருந்தது என்று நாம் எண்ணும் போது அதற்கான விடை

> "வட சொல் கிளவி வடவெழுத் தொரீஇ
> எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே"

என்ற சூத்திரத்தில் அடங்கியுள்ளது. அதோடு மொழிபெயர்ப்பு எந்த மொழியிலிருந்து ஏற்பட்டது என்பதை அறியவும், எவ்வாறு அமைய வேண்டும் என்ற நிலையிலும்

"இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல்
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே"

என்றசூத்திரம் விளக்கமளிக்கிறது. இயற்சொல், திரிசொல், வடசொல் எனக் குறிப்பிட்டு இருப்பதால் முதலில் தமிழில் புகுந்தது வட சொல் எனவும் இலக்கணம் கூறும் அளவிற்கு இருந்திருக்கிறது எனவும் உணர்தலுக்கு வாய்ப்பிருக்கிறது.

மேற்கூறிய செய்தியிலிருந்து தொல்காப்பியம் கலப்பிற்கு இடம் கொடுத்தமைத் தெளிவாகத் தெரிகிறது. சான்றாகச் சூத்திரம், காண்டிகை, சந்தநலம், உத்தி, நரை, இவை அமைகின்றன.

மேலே கூறிய செய்திகளைத் தொல்காப்பியர் கால மொழிபெயர்ப்பு என்றும், அதன்பின் சங்க காலத்திலே மொழிபெயர்ப்பின் நிலை என்ன என்றும், அதன் பிற்பாடு சங்கம் மருவிய காலம் என்றும் அமைத்துக் கொள்வது நல்லது. மேற்கூறிய பகுப்பு ஐந்தாம் நூற்றாண்டு வரையிலான மொழிபெயர்ப்புப் பணியினை விளக்கி நிற்கின்றது.

'சொல்' அளவிலே நடைபெற்ற மொழிபெயர்ப்புப் பணி சங்ககாலத்திலே, பிறமொழிக் கதைகள் இடம் பெறுகின்ற அளவிலே வளர்ச்சி பெற்றது. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, புறநானூறு, பட்டினப்பாலை முதலிய நூல்களில் பிறமொழிக் கதைகளும், பிறமொழிச் சொற்களும் இடம்பெற்றன. சான்றாகச் சீதையின் அணிகலன்களைக் குரங்குகள் எடுத்துத் தவறாக அணிந்து கொண்டமையைப் புறநானூற்றுப் பாடல் ஒன்று குறிக்கின்றது. சங்ககால மொழிபெயர்ப்புப்பணி இந்நிலையிலே அமைந்திருந்தது

அதன் பிற்பாடு சங்கம் மருவிய காலத்தில் சமணர்களின் வருகையின் காரணமாக 'இன்பம் நிலையற்றது' என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது.

இக்கால கட்டத்தில் தான் சமய, மத அடிப்படையில் ஒரு எழுச்சி ஏற்பட்டது. சமண, பௌத்த, சைவ, வைணவ மதங்களிடையே போட்டி மிகுதியாக இருந்தது. தங்கள் கருத்துகளை வலியுறுத்திக் கூறுவதற்காக, குறிப்பாகச் சமண சமயம் வடமொழிக் கலப்பில் பெரும் பங்கு பெற்றது.

குறள் ஆகுலம், பாக்கியம், நான்மணிக்கடிகையில் காலேயம் என்பனபோன்ற நாலடியாரில் ஞானம், அஞ்ஞானம் என்ற சொற்களும் இடம் பெற்றிருந்தமையை உணரலாம்.

இவ்வாறு தொல்காப்பியர் காலத்தில் சொல் நிலையிலும், சங்க காலத்தில் 'சொல்' 'கதை' நிலையிலும், சங்கம் மருவிய காலத்தில் 'சொல்', 'கதை', கருத்து போன்ற நிலையிலும் மொழி பெயர்ப்பு இடம் பெறுகின்றது.

கி. பி. ஐந்தாம் நூற்றாண்டுவரை சிறுசிறு குறிப்புகளாக அமைந்த மொழிபெயர்ப்புப் பணி, அதன் பிற்பாடுதான் நூல் வடிவில் தன் பணியினை வெளிக் கொணர்ந்தது.

வடமொழி, பாலி, பிராகிருதம் போன்ற மொழிகளிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்டன. இந்தக் காலகட்டத்தில் தான் 'மணிப்பிரவாள நடை' தோன்றிச்சிரும் சிறப்பும் பெற்றது. மணிப்பிரவாள நடை என்பது வடமொழி, தமிழ் இவைகளின் கலப்பினால் உண்டானது என்பது எல்லோரும் அறிந்த ஒன்று.

சமய மறுமலர்ச்சிக் காலமான கி. பி. ஏழாம் நூற்றாண்டிலே வடமொழியின் செல்வாக்கு தமிழகத்திலே ஓங்கியது. அந்தக் காலகட்டத் தில் வடமொழி கலந்து எழுதுவதே சிறப்பு என்று கருதப்பட்டது.

இதற்குப் பிறகு தான் புராணக் கூறுகள், கதைகள் மொழி பெயர்ப்பாக அமைந்தன. இது காவியங்கள் தோன்றுவதற்கு வழி வகையாக அமைந்தது.

மொழிபெயர்ப்பு நூல்கள் பெரும்பாலும் தழுவல்களாக அமைந்தன. இந்நிலையில் நாம் நோக்கும் போது, தமிழ் மொழியைப் பொறுத்த அளவில் இராமாயணக் கதை பெரும் செல்வாக்கினை ஏற்படுத்தியது என்றால் அதில் ஐயமில்லை. கம்பனுடைய காலத்தை அடிப்படையாக வைத்து நாம் மொழிபெயர்ப்பின் நிலை என்ன என்று நோக்கும் போது, சிலப்பதிகாரம், பரிபாடல் திருஞானசம்பந்தர் பதிகம் போன்றவைகளில் இராமாயணக் கதைகள் இடம் பெற்றன. பக்தி இலக்கியங்களில் மகாபாரதக் கதைகளைவிட இராமாயணக் கதைகள் மிகுதியாக இடம் பெற்றுள்ளதாகத் தோன்றுகிறது.

மகாபாரதக் கதையில் மிக முக்கிய பகுதியாக விளங்கும் 'பகவத் கீதை' அதிகமான மொழிகளில் மிகச் சிறந்த முறையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

பொதுவாக பதினான்காம் நூற்றாண்டு முதல் 19 ஆம் நூற்றாண்டு வரை மொழிபெயர்ப்பு நிலையில் புராணங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. பெரும்பான்மையான புராணங்கள் வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டன. 16-ஆம் நூற்றாண்டில் தான் பெரும் அளவில் மொழிபெயர்ப்புகள் எழுந்தன. புராணங்களில் 'தல புராணங்கள்' தான் அதிக அளவில் மொழிபெயர்க்கப்பட்டன.

பதினெட்டாம் நூற்றாண்டில் அதாவது 1774-இல் பைபிளை ஜெ. பி. பாப்ரிஷியஸ் என்பவர் மொழிபெயர்த்தார். இந்தியாவில், முதன் முதலில் தமிழில் தான் பைபிள் மொழிபெயர்க்கப்பட்டது.

மேற்கூறிய நிலைக்குக் காரணமாக அமைந்தது அரசியல் மாற்றம் என்று சொல்வதில் மிகையேதுமில்லை. இந்தியாவிற்கு வியாபார நோக்கத்தோடு வந்து ஆட்சி பீடத்தைக் கைப்பற்றிய ஆங்கிலேயர்கள் தங்கள் சமயக் கொள்கைகளைப் பரப்பவேண்டுமென்ற நோக்கத்தோடு தமிழ் மொழியைக் கற்க முனைந்தனர். இது மொழிபெயர்ப்புப் பணிக்கு வழிவகையாக அமைந்தது. ஆங்கிலேயர்களின் வருகைக்குப் பிறகுதான், இலக்கியங்களுக்கிடையே புதிய வகைகள் தோன்றி இடம் பெறலாயின. புதினம் அதில் குறிப்பிடத்தகுந்த இடத்தைப் பெற்று இங்கே முகிழ்த்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சேக்ஸ்பியர் நாடகங்கள் மொழிபெயர்க்கப் பெறுகின்ற பேற்றினைப் பெற்றது. 1870-ல் திரு. விஸ்வநாத பிள்ளை என்பவர் "Merchant of Venice" என்ற நாடகத்தை "வெனிஸ் வர்த்தகன்" என்ற தலைப்பிலே மொழி பெயர்த்துள்ளார். இந்தக் கால கட்டத்தில் தான், பராத்தி மூலத்திலிருந்து பஞ்ச தந்திரக் கதைகளை வீரமார்த்தாண்ட தேவர் மிகவும் அருமையாகக் கவிதை வடிவில் மொழி பெயர்த்துள்ளார்.

சுதந்திரத்திற்குப் பிறகு பல உலக இலக்கிய நூல்கள் தமிழில் பெயர்க்கப்பட்டு வாசகர்களிடையே ஓர் ஆர்வத்தைத் தூண்டியது மொழிபெயர்ப்பின் நிலையாக அமைகிறது. "பிளேட்டோ

மற்றும் பங்கிம் சந்திரர், ரவீந்திரநாத தாகூர், பிரேம்சந்த், சரத்சந்திர சட்டர்ஜி, வி. ஸி. காண்டேகர் முதலியவர்களுடைய நூல்கள் தமிழில் மளமளவென்று இலாபத்தைக் கருதாமல் மொழி பெயர்க்கப் பெற்றுத் தமிழ் இலக்கியத்திற்கு வலிமை தந்தன. பொதுவாக பல அரசாங்க நிறுவனங்கள் மொழிபெயர்ப்புப் பணியிலே ஈடுபட்டன. இந்தியாவில் சாகித்திய அகாதெமி நிறுவனம் இப்பணியிலே ஈடுபட்டு வருகின்றது.

இவ்வாறாக தமிழில் மொழிபெயர்ப்பின் நிலை அமைகின்றது. இன்றளவும் இத்துறை மிகவும் பலராலும் போற்றப்பட்டு வருகின்றது. நம் தமிழக அரசு மொழிபெயர்ப்புக்கென்று தனித் துறை அமைத்து, மொழிபெயர்ப்புப் பணியை சீரிய முறையிலே நடத்தி வருகின்றது.

துணை நூற் பட்டியல்

நூல்

1. 'இரு மொழி இலக்கிய இன்பம்'; எஸ். என். ஸ்ரீஇராம தேசிகன்; வானதி பதிப்பகம், தி. நகர், சென்னை-17, 1981.
2. 'கல்விக் கட்டுரைகள்', அருள் தந்தை இ. குழந்தைஅரசு, சேகர் பதிப்பகம், 66, பெரியார் தெரு, எம். ஜி. ஆர். நகர், சென்னை-83, 1976,
3. 'திராவிட மொழி இலக்கியங்கள்,' ச. வே. சுப்பிரமணியன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டி. டி. டி. ஐ அஞ்சல்; தரமணி, சென்னை-113, 1983
4. 'மொழித் திறன்களும் சில சிக்கல்களும்'; மு. கோவிந்தராஜன், தேன் மொழிப் பதிப்பகம், சென்னை-1980.
5. மொழிபெயர்ப்பு பண்பும் பயனும்; வளர்மதி பதிப்பகம், சென்னை-78, 1984.
6. 'வளரும் தமிழ்,' சோமலெ; பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1, மூன்றாம் பதிப்பு 1968,

கட்டுரைகள்

1. 'அறிவியல் தமிழ்'; ஜி. ஆர். தாமோதரன்; ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு கருத்தரங்கு ஆய்வுக் கட்டுரைகள், மூன்றாம் தொகுதி, மதுரை, 1981, ப 450

2. 'இலங்கை இந்தியத் தமிழ் கலைச் சொல்லாக்க முறைகளும் அடிப்படை வேறுபாடுகளும்'; கணபதிப்பிள்ளை நவசோதி (நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டு நிகழ்ச்சிகள்—முதலாம் தொகுதி) அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம், இலங்கை, கொழும்பு-7, 1974 ப 332.

3. 'கலைச் சொல்லாக்கம்'; கா. பொ. ரத்தினம்; (இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு நிகழ்ச்சிகள்—மூன்றாம் தொகுதி) உலகத் தமிழாராய்ச்சி மன்றம், தமிழகம், சென்னை—34, 1971, ப 222.

4. 'கலைச் சொல்லாக்க முயற்சி—இதுவரை'; இராதா செல்லப்பன்; (தமிழ்க்கலை— தமிழியல் காலாண்டு ஆய்விதழ்) தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர், செப்டம்பர் 1983, ப. 59.

5. 'தமிழில் கலைச் சொல்லாக்க முயற்சிகள்'; இராம சுந்தரம்; (தமிழ்க் கலை—தமிழியல் காலாண்டு ஆய்விதழ்), தமிழ்ப் பல் கலைக் கழகம், தஞ்சாவூர், மார்ச் 1983, ப. 84.

6. தமிழில் சட்ட மொழிபெயர்ப்பிலுள்ள சிக்கல்கள்'; கு. செல்வச்சந்திரன்; (நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்ச்சிகள்—முதல் தொகுதி) அனைத்துலகத்தமிழாராய்ச்சி மன்றம், கொழும்பு-7, 1974, ப. 340.

